
KALKI
24.4.94 ரூ. 3.00
ாலக்காடு சிறப்பிதழ்

# கல்கி



## திகைக்கச் செய்த திருவிழா!

# பாலக்காட்டுப் பிரமுகர்கள்!

(வாசகர் தகவல்களின் அடிப்படையில்)



* எம். ஜி. ஆர்.



* நம்பூதிரி பாட்
(கம்யூனிஸ்ட்
தலைவர்)



* செம்பை வைத்திய
நாதய்யர் (பாடகர்)



* பாலக்காடு மணி
ஐயர் (மிருதங்க
வித்வான்)



* எம். எஸ். விஸ்வநாதன்
(இசையமைப்பாளர்)



* விதுபாலா
(நடிகை)



* பாலக்காடு ரகு
(மிருதங்க வித்வான்)



* மது அம்பாட்
(ஒளிப்பதிவாளர்)



* கே. எஸ். நாராயணசாமி
(வீணை வித்வான்)




* டி. என். சேஷன்
(தேர்தல் கமிஷனர்)



* பி. வி. ஆர்
(எழுத்தாளர்)



* உண்ணிகிருஷ்ணன்
(பாடகர்)



* கே. வி. நாராயண
சாமி (பாடகர்)



* ஷோபனா (நடிகை)



* சேதுமாதவன்
(இயக்குநர்)



* கீரன் (சமய
சொற்பொழிவாளர்)

# தரவாடு.....

பாலக்காட்டின் புராதனச் சின்னங்
கஞள் இங்குள்ள மிகப்பழங்கால வீடுகளும்
குறிப்பிடும்படியானவை. இவ்வகை வீடு
களைத் 'தரவாடு' என்கிறார்கள். இவை
பெரும்பாலும் நாயர் சமூகத்தினருடையதாய்
இருக்கின்றன. நவீன கட்டடங்களுக்காகச்
சில தரவாடுகள் பலியாகிவிட்டாலும், தத்த
மங்கலத்தில் நானூறு வருடப் பழமையான
தரவாடு ஒன்று உள்ளது. - 'பரக்காட் இல்லம்'
இதன் பெயர்.

இதில் புனர்கட்டுமானங்கள் செய்யப்பட
வில்லை. அதது, அன்று எப்படிக் கட்டப்பட்டதோ
அவ்வண்ணமே இன்றும் உள்ளன. ''மாற்றிக் கட்டி
னாலோ, இடித்தாலோ குடும்பத்தின் ஐஸ்வர்யம்
போய்விடும்'' என்கின்றனர், தத்தமங்கலத் தரவாட்
டினர்.

இவர்களின் குடும்பம் சுமார் ஆயிரம் ஆண்டு
களாய் இருந்து வருவது. இதன் உறுப்பினர் அத்தனை
பேருக்கும் பொதுவானது இத்தரவாடு.


குட்டி குட்டி இருட்டு அறைகளும், நீள நீளத்
தாழ்வாரங்களும், மர உத்திரங்களும், நெற்களஞ்சிய
மும், காஞ்சிபுரம் காமாட்சி கோயிலிலிருந்து வந்த

• தரவாட்டில் ஒரு பாட்டி...



# எம்.ஜி.ஆர். வீடு!

எம். ஜி. ஆர். கேரளாக்
காரர் - யாவரும் அறிந்த விஷ
யம். பாலக்காட்டுக்குப் பக்கத்
தில் சித்தூர் ரூட்டில் உள்ள
'நெல்லேப் பள்ளி' - அவர் வாழ்ந்த கிராமம். அவர் வாழ்ந்த வீடு இன்னும்
இருக்கிறது. அவரது உறவினர்கள் இருக்கிறார்கள். அந்தக் காலத்து
வாட்கள், வட்டமேசைகள் சுவரலங்காரங்கள் எல்லாம் அப்படி அப்படியே
இருக்கின்றன. எம். ஜி. ஆரின் ஒன்றுவிட்ட சகோதரர் சுபாஷ் சந்திரன்
இருக்கிறார்.





ஸ்ரீ சக்ரமும் தூங்கா விளக்கும் கொண்ட ஒரு சின்ன கோவிலும் ராமாயண மகா பாரத ஓலைச் சுவடிகளும் கூட இதனுள் ளேயே இருக்கின்றன!

வாசலில் பெரும் நீளமும் அகலமு மாக ஒரு கல் திண்ணை. அது ஆண்கள் ராஜாங்கத்துக்காக. குடும்பத் தலைவர் அங்கேதான் அமர்ந்திருப்பாராம். கண் டிப்பாகப் பெண்கள் அங்கே வரக்கூடா தென்பது ரூல்!

காமாட்சியம்மன் சந்நிதியின் அடி யில் நிறைய செல்வங்கள் இருப்பதாகச் சொல்கிறார்கள். குடும்பம் முழுக்க வறுமை பிடித்து சிரமப்படும் காலத்தில் அச்செல்வம் உபயோகத்துக்கு வரும் என் கிறார்கள்!

வாசகர் தகவல் : சந்தோஷ்

* 'டாம்' உண்டாக்கும் லக்ஷ்மி...



# 'டாம்' தயாரிப்போமா?


'டாம்' உண்டாக்கி' விற்பது கல் பாத்தி அக்ரஹாரங்களில் இன்று சகஜமாக நடந்து வரும் தொழில். ஆனால் வடகம், (வடாம் - இதைத்தான் 'டாம்' என்று வேகத் தமிழில் 'வ' விழுங்கிச் சொல்கிறார்கள்.) வற்றல் செய்வது முன்போல் கடினமான தொழில் இல்லை.

''கொஞ்சமாக உண்டாக்கணும்னா வீட்லயே மாவு அரைக்க இன்டிக்குவோம். நிறைய உண்டாக்கணும்னா, ரெடிமேட் பவுடர், கடையில் கிடைக்கும்... அதை வாங்கிக் கலக்கி என்ஞ சேர்த்து எழுத வேண்டியது...'' என்கிறார் லக்ஷ்மி.

மரச்சீனி கிழங்கைக் கொண்டு தயாரிக்கும் அப்பளம் இப்பகுதியின் ஸ்பெஷாலிடி. தவிர, சுற்று வட்டாரக் குளங்களிலிருந்து கிடைக்கும் தாமரைத் தண்டை வாங்கி உப்பு, புளி, மிளகாய் சேர்த்து வற்றல் தயாரிக்கிறார்கள்.

முழுமூச்சுடன் 'டாம்' உண்டாக்கினால், குடும்பத்துக்கு அபரிமிதமான உபரி வருமானம் கிடைக்கும். வெறும் பொழுதுபோக்குக்காகச் செய்து பாக்கெட் மணியில் திருப்தி அடைபவர்களும் உண்டு.

வாசகர் தகவல் : வெ. நீலகண்டன்,
இந்திரா, சுதா



* எம். ஜி. ஆர். வீடு

அக்கால கொச்சி அரசரால் 'மன்னாடி யர்' என்கிற பட்டம் எம். ஜி. ஆர். குடும் த்திற்கு வழங்கப்பட்டிருக்கிறதாம். (இதைக் ான் மன்றாடியார் என்று இன்னும் பலர் கூறிக் கொண்டிருக்கிறார்கள்.)

பழங்கால மன்னர்கள் வீடு போன்ற தோற் றம். நந்தவனம், பின்புறம் ஒரு சிறிய கோவில், (சினிமா செட் மாதிரியே) அலங்கார விளக்கு கள் என்று வித்தியாசத் தோற்றம் தருகிறது எம். ஜி. ஆர். வீடு. கேரளாவின் பாரம்பரியக் கலை நிகழ்ச்சிகளையெல்லாம் இன்றும் மறக்காமல் அவ்வப்போது நிகழ்த்தி வருகின்றனர் இக் குடும்பத்தினர்!

வாசகர் தகவல் : சுதா



● கொல்லங்கோடு ராணிகளின் அரண்மனை.....

# ராணிகளின் அரண்மனை!

மலையாள சரித்திரக் கதைகளில் கொல்லங்கோட்டு சமஸ்தானமும், அதன் ராஜாக்களும், இளவரசிகளும் அடிக்கடி வருவார்கள். தமிழிலும் சுந்தர ராமசாமியின் 'ஜே.ஜே. சில குறிப்பு'களில் கொல்லங்கோட்டு இளவரசி உம்மிணிக்குட்டி பற்றி ஒரு குறிப்பு போகிற போக்கில் சொல்லிப் போகப்பட்டிருக்கிறது. இத்தகு பெருமை வாய்ந்த கொல்லங்கோட்டு அரண்மனைக்குள் நுழைந்து பார்க்க ஆவல் இருக்காதா என்ன?

ஆனால் இன்று அரண்மனைக்கு அரசாங்கம் சீல் வைத்திருக்கிறது. மன்னர்களின் வாரிசுகளுக்குள் இன்று ஏதோ டாவா. 'நோ என்ட்ரி' என் வெளியே சார்ஜன்ட் கிறார்.

கல்கி வாசகர்களுக்காக, கடவுள், 'ஜானகி அம்மா' என்கிற பணிப்பெண் ரூபத்தில் வந்து நம்மை ராணிகளின் அரண்மனைக்குள் (மட்டும்) அழைத்துப் போனார். அந்த மட்டில் அவருக்கு ஒரு நன்றி. ரயில் பெட்டி மாதிரி நீளமான வீடு. மழமழ தரைகள். ஃப்ரேம் போட்ட ஓவியங்கள் நிறை சுவர்கள். மகாராஜாவின் தைல வண்ண ஓவியம், அலங்கார விளக்குகள், அங்கே புல்வெளி இங்கே டைனிங் ரூம். உத்தர மரங்களில் உருவச் செதுக்கல்கள். அகலமான தாழ்வாரத்தில் வட்ட வடிவ மேஜை. ('ராணிகள் சீட்டாடியிருப்பார்களோ' என்பது உடன் வந்தவரின் சந்தேகம்.) சமையலறையிலிருந்தே நீரெடுக்க வசதியாகப் பெரும் கிணறு. மரத்தாலான மாடிப்படி. அதன் வளைவுகளில் செதுக்கிய வடிவங்கள். கொல்லைப்புறத்தில் நந்தவனம். மா, பலா, தென்னை வகையறா. கல்லடிக்கும் விடலைகள். கம்பெடுத்து ஓடும் 'ஜானகி அம்மா'.... வாழ்க்கையில் இப்படி ஒரு அரண்மனையை எப்படி யாவது வாங்கி, ஒரு நாளாவது வசித்துவிட வேண்டும். பார்க்கலாம்.

இப்போ என்ன அவசரம்?

வாசகர் தகவல் : சந்தோஷ்

# சந்தித்தார்கள்...

படத்தில் நீங்கள் பார்க்கிற வீட்டிற்கு ஒரு வரலாற்று முக்கியத்துவம் உண்டு. விஷயம் அறிந்து கொள்ள 1927 க்குச் செல்ல வேண்டும். காஞ்சிப் பெரியவர் ஸ்ரீ சந்திர சேகரேந்திரர் பாலக்காடு நெல்லிச்சேரி கிராமத்தில் - இந்த வீட்டில் சாதுர்மாஸ்ய விரதம் இருந்து வந்த சமயம். காந்தியடிகள் அங்கு அப்போது வந்திருந்தார். பெரியவர் இங்கே தங்கியிருப்பதைக் கேள்விப்பட்டு, பார்க்க வந்தார்.



இருவரும் தனியாகச் சிலமணி நேரம் இந்த அறைக்குள்ளேதான் பேசிக் கொண்டிருந்திருக்கிறார்கள். வெளியே காவல் இருந்தவர் ராஜாஜி! அவர்கள் அப்போது என்னதான் பேசினார்கள் என்பது இன்று வரை ரகசியம்.

இத்தனைக்கும் ஒரு மௌன சரித்திர சாட்சியாக விளங்கும் இந்த வீடு - இன்று சந்திரசேகரன் என்பவருக்குச் சொந்தமானது.

வாசகர் தகவல் : ஒ. நீலகண்டன், விச்வம்

# தலைமுறைகள் கண்ட தாள ஒலி!

"பாலக்காடு மணி அய்யர், பாலக்காடு ரகு.... இவங்களை மாதிரி பெரிய வித்வான்களுக்கெல்லாம் நாங்க மிருதங்கம் செய்து கொடுத்திருக்கோம்...." என்கிறார் வேலாயுதன். - பெருவம்பா கிராமத்துக்காரர். பாலக்காடு - கொல்லங்கோடு பாதையில் உள்ள இந்தச் சிற்றூரில் மிருதங்கம், தபலா போன்ற தாள வாத்தியங்களை பரம்பரை பரம்பரையாகத் தயாரித்து வரும் குடும்பங்கள் இருக்கின்றன.

"மிருதங்கம் செய்ய உங்களுக்குக் கற்றுக் கொடுத்தது யாரு...? உங்க அப்பாவா, தாத்தாவா?"

"ஊம்.... யாரும் கற்றுத் தரலை... நாங்களா அவங்க செய்யறதைப் பார்த்துத்தான் கத்துக்கிட்டோம். இதையெல்லாம் கத்துக்க முடியாது... தானா வரணும். ஆண்டவன் கொடுத்தாத்தான் வரும்..."

"சங்கீதம் மாதிரியா....?"

"ஆமாமாம்! நாதத்துல உள்ள வித்தியாசம் காதுக்குப் புரியணும். அப்போதான் நாங்க செய்யற வேலை சுத்தமாயிருக்கும்..."

"நீங்க செய்து கொடுத்த வாத்தியங்களைக் கச்சேரிகளில் வாசிக்கும்போது கேட்டிருக்கீங்களா...? அப்போ உங்க மனசு எப்படி இருக்கும்?"

"ஓ! சந்தோஷமாயிருக்கும். எத்தனை கச்சேரி! இங்கே பாலக்காட்டில மட்டுமில்ல, மட்ராஸுக்குக் கூட வந்து கச்சேரி கேட்டிருக்கேன்." - சிரமமின்றிப் புரியக்கூடிய தமிழில் சொல்கிறார். "இப்போதான் இப்படி ஆயிட்டேன்..." என்று முடங்கிப் போன கால்களைச் சுட்டிக் காட்டுகிறார் வேலாயுதன்.

பக்கவாதம் காரணமாகத் திண்ணையோடு முடங்கியிருக்கிறார் வேலாயுதன். இன்று கொச்சு கிருஷ்ணன் முதலான இவரது மகன்கள் இத்தொழிலைத் தொடர்கிறார்கள். மிருதங்கம் செய்யத் தேவையான பலா மரக் கட்டை, ஆட்டுத் தோல், எருமை மாட்டுத் தோல் வார், புராண கிட்டம் என்ற கல் வகை... யாவும் விலை ஏறிவிட்டன.

"தொழில் எப்படி நடக்கிறது....?"

"கறுகறுப்பாகத்தான் நடக்கிறது. ஆர்டர்களை காலாகாலத்தில் முடித்துத் தர முடியலை. முன்னெல்லாம் ஒரு குறிப்பிட்ட சமூகத்தினர்தான் அதிகமா மிருதங்கம் வாசிச்சாங்க. இப்போ எல்லாரும் வாசிக்க நாங்க; நிறைய இளைஞர்கள்,



* பலாக் கட்டையை செதுக்கி, குடைந்தெடுத்து, இருபுறங்களையும் தோலால் மூட வேண்டும்..... - கொச்சு கிருஷ்ணன்

இசைப் பள்ளி, கல்லூரிகள், ஆர்க்கெஸ்ட்ரா குழு என்று மிருதங்கத்துக்கு 'டிமாண்ட்' இருக்கு... அதோட ரிப்பேர் வேலைகள் செய்யவே நிறைய நேரம் செலவிட றோம்...'' என்கிறார் கொக்க கிருஷ்ணன்.

''அன்புள்ள வேலாயுதன்,

நான் கேட்கிற மாதிரியான மிரு தங்கத்தை நீங்கள் மட்டுமே செய்து தர முடியும்...''

என்று ஆரம்பிக்கும் நான்கு பக்க விவரமான கடிதம் கனடாவிலிருந்து வந்திருக்கிறது. வாத்தியம் கேட் டிருப்பவர் வெளிநாட்டு மாணவர்!

''உங்க பேரப் பிள்ளைகளையும் இந்தத் தொழிலுக்குக் கொண்டு வந்துட்டா சௌகரியம் இல் லையா....? ஆர்டர்களை முடிக்கத் தரலாம்....'' வேலாயுதத்திடம் கேட்டோம்.

''அவங்களா வரணும்; வந்தாலும் அதுக்கான காதும் கையும் அவங்களுக்கு இருந்தாத்தானே....''

''அப்போ அடுத்த தலைமுறையில மிருதங்கம் செய்யறது யாரு....?''



* 'அடுத்த தலைமுறையிலும் தாளம் ஒலிக்குமா...?' - வேலாயுதன்

''காலம்தான் அதுக்கு பதில் சொல் லணும்....'' என்று இலேசான ஆதங்கத் துடன் சொல்கிறார் வேலாயுதன்.

– மலர்

தகவல் அளித்த வாசகர்கள் : எல். இந்திரா, பி.கே. சுப்ரமண்யம்.



# Kalki Shopping Page

# Kalki Shopping Page

## வேலை வாய்ப்பு

- நீங்களும்
  ஓவிய ஆசிரியர் ஆகலாம்.
- கொஞ்சம் ஆர்வம் •
  கொஞ்சம் முயற்சி போதும்.
- அற்புதமான
  அஞ்சல் வழிப் பயிற்சி.
- நேர்த்தியான நேர்முகப் பயிற்சி.
- கல்வித் தகுதி S.S.L.C, +2 தேர்ச்சி.
- ஒளிமயமான எதிர்காலம்.
- உன்னதமான வேலை வாய்ப்பு.
- விவரப் புத்தகம் இலவசம்

விண்ணப்பிக்கவும்

**Ajantha School of Arts**

(Govt. Regd. No: 1075/89/MS/RD)
67, Anjaneyar Koil Street,
Poonamallee,
MADRAS-600 056.

## B. M. SILK SAREES

**B. M. சில்க் சாரீஸ்**
**காஞ்சிபுரம்**
**பட்டுசேலை**
**தயாரிப்பாளர் :**

**5, வடக்கு மாட வீதி,**
**மைலாப்பூர்,**
**சென்னை - 600 004.**
Phone : 4940291

**எங்களின் மாதாந்திர சீட்டு**
**திட்டத்தில் சேர்ந்து**
**பயனடையுங்கள்.**

குறிப்பு : அனைத்து
பட்டு சேலைகளும்
தறி விலைக்கே கிடைக்கும்.

All Credit Cards Accepted

## R.K.N. GOLD COVERING

ஒரிஜினல் சிதம்பரம் கோல்டு கவரிங்

எங்களிடம் 1/2 கிராம், 1 கிராம் செயின், நெக்லஸ், வளையல், கம்மல், உத்திரவாதத்துடன் கிடைக்கும்.

உபயோகித்தபின் எங்களிடம் திரும்பக் கொடுத்தால் பொருளுக்குத் தகுந்தாற்போல் பணம் கிடைக்கும்.

1 வருடம் முதல் 5 வருடம் வரை உத்திர வாதத்துடன் கிடைக்கும்.

திருமணம் மற்றும் விசேஷ வைப வங்களுக்கு நகைகள் வாடகைக்குக் கிடைக்கும்.

வெள்ளி ஜரிகை
உருக்கித் தரப்படும்.
விலைக்கு வாங்கப்படும்.

**R.K.N. கோல்ட் கவரிங்**

75, ரங்கநாதன் தெரு,
தி. நகர், சென்னை 600 017.

## "LEARN ELECTRONIC ORGAN THROUGH CORRESPONDENCE COURSE"


(CARNATIC & LIGHT MUSIC)

*FOR DETAILS SEND ONE SELF ADDRESSED ENVELOPE WITH STAMPED RS. 1/-*

*Write to :*

**R. K. Venkatraman,**
Sethu Bavanam,
Angayarkanni I Street,
Jeeva Nagar,
Madurai - 625 011.
(Tamil Nadu) India.

# Kalki Shopping Page


சட்ட ஒழுங்கு சீர்குலைவு
லஞ்ச ஊழல்
இங்கேயும் புதுசா ஒரு லண்டன் உருவாகணுங்க! கூவம், சும்மா தேம்ஸ் நதி கணக்கா ஆயிடணும்... பாதாள ரயில் உங்க ரயில மிட் பண்ணணும்... அதிவேக ரயில் திட்டத்தை நீங்களே நடத்துங்க, யார் கேட்கப் போறாங்க.........
கூட்டணிக் கட்சி அமைச்சர்கள்
C.M.
நல்லவேளை! கூவத்தை லண்டனுக்குக் கொண்டு போய் குடியேத்துன்னு சொல்லாம விட்டாங்களே!...
ஐயையோ... என்னத்த இவனுக்கு மேக்கப் போட்டு... என்னத்த அழகு பண்ணி... என்னத்த நம்ம தலைவர் ராவை திருப்திபண்ணி.......
சீரமைப்புக் கமிட்டிகள்
பிரதேச காங். கமிட்டிகள்
மேக்கப் சாதனங்கள்




கல்கி





1994
ஏப்ரல் 24
மலர்: 52
இதழ் : 39
பவ
சித்திரை 11


தமிழ்த்திரு நாடு
தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா. - பாரதியார்.

# மத்திய அரசின் சதித் திட்டம்!

**ம**த்திய அரசின் செயல்பாட்டை நினைத்தால் பரிதாபமாக இருக்கிறது. பாருங்களேன், ஜெயலலிதாவின் பெருமையையும் பிராபல்யத்தையும் குறைப்பதற்காக வழிப்பறிக் கொள்ளையில் கூட இறங்கத் தயாராகி விட்டதை விடக் கேவலம் வேறு என்ன இருக்க முடியும்? அழகாபுரி அருகே பஸ்ஸில் கொள்ளையடித்தது யார் என்று நினைக்கிறீர்கள்? சாட்சாத் நரசிம்மராவேதான்! 'ரா' அதிகாரிகள் சிலருடன் கொள்ளையர்கள் போல் மாறுவேடம் பூண்டு வந்து கைவரிசையைக் காட்டி இருக்கிறார்! எதற்கு? அவரிடம் பணம் காசு இல்லை என்றா கொள்ளையடித்தார்? சந்தேகமே வேண்டாம்! 'ஜெயலலிதா ஆட்சியில் வழிப்பறிக் கொள்ளை நடக்கிறது' என்று மக்கள் நம்பும்படி செய்யத்தான்!

அடுத்து, திருச்சி அருகே பஸ்ஸை மறித்து மறுபடி ஒரு வழிப்பறிக் கொள்ளை நடந்தது அல்லவா? அதில் ஈடுபட்டது... யோசிக்கவே வேண்டாம்! திருவாளர் எஸ்.பி.சவானேதான்! சி.பி.ஐ.அதிகாரிகளுடன் மாறுவேடத்தில் வந்து படாத பாடுபடுத்தியிருக்கிறார்!

ஸ்ரீபெரும்புதூர் அருகே ஒரு காரை மடக்கி வழிப்பறி செய்தது யார் என்று தெரியவில்லையோ? மத்திய அமைச்சர் ராஜேஷ் பைலட்டின் கைவரிசைதான் அது! அவரைப் பார்த்தாலே 'வில்லன்' என்று எழுதி ஒட்டியிருக்கிறதே!

இப்படி எல்லாருமாகச் சேர்ந்து சதி பண்ணி, 'சட்ட ஒழுங்கு குலைந்தது' என்று கூறி, 'ஜெ' ஆட்சியைக் கலைத்து விடத் திட்டமிடுகிறார்கள், மக்கள் ஏமாந்து விடக் கூடாது!

காவல் நிலையங்களில் கற்பழிப்பு நாளுக்கு நாள் அதிகரிக்கிறதே என்று யாரும் சிந்திக்க வேண்டாம்! அம்மையார் ஆட்சியில் சிந்தனைக்கு என்ன வேலை? சொல்வதைக் கேட்டுக் கொண்டால் போதும். கற்பழிக்கு மாறு காவல் துறையைத் தூண்டிவிட எத்தனை லெட்டர்கள் டில்லியிலிருந்து தமிழ் நாட்டுக்கு வந்துள்ளன, தெரியுமா? காவல் நிலைய மரணங்களை ஊக்குவிப்பதும் இதே மத்திய அரசுதான்! வீரேந்திரபாட்டில் அரசைக் கலைக்க வகுப்புக் கலவரங்களைத் தூண்டி விட்ட இவர்கள், என்ன தான் செய்ய மாட்டார்கள்!

விடுதலைப் புலிகளை 'ரா' நிறுவனம் தான் சதிபண்ணி சிறையிலிருந்து தப்ப விடுகிறது! அப்புறம் வாழப்பாடிக்குத் தகவல் தந்து, அவரும் 'லபோ திபோ' என்று அடித்துக் கொள்கிறார். இதையெல்லாம் புரட்சித் தலைவியால் புரிந்து கொள்ள முடியாதா என்ன!

தமிழ்நாட்டில் வீடு புகுந்து கொள்ளை அடிப்பதும் அதிகரித்துதான் வருகிறது. ஏன், விட்டாலாச்சாரியா வீட்டிலேயே கொள்ளை! அதை ஏதோ மாயா ஜாலம் என்று எண்ணாதீர்கள்! மத்திய அரசின் முன்னேற்பாடுதான். அம்மையார் ஆட்சியைக் கலகலத்துப் போகச் செய்ய, ஒரு கொள்ளையர் பட்டாளத்தையே உருவாக்கி, ரகசிய டிரெய்னிங் கொடுத்து அனுப்பி வைத்திருக்கிறது. அதனால்தான் அம்மையார் மோட்டார் சைக்கிள், ஜீப், ஏ.கே-47 என்று போலீஸை எவ்வளவோ நவீனப் படுத்தியும் பயனில்லாது போகிறது.

போதாக்குறைக்கு பா.ம.க. தலைவர் ராமதாஸ்வேறு மத்திய அரசின் கையாளாகி விட்டார்! அவர் மறியல் செய்யக் கூறிய காரணம் வெறும் கண்துடைப்பு! அத்தனையும் மத்திய உள்துறை அமைச்சகத்தின் உளவுத் துறையினரின் வேலை! ராமதாஸ் கைதாக, பா.ம.க.கட்சியினர் பஸ் எரிக்க, அம்மையார் ஆட்சிக்கு அவப்பெயர் வந்து சேரும் என்பதற்காகவே நடத்தப் பட்ட நாடகம்!

பொறுத்துப் பொறுத்துப் பார்த்தார் ஜெ.கடைசியில் வீராங்கனையாக வெடித்து விட்டார்! மத்திய அரசின் சதித்திட்டத்தை அம்பலப்படுத்தி விட்டார்! வரட்டும், சவான்! சென்னாவுடன் ரகசியப் பேச்சு வார்த்தை நடத்தட்டும்! தாராளமாக இன்னும் பல சதித் திட்டங்களையும் நிறைவேற்றட்டும். அம்மையாரையா அசைக்க முடியும்! ஊஹூம்!

# பாலக்காட்டு ராஜாவும் பழங்குடி நங்கையும்!



✱ கல்பாத்தியில் ஒரு வீதி

✱ என்.என். ராமச்சந்திரன்



என்னதான் நவீன ஹோட்டல்களும் அகல ரயில் பாதைகளும் சினிமா ஸ்டார்கள் சிரிக்கும் போஸ்டரும் எஸ்.டி.டி. ஐ.எஸ்.டி. பூத்களும் ஏராள நவீனங்களும் பெருகி விட்டாலும், ஒரு சரித்திர காலத் தோற்றத்தைப் பாலக்காடு இன்னும் காப்பாற்றி வருகிறது.


நடைமுறை வாழ்வில் நகரத்தன்மை பாதிப்பிருந்தாலும் கலாசார மினிறலை எங்கும் காணமுடிகிறது. குடியரசு தின அணிவகுப்பு மாதிரி வரிசை பிசகாது, ஒட்டி உரசி நிற்கும் குள்ள ஓட்டு வீடுகள், கவிழ்த்துப் போட்ட 'ப' வடிவத் தெருக்கள், புழக்கடையில் நதி. அதில் குளித்து, துவைத்து, மிதந்து வரும் பெண்கள், வாசலில் கோவில், தெருமுனையில் தேர், தடுக்கி விழுந்தால் தடாகம், நிமிர்ந்து பார்த்தால் தோப்பு, திண்ணைகளில் அரட்டை, தெருவோரக் கால் வாய், மூலைக்கொரு சரித்திரச் சின்னம், முச்சந்திகளில் அரசமர மேடை - ஒன்றிரண்டு இடமென்றால் சரி; ஊர் முழுக்கவே இப்படியா இருக்கும்? பார்க்கப் பார்க்க, நம் போன்ற கூவக்கரைவாசிகளுக்குப் பொறாமையே மேலிடுகிறது.

இந்தப் பகுதியின் சரித்திரப் புஸ்தகங்களைப் புரட்டிப் பார்த்தால், சேர மன்னர்கள் முதலில் வருவார்கள். புராணங்களைத் திறந்து பார்த்தால் பரசுராமர் 'பிரஸன்ட் ஸார்' என்பார். கண்ணகி கோவில்கள் காணக் கிடைக்கின்றன. (பகவதி அம்மையாக்கும்!) பின்னால், குறுநில சமஸ்தானங்கள் முளைக்க ஆரம்பித்த போது உருவான அரண்மனைகளும், கோட்டை கொத்தளங்களும் இன்னமும் இருக்கின்றன - அதிகம் சிதைவில்லாமல்; அய்யன் பீடி விளம்பரச் சுவர்களுடன்.

பாலக்காட்டை, பூர்வீகமாகக் கொண்டவர்களைவிட இங்கு குடி பெயர்ந்தவர்கள் அதிகம். த.நா.வின் தஞ்சை ஜில்லாவிலிருந்து அநேகர் பெயர்ந்திருக்கிறார்கள்.

கதை ஒன்று சொல்கிறார்கள். பன்னிரண்டாம் நூற்றாண்டு பாலக்காட்டு ராஜா ஒருவர், ஒரு பழங்குடி வகுப்பு நங்கையைக் காதலித்துக் கடிமணம் புரிந்தாராம். உள்ளூர் உயர் மட்டர், வழக்கம் போல் எதிர்த்திருக்கிறார்கள். 'ராஜ பரம்பரைக்கு இழுக்காக்கும்' என்று குதித்திருக்கிறார்கள். இவர் ஊரை விட்டு வெளியேறி, த.நா. வந்து, தஞ்சாவூர் பக்கத்திலிருந்து சில உயர்





மட்டர்களைத் தமது சாதகர்களாக்கிக் கொண்டு, அவர்களைக் கூட்டி வந்து இங்கே குடிபெயர்த்தாராம். இப்படியாகத் தமிழ்ப் பண்பாடு இவிடே ஊன்றப் பட்ட தாகச் சொல்கிறார்கள். பாலக்காடு நகரைச் சுற்றிலும் பதினெட்டு கிராமங்களில் (மாவட்டம் முழுவதிலும் 96 கிராமங்கள்) இந்தப் பண்பாடு வளரலாயிற்று.

இவ்விதம் ஊன்றப்பட்ட தமிழ்ப் பண் பாடுகளுக்கு, கல்பாத்தி சிவன் கோவிலும் (கமலமனராஜன் இதனை விரிவாக விளக்கு வார்.) கடலென மக்கள் பெருகும் ரத உற் சவங்களும் கலாசார ரீதியிலான சாட்சியங் களாக இன்று நமக்குக் காணக் கிடைக் கின்றன.

செம்பை தொடங்கி சங்கரன் நம்பூதிரி வரை ஏராள இசைக் கலைஞர்களைத் தமிழ் நாட்டுக்கு அனுப்பி வைத்துள்ளது பாலக் காடு. ஒரு பக்கம் கலா மண்டலம்; மறு பக்கம் செம்பை இசைக் கல்லூரி; சித்தூர் அரசுக் கல்லூரியில் சிறப்பாகச் செயல்படும் இசைப் பிரிவு என்று இன்றைக்கும் சங்கீதப் பயிற்சிக்கு சுற்றிலும் வாய்ப்புகள். ''ஆனா லும் மாவட்டத் தலைநகரில் ஒரு சங்கீத சபா இல்லை, கச்சேரிகள் நடப்பதில்லை'' என்று வருந்துகிறார் காதர் ஷா.

காதர் ஷா குடும்பத்து மூதாதையர்கள் திருநெல்வேலியிலிருந்து, இங்கு வந்தவர் கள். ''ஹிந்து - முஸ்லிம் ஒற்றுமைக்குப் பெயர் போனது பாலக்காடு பகுதி'' என் கிறார் ஷா. சமீபத்திய ஓரிரண்டு துர்ச்சம்ப வங்கள் அரசியல்வாதிகளின் விஷமத்தால் விளைந்தவை என்கிறார்.

பள்ளிகளிலும், அரசு அலுவலகங்களி லும் ஆட்சி மொழி மலையாளம் தாவெனி லும் பெரும்பாலானோர் பேசுவது 'தமிழாளமே'. வாண்டுகளுக்கு மம்முட்டி, மோகன்லாலை விட ரஜினி காந்தின் மீதே அபார பிரேமை. மெட்ராஸ் தூர்தர்ஷன் இங்கே எடுக்கிறது. சந்தோஷமாகத் திரை மலர் பார்க்கிறார்கள்.

படிப்பறிவு கேரள மாநிலத்தின் மற்ற இடங்களைப் போல் உயர்வுதான். 85 சதம் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் என்கிறார் கள். பள்ளியிறுதிக்குப் பின் படிப்பைத் தொடர Parallel Colleges என்ற வசதி இங்கு நிலவுகிறது. புதிய கல்லூரிகள் தொடங்கத் தடையேதும் இல்லை.

படிப்பறிவு காரணமாகவோ என் னமோ ஊர் படு சுத்தமாக இருக்கிறது. லாட்டரி கடை வாசல்கள் தவிர வேறெங் கும் குப்பை கூளங்கள் கண்ணுக்குத் தென் படவில்லை.

இன்று பாலக்காட்டுக்காரர்கள் பெரும்பாலோர் வெளியேறி வேறிடத்தில் வேலைக்குப் போய் விடுகிறார்கள். 'இது ஒரு குறையாகத் தோன்றவில்லையா?' என்று உள்ளூர்ப் பிரமுகர் என்.என். ராமச் சந்திரனிடம் கேட்கிறோம்.

''இந்த நிலை உருவாகக் காரணம் 1970 இல் கேரள அரசு அறிவித்த நிலச் சீர்திருத் தம்தான். அதன்படி, குத்தகைக்கு விடப்பட் டிருந்த அனைத்து நிலங்களும் அரசுக்குச் சொந்தமாகி விட்டன. இரவோடு இரவாக ஏழையான குடும்பங்கள் ஏராளம். இவர் களுக்கு வெளியே போய் வேலை தேடிக் கொள்வது தவிர வேறு என்ன வழி....? அப்படிப் போனதால்தான் அவர்கள் முக்கிய பதவிகள் வகித்து நல்லவிதமாக வாழ்கிறார்கள். பாலக்காட்டுக்கும் இது பெருமைதானே?'' என்கிறார்.

சந்தேகமில்லாமல் பெருமைதான். ஆனால் ஆறு ரூபாய்க்கு அப்பளம் தயிருடன் சாப்பிட்டு, ஆட்டோவில் நான்கு ரூபாய், ஐந்து ரூபாயில் உலா வந்து, இரும் பின பக்கமெல்லாம் மலைகளைத் தரிசித்து, ஓட்டுக் கூரை வீடுகளில் தங்கி மகிழ இந்தப் பெரிய மனிதர்கள் பாலக்காட்டுக்குத் தானே வர வேண்டும்!

- கிச்சா

★ சுத்தம்... படுசுத்தம்.



# விவேகானந்தரின் அரசியல்!



நதிக்கரையில் அமைந்த ஓர் ஊர். கோழி முட்டை ஓடுகளைக் கோர்த்து நதித் தண்ணீரில் மிதக்க விட்டு அவற்றைச் சுடுவதற்குத் துப்பாக்கிப் பயிற்சி செய்து கொண்டிருந்தனர் சில வாலிபர்கள். அவர்களுடைய முயற்சிகள் பலிதமாகவில்லை. சுவாமி விவேகானந்தர் சிரித்தார்.

'பார்த்தால் சுலபமாகத் தோன்றும். ஆனால் இது எளிதில் முடிகிற காரியமில்லை. நீங்கள் தான் கொஞ்சம் முயன்று பாருங்களேன்!' என்று கூறித் துப்பாக்கியை சுவாமிஜியிடம் கொடுத்தனர் அந்த இளைஞர்கள்.

என்ன ஆச்சர்யம்! குறி தப்பாமல் அடுத்தடுத்து ஆறு முட்டைகளைச் சுட்டார் சுவாமிஜி. 'சுடுவதில் நீங்கள் மிகவும் தேர்ச்சி பெற்றவர் போல் இருக்கிறதே' என்றனர் வாலிபர்கள்.

'அல்ல தம்பிகளே! இன்றுதான் நான் முதல் முறையாகத் துப்பாக்கியைத் தொடுகிறேன். எல்லாம் மனத்தின் ஒருமைப்பாட்டில் தான் இருக்கிறது' என்றார் சுவாமிஜி.

●● தம்மை அரசியலுடன் சம்பந்தப்படுத்துவதை வன்மையாகக் கண்டித்தார் சுவாமிஜி.

'அரசியல் நான்சென்ஸுடன் எனக்கு ஒரு தொடர்பும் கிடையாது. எந்த அரசியலிலும் எனக்கு நம்பிக்கை கிடையாது. சர்வேசுவரனும் சத்தியமும் தான் உலகில் உள்ள ஒரே அரசியல். மற்றவை எல்லாம் வெறும் குப்பையே யாகும்.'

●● ஸ்ரீராமகிருஷ்ணருக்கு இஸ்லாமிய மதத்தைக் கடைப்பிடித்துப் பார்க்க வேண்டும் என்று ஆவல் எழுந்தது. தட்சிணேஸ்வரத்துக்கு இஸ்லாமிய ஸூஃபி ஒருவர் வந்து சேர்ந்தார். பிறப்பால் இந்துதான் அவர். கோவிந்தராய் என்பது அவருடைய பெயர். பிற்பாடு இஸ்லாமிய மதத்தைத் தழுவி ஸூஃபிக்களின் மரபுப்படி சாதனை புரிந்தவர் அவர். ஸூஃபி பிரிவினர் அத்வைதத்துக்கு நெருங்கிய கொள்கை உடையவர்கள். கோவிந்த ஸூஃபியிடம் சீடரானார் ராமகிருஷ்ணர்.

முஸ்லீம்களைப்போலவே உடையணிந்தார். அல்லாவின் திருநாமத்தை பக்தியுடன் ஜபித்தார். ஸூஃபி திருக் குர்ஆனை ஓத, அதனைக் கேட்டு மகிழ்ந்தார். பவதாரிணிக்கு நமஸ்காரம் செய்த போது ஏற்பட்ட அதே ஆனந்தத்துடன் இப்போது நமாஸ் செய்தார். அந்த மதமும் மெய்ப்பொருளில் சாதகனைச் சேர்ப்பதே என்பதை உணர்ந்து கொண்டார் ராமகிருஷ்ணர்.

●● ஒரு நாள் ராமகிருஷ்ணரின் கால்களைப் பிடித்துக் கொண்டிருந்த சாரதையை உற்று நோக்கினார் அவர்.

'என்ன பார்க்கிறீர்கள் அப்படி?' என்றாள் சாரதை.

'ஆலய சந்நிதானத்தில் பவதாரிணியாக நிற்கிறவள், நகபத்தில் என்னைப் பெற்ற அன்னையாக இருக்கிறாள். இப்போது புதிதாக இதோ என் கால்களைப் பிடித்து விடும் நீயாகவும் இருக்கிறாளோ என்றுதான் பார்க்கிறேன்' என்றார். சாரதாமணிக்குப் புல்லரித்தது.

●● விக்கிரக வழிபாட்டின் பெருமையைச் சென்னை உரையில் விவேகானந்தர் வெகு அழகாக நிரூபித்தார்.


"உருவ வழிபாடு தவறானது என்ற கருத்தை அப்படியே ஏற்றுக் கொள்கிறார்கள் இந்நாளைய மக்கள். நானும் இப்படி நினைத்தவன்தான். அதற்கு அபராதமாக, எல்லா அனுபவங்களையும் விக்கிரகங்கள் மூலமே பெற்ற ஒருவரின் பாதத்தில் பாடம் கேட்டேன்- ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரைத்தான் குறிப்பிடுகிறேன். அப்படிப்பட்ட ஒரே ஒருவரை விக்கிரக ஆராதனை மூலம் பெற முடியும் எனில் இன்னமும் ஆயிரம் விக்கிரகங்களை வைத்துக் கொண்டு பூஜை செய்யலாம்."

●● காளி கோவில் தோட்டத்தில் ஒரு பகுதியில் அருகம்புற்கள் செழிப்பாக வளர்ந்து கண்களுக்குத் தண்மை கூட்டின. ஒருநாள், அந்தப் பகுதியைப் பார்த்துக் கொண்டிருந்த ராமகிருஷ்ணர், திடீரென்று தாங்க முடியாத வேதனையுடன் தமது மார்பைப் பிசைந்து கொண்டார். காரணம்... அந்தப் புல்வெளியை மிதித்துக் கொண்டு யாரோ ஒரு வழிப்போக்கன் சென்றது தான். புல்வெளியுடன் ஒன்றுபட்ட மனநிலையை ராமகிருஷ்ணர் அடைந்து விட்டிருக்கிறார்.

தொகுப்பு: பாலன் பூங்குழலி

**ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர், சாரதா தேவியார், விவேகானந்தர் ஆகியோரின் திவ்ய சரித்திரம்: "அறிவுக் கனலே, அருட் புனலே" - ரா. கணபதி, கல்கியில் தொடராக எழுதியது.**

**விலை ரூ.100. ஸ்ரீராமகிருஷ்ண மடம், மயிலாப்பூர், சென்னை-4.**



# வரவு எட்டணா செலவு பத்தணா!

அடுத்த இரண்டு வரிகளையும் சேர்த்துச் சொல்லிப் பாருங்கள். அதே - கதை.

எத்தரப்பினருக்குமான சப்ஜெக்ட். எடுத்திருப்பவரோ சேகர். எனவே, பிழியப் பிழிய செண்டிமெண்ட்களும் வழிய வழிய போதனைகளுமாக அதே, அதே, அதே ஃபார்முலா.

வில்லத்தனம் துளியும் காட்டாத நாஸர், மகத்தான ஆசுவாசம். சம்பளம் வாங்கி பட்ஜெட் போடுகிற நேர்த்தியில் மற்றுமொரு மன்மோகன் சிங்.

கீழ் மத்தியதர வகுப்பினருக்கே உரிய குச்சிமேல் நடக்கிற வாழ்வுச் சித்திரிப்புகளில் லேசான கவிதைச் சாயல் தெரிவதைச் சொல்லிவிட வேண்டும். உதாரணமாக, ராதிகாவின் டீ. வி. ஆசை, கோவை சரளாவின் 'ஹவுஸ் கோட்' ஆசை.

யாரையா அந்த ஜில்பாஸ் அம்மணி? தமது அலட்டல் வைபவத்தில் அத்தனை பேருக்கும் அல்வா கொடுக்கிறார்! ராதிகா, நாஸர், ஜெய்சங்கர் என்று VIP க்களையெல்லாம் ஓரங்கட்டி, அவர் நடத்தும் ராஜாங்கத்துக்கு ஒரு ஸலாம்!

கதையில் ஒரு 'ட்விஸ்ட்' வேண்டுமென்று, இன்டர்வெலுக்கு முந்தின ஸீனில் நாஸரை லஞ்சம் வாங்க வைத்து, பிந்தின ஸீனில் வேலை போக வைக்கிற வேகம் விவேகமாக இல்லை. Fast Forward இல் மிக்கி & டொனால்டு பார்ப்பது போல இருக்கிறது.

ஆனால், தொடர்வதான ராதிகாவின் உருகல் வைபவத்தில் தியேட்டரெங்கும் ஆறு பெருகப் போகிறது - நிச்சயம்.


ரொம்ப ரொம்ப ரொம்ப நாளைக்குப் பிறகு சந்திரபோஸ் இசை. அந்த டைட்டில் ஸாங் தேவலை - வரிகள் உட்பட. முற்றிலும் வித்தியாசமான அந்த கரகர குரலுக்கு ஜே! (ச. போஸே தானா?)

ஆத்திசூடி, கொன்றைவேந்தன் டைப்பில் முற்றிலும் நீதி சொல்லும் படம். ஏதாவது வரிவிலக்கு, லோக்கல் அவார்டு கிடைக்கலாம்?

- ஆர். பி. ஆர்.

# நெற்களஞ்சியம் நீடிக்குமா?

- பாலக்காடு எம்.எல்.ஏ.வுடன் ஒரு சந்திப்பு



தொகுதியில் 'காணாமல் போன' எம்.எல்.ஏ.பற்றி யுகம் யுகமாக ஜோக் எழுதி வருபவர்களுக்கெல்லாம் பாலக்காடு டவுன் எம்.எல்.ஏ. சுந்தரம், நிச்சயம் ஆச்சர்ய புருஷர். வேலை நேரம் தவிர, இதர சமயங்களில் எப்போதும் இவரை வீட்டு வாசல் திண்ணையில் பார்க்க முடிகிறது. யாரும், எப்போதும் சந்திக்கலாம்; பேசலாம். வெகு எளிமை. விரல்விட்டு எண்ணி விடக் கூடிய 'விஷயம் தெரிந்த' அரசியல்வாதிகளுள் ஒருவர். காங்கிரஸ்காரர். 'எங்கும் குறைகள் நிறைந்த விட்டன. அரசுகள், ஊழல் சாம்ராஜ்ஜியங்களாகி விட்டன. அரசியல், பணம் பண்ணும் இயந்திரமாகி விட்டது' என்றெல்லாம் நிஜமாக வருத்தப்படுகிறார். எந்தத் தொகுதி மக்களாவது தங்கள் எம்.எல்.ஏ.வை உத்தமர் என்று சொல்லிப் பார்த்திருக்கிறீர்களா? பாலக்காட்டில் பார்க்க முடிகிறது. சுந்தரத்துடன் ஒரு சந்திப்பு:

"மலைகளுக்கும், வயல்களுக்கும், நதிகளுக்கும் பெயர் போன இப்பகுதியில் இன்று இயற்கைச் சூழல் பாதிக்கப்பட்டுவருகிறதே. இதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?"

"சூழலில் பாதிப்பு என்று சொல்வதற்கில்லை. மாற்றம் இருக்கத் தானே செய்யும்? வேறு வழி? நகர்மயமாதல் தீவிரமாகி வருவது நிஜம்தான். ஆனால், மக்கள் பெருக்கத்தை எப்படிக் கட்டுப்படுத்த முடியும்? ராஜாக்கள் காலத்திலிருந்தே தமிழ் நாட்டிலிருந்தும் இதர மாநிலங்களிலிருந்தும் இங்கு குடிபெயரும் வழக்கம் இருந்து வந்திருக்கிறது. ஒருவித கலாசார ஒருமைப்பாட்டை நீங்கள் இங்கே பார்க்கலாம். மற்ற மாவட்டங்களோடு ஒப்பிடுகையில் இங்கு மக்கள் தொகை குறைவு தான்.பாலக்காட்டில் மொத்தம் பதினோரு தொகுதிகள். இந்தத் (டவுன்) தொகுதியில் இரண்டு லட்சம் ஜனத்தொகை."

"ஆனால், இட நெருக்கடி காரணமாக விளை நிலங்களெல்லாம் வீடுகளாகி வருவதாகச் சொல்கிறார்களே?"

"இது உண்மைதான். குடியிருப்புப் பகுதிகள் போதாத காரணத்தால், நிலங்களில் வீடுகள் கட்டும் வழக்கம் தற்போது அதிகமாகித்தான் உள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளில் 4000 ஏக்கர் விளை நிலப் பரப்புகள் வீடுகளாகி விட்டன. இது ஒரு வகையில் 'இழப்பு' தான். ஆனால் இம்மாற்றம் தவிர்க்க முடியாததாகிவிட்டது."

"அப்போது விவசாயம்? பாலக்காடு தான் கேரளத்தின் நெற்களஞ்சியம் என்கிறார்கள்..."

"நிச்சயம் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஒரு ஏக்கர் நிலத்தில், 10 பரா (1பரா- 10கிலோ) விளைச்சல் தருகிற பூமி இது. நாலாயிரம் ஏக்கர் என்றால் என்ன ஆகிறது! அரிசி விளைச்சல் குறையத்தான் செய்கிறது. அதனால் பாதிப்பு என்று பெரிதாகச் சொல்லி விட முடியவில்லை. வேண்டிய அளவு வெளி மாநிலங்களிலிருந்து தான் இறக்குமதி செய்து கொள்கிறோமே? வீட்டு வசதி என்பது அத்தியாவசிய தேவை என்பதால் வேறு வழியில்லை."

"குடியிருப்புப் பெருக்கத்தைச் சமாளிக்க அடிப்படை வசதிகள்? குடிநீர், டிரைனேஜ்..."

"தனி வீடுகளுக்கு அனுமதி இல்லை. Lay-out என்பார்கள். மொத்தமாக காலனி மாதிரிதான் கட்டியாக வேண்டும். அப்போது சிக்கல் அதிகம் இல்லை அல்லவா? Internal Road, டிரைனேஜ் என்று ஒவ்வொரு Lay-out ம் அதனதன் அளவில் தன்னிறைவோடுதான் அமையும்."

"அரசு இதனை அனுமதித்திருக்கிறதா?"

"ஓ! இதற்கான சட்டபூர்வமான அனுமதி வந்து பத்து வருடங்களாகின்றன. வீடுகள் தவிர, தனியார் அலுவலகங்கள், தொழிற்சாலைகளும் நிறைய வந்துள்ளன; வந்து கொண்டிருக்கின்றன. கஞ்சிக்கோடு பகுதியில் ஒரு தொழிற்பேட்டையே உருவாகியுள்ளது."

"பாலக்காடு மாவட்டத்தில் சந்தன மரங்கள் கிடையாது என்கிறார்கள். ஆனால் சந்தன எண்ணெய் தொழிற்சாலைகள் மட்டும் சில இருக்கின்றனவே? அது எப்படி? மேலும் இவை தாவூத் இப்ராஹிமின் பினாமிகளால் நடத்தப் படுவதாகவும் கேரள முதல்வரே பேசியிருப்பது குறித்து?"

"இங்கு சந்தன மரங்கள் இல்லை என்பது உண்மைதான். ஆனால் சந்தன ஃபேக்டரிகள் இருக்கக் கூடாதா என்ன? (சிரிக்கிறார்) தமிழ்நாடு, கர்நாடகாவிலிருந்து சந்தனக் கட்டைகள் வருகின்றன.

"மாநிலத்தின் எல்லைப்புற மாவட்டம் என்பதால் இதுமாதிரி கடத்தல்கள் நடப்பது சர்வசாதாரணமாக இருக்கிறது. தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன."

-பா.ராகவன்.

# 16

எங்கோ ஒரு வெண் குதிரை
பிடரி பறக்க வேலிக்கு வெளியே துள்ளுகிறது
முள் கம்பி வேலிக்குள் மனிதர்கள்.
– டெரக் வால்காட்

திகைத்துப் போய் நின்றேன். எனக்கு கன்னத்தில் விழுந்த அடியை விட, மனத்தில் விழுந்தது அதிகம் வலித்தது.

''அடிப்பீங்களா?'' என்றேன்.

''சின்னக் குழந்தை மாதிரி பிடிவாதம் பிடிச்சா அடிப்பேன்.''

''வேற என்ன பண்ணுவீங்க? சூடு போடுவீங்களா? நல்லமாட்டுக்கு ஒரு சூடுன்னு பழமொழியெல்லாம் உங்க அம்மா சொல்றாளே!''

இதை பக்கத்து அறையில் கேட்டுக் கொண்டிருந்த அவர் அம்மா,

''அர்ஜுன் இதபார்றா, உங்க ரெண்டு பேருக்குள்ள என்ன சண்டையிருந்தாலும் என்னைப் போட்டு இழுக்காதே! அப்புறம் நான்தான் சொல்லிக் கொடுத்தேன்னு கோர்ட்டில போட்டு இழுத்துறப் போறா. டில்லிக்காரா பொல்லாதவா! ஏம்மா, அவன்தான் கூப்பிட்டா, நீ கூடப் போனா என்ன குறைஞ்சு போய்டுவியோ?'' என்று கேட்டாள்.

''எனக்குப் போக இஷ்டம் இல்லைம்மா.''

''ஏனாம்?''

''மிக்கிங்கற இவர் சிநேகிதர் என்னைப் பார்க்கற பார்வையும் நடத்தற விதமும் சரியில்லை.''

''மிக்கியா! நம்ம மிக்கியா! இது என்னடா கூத்து பாலாஜி?''


''பாரும்மா'' என்றார் அவரும் நம்ப முடியாமல்.

''தான் என்னவோ அதிரூப சுந்தரியாம்! இவ அழகைப் பார்த்து என் நண்பர்கள்ளாம் சைட் அடிக்கிறாங்களாம். அது இவளுக்குப் பொறுக்கவே இல்லையாம்.''

''அவா உன்னைப் பார்க்கறான்னா நீ ஏன் அவாளைப் பார்க்கணும்?''

''நன்னா கேளு.''

''என்னமோம்மா, இந்த வீட்டில சந்தோஷமும் சிரிப்புமா இருந்தது, நீ வந்தப்புறம் கொஞ்சம் கொஞ்சமா குறைஞ்சு போய் ஆளுக்கொரு திசையா மோட்டு வளையைப் பார்த்துண்டு உக்காந்துண்டிருக்கோம். அதனால கொஞ்சம் தயவு செய், நாங்கள்ளாம் ரொம்ப சதாரணமான மனிதர்கள். அல்பங்கள். எங்க கிட்ட எதாவது குறை இருந்தா சகிச்சுக்க வேண்டியது, உன் மாதிரி டில்லில படிச்ச நவநாகரிகப் பெண்களோட பொறுப்பு. கல்யாண



மான நாள்ளருந்து பாலாஜி மூஞ்சில சிரிப்பே இல்லை. எப்ப பார்த்தாலும் எதையாவது நெனைச்சுண்டே இருக்கான்!''

''எதையாவது இல்லை! சீட்டுக்கட்டு.''

''என்னடி சொன்னே'' என்று மறுபடி என்னைக் கன்னத்தில் அடித்த போது எனக்கு நிசமாகவே வலித்து. மூன்றாவது அடியைச் சுலபமாகத் தவிர்த்து ஒதுங்கிக் கொண்ட போது அவர் பாலன்ஸ் இழந்து படுக்கை விளிம்பில் விழுந்து விட்டார். எனக்குச் சிரிப்பாக இருந்தது. கூடவே அழுகையும் வந்தது.

''சிரிக்கிறெயா? சிரிக்கிறெயா?''

''புடிக்க தள்ளறதையும் தள்விட்டு சிரிக்கிறாயா?''

நான் உடனே அவர்களோடு எதும் பேசாமல் நேராக என் பர்ஸை எடுத்துக் கொண்டு வீட்டை விட்டுக் கிளம்பினேன்.

''எங்க போறே?'' என்றாள் மாமியார்.

''போகட்டும்மா! எங்க வேணா போகட்டும்! அவளைப் பத்தி கவலை வேண்டாம் நமக்கு.''

தெருக்கோடியில் ஒரு எஸ்டிடி - ஐஎஸ்டி கடை இருந்தது. அதில் அப்பா நம்பர் கொடுத்து, டயல் செய்து கூண்டுக்குள் போய்ப் பேசினேன். அம்மாதான் எடுத்தாள்.

''அம்மா, அப்பாவைக் கூப்பிடு.''

சுஜாதா

''யாரு ரேகாவா? என்ன, எதாவது விசேஷமா?''

''அப்பாவைக் கூப்பிடேன்.''

''ரேகா கூப்பிடறா உங்களை. என்னவோ ஆய்ருக்கு.''

அப்பா, ''என்னம்மா ரேகா?'' என்ற போது கொஞ்ச நேரம் அழுதேன்.

''என்னம்மா ரேகா! சொல்லு! என்ன ஆச்சு? மாப்பிள்ளைக்கு உடம்பு கிடம்பு சரியில்லையா?''

''அடிக்கிறார்ப்பா. பேய் அறையா அறையறார்ப்பா! 1994 ல!''

''எதுக்கு அடிச்சான்? காரணமில்லாமயா?''

''அவர் கூட பார்ட்டிக்கு வரமாட்டேன்னேனாம்! பத்து லட்சம் ரூபாய் பணம் பண்ணிட்டாராம். அதுக்காக பார்ட்டி! பாழும் பணம் ராப்பகலா அதே! நிசாசரர்கள் மாதிரி துரத்தறார். முதல் லட்சம், முதல் பத்து லட்சம்னு அதுக்காக எதை விக்கறோம்னு தெரியாத ஜந்துக்கள்ப்பா இவாள்ளாம். மாமியாரும் சொல்லிச் சொல்லி கொடுக்கறா. உசுப்பி விடறா. என் மேல சந்தேகப்படறா. அப்பா நம்புவேளா? மாமனார் கூட குலாவறேனாம்! எனக்கு ஏன் கல்யாணம் பண்ணி வெச்சிங்க? இதெல்லாம் கல்யாணத்தில உண்டுன்னு ஏன் சொல்லவே இல்லை நீங்க? அப்பா என்னை வந்து அழைச்சுண்டு போங்கப்பா, ப்ளீஸ்.''

**நா**ன் வாக்கியத்தை முடிப்பதற்குள் என் கையைப் பற்றி டெலிபோன் கூண்டுக்குள்ளிருந்து தரதரவென்று இழுக்கப்பட்டேன். அந்த வேகத்தில் என் கூந்தல் அவிழ்ந்தது. ஆப்பரேட்டரிடம் நூறு ரூபாயை எறிந்து விட்டு, ''அப்புறம் சில்லரை வாங்கிக்கறேன். இனிமே இவ வந்தா அலோ பண்ணாதிங்க. ஷி ஹஸ் கான் மேட்'' என்று என்னை தலை முடிந்து கொள்ள அனுமதிக்காமல் தரதரவென்று இழுத்து மாருதி காருக்குள் அடைத்தார். எனக்கு மூச்சுத் திணறியது. பெரிசாக மூச்சு விட, ''என்ன சண்டையிருந்தாலும் வீட்டின் நாலு சுவர்களுக்குள்ள வெச்சுக்கணும் தெரியுமா? உங்க அப்பாவுக்கு போன் பண்ணணும்னா அங்கிருந்து போன் பண்றது!'' என்றார். நான் பேச வில்லை..

''இப்ப என்ன ஆய்டுத்துன்னு இந்த புரட்டு புரட்டறே? ஆல்ரைட்! நான் அடிச்சது தப்பு! ஐ அப்பாலஜைஸ்'' என்று எதிரே இருந்த சின்ன ரெஸ்டாரண்டிலிருந்து ஒரு பெப்ஸி வாங்கிக் கொடுத்தார். நான் சாப்பிடவில்லை.

''இனிமே சத்தியமா அடிக்கமாட்டேன்! உன்னை தொடறதுக்குக் கூட பர்மிஷன் கேட்டுத்தான் தொடுவேன். சரிதானே?''

நான் பேசவில்லை.

''பேசமாட்டே?''

''பேசமாட்டே?''

''போசாட்டி போ! இந்த மாதிரி பஜார்ல வந்து போன் பேசாதே! நாம் எல்லாம் மரியாதைப்பட்ட ஜனங்கள். நம்ம உணர்ச்சிகளை அடக்கத் தெரியலைன்னா பழகிக்கணும்.''

''எனக்கு டில்லிக்கு போகணும்.''

''போகலாம். நான் கொண்டு விடத்தானே போறேன்? இந்த ரேட்டில டில்லிக்கு உடனே போகப் போறே நீ.''

''இந்த மாதிரி அடிச்சா எனக்கு உங்க வீட்டில இருக்க முடியாது.''

''அடிக்கலை. இனிமே அடிக்கலை. ரெண்டாயிரம் தடவை சொல்லிட்டேனே.''

''உங்க அப்பா அம்மா வேற கிளப்பி விடறா.''

''அவாளுக்கு கோயமுத்தூருக்கு டிக்கெட் வாங்கியாச்சு. அந்த நல்ல சேதியை பார்ட்டிக்குப் போற வழியில சொல்லலாம்னு இருந்தேன். அதுக்குள்ள இவ்வளவு ரகளை பண்ணிட்டே. ரேகா! எனக்கு எப்ப எப்ப கோபம் வரும்னு நீ தெரிஞ்சுண்டு, அதை அவாய்ட் பண்ணப்பாரு. சின்ன விஷயத்துக்கெல்லாம் பெரிசா கோவிச்சுண்டு மூஞ்சியை தூக்கி வைத்துக் கொண்டா கோபம் வரும்.''


''உங்களுக்கு எப்ப வரும்னு ஐ டோண்ட் கேர்! நான் டில்லி போகணும்.''

''பாருடி! யு ஆர் மை வைஃப். நான் சொல்ல நீ கேட்டாகணும். நான் எப்ப டில்லிக்கு போகலாம்கறேனோ அப்ப போகலாம் நீ.''

''அப்படின்னு யாரும் எழுதி வெக்கலை.''

''அப்படித்தான்! அ ப் ப டி த் தா ன்! புருஷன் அடிச்சான்னு போகணும்னா இந்த உலகத்தில பொண்டாட்டியை அடிக்காதவன் யாருமில்லை. தெரியுமா? எப்பவாவது ஒரு முறை இந்த மாதிரி கைகலப்பு ஏற்படத்தான் செய்யும். இதைப் போய் பெரிசா எடுத்துக்காதே!''

**வீ**ட்டுக்கு வந்த போது ''எங்கடா



போய்ட்டா? எனக்கு திக்கு திக்குன்னுது. காரும் பஸ்ஸும் லாரியும் போறப்ப.... என் னம்மா! இப்படி கங்கடி புடைவையை போட்டுண்டு தெருத் தெருவா அலையத் தான் உங்க அப்பா அம்மா சொல்லிக் கொடுத்தாளோ?''

நான் மாமியாரை நிஜமான கோபத் துடன் பார்த்து ''பொண்டாட்டியை கை நீட்டி அடிக்கத்தான் நீங்க சொல்லிக் கொடுத்திங்களா?''

''எப்படி கேக்கறா பாருடா!''

போன் விடாது அடித்துக் கொண்டிருந் தது.

அர்ஜுன்தான் எடுத்தார்.

''நத்திங் ஸர்! நத்திங்! உங்க டாட்டர் சின்ன விஷயத்தையெல்லாம் பெரிசா எடுத் துக்கறா! ஷி இஸ் எ லிட்டில் இம்மெச்சுர். அவ்வளவுதான். பேசுங்க, பேசுங்க.''

''ரேகா, உங்க அப்பா'' என்று என் கையில் ரிஸீவரைக் கொடுத்தார். பக்கத்தில் நின்று கொண்டு அவர் கேட்டுக் கொண் டிருக்க, நான் ''என்னப்பா'' என்றேன்.

''ரேகா, நீ என்னம்மா எங்களுக்கெல் லாம் கவலை தரும்படியா நடந்துக்கறே!''

''அப்பா! நான் தனியா லெட்டர் போடறேன். இங்க நடக்கறதை எல்லாம் எக்ஸ்ப்ளெயன் பண்ணறதுக்கு இது சந்தர்ப் பம் இல்லை.''

''ரேகா நீ நல்ல பொண்ணாச்சே? என்ன ஆச்சு உனக்கு?''

''எனக்கு எதும் ஆகலைப்பா. என்னால சிலதெல்லாம் தாங்கிக்க முடியலை. கன்னத்தில அடிச்சா வலிக்குமா இல்லையா சொல்லுங்கோ?''

''அப்படி அடிக்கிற மாதிரி நடந்துக்கக் கூடாதும்மா!''

''தெரியும்! இந்த பதிலைத்தான் உங்க கிட்ட எதிர் பார்த்தேன். வெச்சுரட்டு மாப்பா? அம்மா சௌக்கியமா? ஜெயந்தி பரீட்சை எப்படி எழுதினா?''

''ராங்க் வாங்கிருக்கு.''

''சரிப்பா. சந்தோஷம். லெட்டர் போட றேன்.''

''என்ன ஆனாலும் வீட்டுக்குள்ளயே இருக்கணும்மா. வீட்டை விட்டு வெளிய வந்துட்டா கேவலமாய்டும்மா.''

''சரிப்பா சரிப்பா.''

**நா**ன் போனை வைத்து விட்டு படுக்கை அறையில் போய் உள்ளே தாளிட் டுப் படுத்துக் கொண்டேன். ஒரு மணிநேரம் பொறுத்து 'ரேகா ரேகா' என்று கதவைத் தட்டினார்கள். நான் கம்மா இருந்தேன்.

கதவு பலமாகத் தட்டப்பட்டது. ''பாலாஜி, என்னடாது வம்பா போச்சு! எதா வது ஒண்ணு கெடக்க ஒண்ணு ஆக, நம்ம மேல பழிவந்துட்டா?''

''கம்மாரும்மா! தன்னால கதவைத் திறப்பா!''

நான் திறக்கவில்லை. அவர்களுக்கு கொஞ்ச நேரமாவது டென்ஷன் கொடுப் பதில் ஒரு திருப்தி இருந்தது. இருந்தும் மிக மிகத் தனியாளாக உணர்ந்தேன். பிறந்த வீட்டிலும் ஆறுதல் கிடைக்காது என்று புரிந்து விட்டது. யாரிடம் போவேன்? யார் எனக்கு ஆறுதல் சொல்வார்கள்?''

கிரிக்கெட் மாட்சின் நடுவே அகப் பட்ட நாயைப் போல உணர்ந்தேன். எந்தப் பக்கம் போனாலும் யாராவது வேறு திசை யில் திருப்புகிறார்கள்.

அப்பாவுக்கு ஒரு நீண்ட கடிதம் எழுதி னேன். அம்மாவுக்கும் எழுதினேன். ''பெண்டாட்டியை அடிக்காத புருஷனே இல்லை என்கிறார். அம்மா, அப்பா உன்னை அடிப்பாரா. எனக்கு நினைவு தெரிந்தவரை நான் அதைப் பார்த்ததே இல்லையே. நாங்கள் எல்லாம் தூங்கின பிறகு அடிப்பாரா? கன்னத்தில் அறைந் திருக்கிறாரா? இப்போ கூட கண்ணாடி பார்த்தால் அந்த பக்கம் சிவந்திருக்கிறதே. அதுபோல் நீயும் வாங்கியிருக்கிறாயா அம்மா? அப்படியெனில் ஏன் அம்மா அதை எனக்கு சொல்லவில்லை? கடுகு தாளிப்பதையும் ஊறுகாய் போடுவதையும் சொல்லிக் கொடுத்த நீ, இதையேன் சொல்ல வில்லை? எப்படி அரை வேக்காட்டில் என்னை அனுப்பி விட்டாய் அம்மா. அடி விழும்; ஒதுங்கிக் கொள்ள வேண்டும் என் றெல்லாம் ஏன் சொல்லலை?''

இவ்வாறு நான் எழுதிக் கொண்டிருக் கும் போது கடிதத்தின் மேல் நிழல் விழுந் தது.

திடுக்கிட்டுத் திரும்ப, அர்ஜுன் நின்று கொண்டிருந்தார்.

''எனக்கு கவலையாய்டுத்து. பாத்ரூம் கதவை கையைவிட்டு திறந்து உள்ள வந்துட்டேன்.''

அர்ஜுன் அந்தக் கடிதத்தைக் கிழித்து விட்டு, என்னை மேசையிலிருந்து தூக்கிக் கட்டிலில் கிடத்தினார்.

(தொடரும்)



''நீங்க சொல்றது நியாயமே இல்லே சார்... கம்ப்யூட்டர், கால்கு லேட்டர் எல்லாம் வந்துடுச்சு... இப் பப்போயி பதிமூணாம் வாய்பாட் டைப் பத்து தரம் எழுதிட்டு வான்னு ஹோம் ஒர்க் தர்றீங்களே!''

- ஆர். பிரசன்னா

# முகம்

கனகராஜன்

உயரமான இரும்புக் கதவுகளைத் தாண்டி நடக்க ஆரம்பித்தபோது, கருப்புசாமி வெயிலின் உஷ்ணத்தை உணர்ந்தான். அவனுக்குள் பெருத்த ஏமாற்றம் பொங்கி எழுந்ததைப் போலவே, வெயிலின் கொடுமையும் தாக்கியது. இளைப்பாற நினைத்தான். நிழலாய் இருந்த சில இடங்களில் ஏற்கெனவே ஆட்கள் நின்று கொண்டிருந்தார்கள். தாகம் வேறு வறண்ட நாக்கைத் தடவி ருசி பார்க்கிறது. பசிக்கிறது.

பெரிய ஹோட்டல் ஒன்றின் முன்னால், 'சாப்பாடு ரெடி' என்கிற அறிவிப்புப் பலகை வெயிலில் காய்ந்து கொண்டிருப்பதைக் கண்டான். பஸ்ஸிற்கு அளவாகக் காசுகள் இருப்பதை யோசித்தபடி நடந்து கொண்டிருந்தான். பஸ் ஸ்டாண்டை அடைய ஒரு பதினைந்து நிமிட நடையாவது வேண்டும். வெயிலில் நடக்க வேண்டுமென்பதை நினைக்கையில் கஷ்டமாக இருந்தது. பாதங்களில் 'விண், விண்' என்ற வலி கிளம்ப ஆரம்பித்துவிட்டது.

குடையோடு நடந்து போகிற மனிதர்களைக் கவனித்தான். நிழல்களைச் சுமந்து நடப்பவர்களைப் பார்க்கையில் அவனுள் பெருமூச்சு கருண்டு எழுகிறது. பெருகிய வியர்வையைக் கைக்குட்டையால் துடைத்துக் கொண்டான். எதிரே சைக்கிளில் வந்த ஒருவரிடம் -

''சார்... மணி என்னங்க...?'' என்று கேட்டான்.

அவர் வந்த வேகத்தில் இவனைப் பார்த்துவிட்டு எதுவும் சொல்லாமல் கடந்து போனார். பலமான தாக்குதலைப் போல இருந்தது அவனுக்கு.

அவர் கடிகாரம் கட்டி இருந்தாரே...?

தன் உருவம் பற்றி அபிப்பிராயம் அவரைப் பாதித்து இருக்குமோ என்று அவன் சந்தேகப்பட்டான்.

அவர் எந்த வகையான மனிதர் என்பது அவனுக்குத் தெரியவில்லை. அதெப்படித் தெரியும், போகிற போக்கில்?

ஆனால், அவனுக்குத் தெரியும். அவனைப் பற்றி... அவன் முகத்தைப் பற்றி...

கண்ணாடி எதிரே தோன்றும் அவன் முகம்... ஒருவித அந்நியத் தன்மையை தினமும் அவனுக்கு உணர்த்துகிறதாக உணர்கிறான்.

எனக்கு மட்டும் ஏனிந்த முகம்? இந்த முகம் சுமக்க, எத்தனை வேதனைச் சுமைகள்!

''டேய்... குரங்குமூஞ்சி!''

தேவராஜ் கத்திக் கொண்டு ஓடுவான். அது கிளாஸ் ரூம் முழுக்க ஒலிக்கும்.

''உனக்கு யார்ரா கருப்புசாமின்னு பேர் வச்சது...? அவார்டு கொடுக்கணும்....''

விளையாட்டு மைதானத்தில் விளையாட்டு ஆசிரியர் சொன்னது.

''கருப்புசாமி'' - கட்டுரை நோட்டுக்களை விநியோகம் செய்த சசியின் குரல் - வெறுப்புடன் உச்சரித்தவாறு கட்டுரை நோட்டை வீசி எறிந்தாள். அவள்தான் கிளாஸ் லீடர்.

பள்ளி நாட்கள் கொடுமையாக அமைந்தது. மற்ற முகங்கள் இந்த முகத்தை அலட்சியப்படுத்தின. நண்பர்கள் என்று யாரும் பழகவில்லை.

அழகான முகம் இருந்தவர்கள் லீடர் ஆனார்கள். ஆண்டு விழா, இலக்கிய மன்றம், நாடகம் என்று மேடை ஏறுவார்கள். அவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் நெருங்கிய உறவு போலச் சிரித்துப் பேசுவார்கள்.


ஒரு முறை புதிதாக வந்த கணக்கு வாத்தியார் இவனுடைய அழகான கையெழுத்தைப் பார்த்து ரசித்தவாறு -

''யாரு கருப்புசாமிங்கறது...?'' என்று விசாரிக்க - இவன் எழுந்து நின்றான். இவனைப் பார்த்த வினாடியில் ஆசிரியரின் முகம் சுருங்கிப் போய்விட்டது. அவர் மேற்கொண்டு எதுவும் சொல்லவில்லை. இவனும் எந்தவித உணர்ச்சியும் காட்டாமல் உட்கார்ந்து கொண்டான்.

தனக்கு முகம் அழகாக அமையாமல் போனது பற்றிய அவன் கவலைகளும் வேதனைகளும் படிப்படியாகக் குறைய ஆரம்பித்துவிட்டன. இப்போது சினிமா தியேட்டர் ஒன்றில் டிக்கெட் கிழிக்கிறான்.

தனியார் நிறுவனம் ஒன்று வேலைக்கு ஆட்கள் தேவை என்று விளம்பரப்படுத்தியிருந்ததைப் பார்த்து அப்ளிகேஷன் போட்டான். அந்த நேர்முகத் தேர்விற்காகத் தான் இப்போது சென்றுவிட்டுத் திரும்புகிறான்.

டைகட்டி, கோட்டும் சூட்டும் போட்ட பலபேர் நேர்முகத் தேர்விற்கு வருகை புரிந்திருந்தார்கள். கருப்புசாமிக்குக் கூச்சமாகப் போய் விட்டது. இவனிடம் நல்ல பேண்ட், சட்டை இல்லை. அவனுக்கான முடிவு அப்போதே அறிவிக்



கப்பட்டு விட்டதைப் போல இருந்தது. போய் விடலாமா என்று நினைத்தான். அவன் நினைத்ததைப் போலத்தான் நடந்தது. சீக்கிரமே விசாரணை நடத்தி அனுப்பி வைத்தார்கள். அவனுக்குப் புரிந்து விட்டது.

பஸ் ஸ்டாண்டை அடைந்தான்.

''சார்... மூணாம் நம்பர் பஸ் வருமா?''

நின்றபடி புத்தகம் படித்துக் கொண்டிருந்த ஒருவரைக் கேட்டான்.

''ம்... வரும்...'' என்றார். அவர் நிமிரவில்லை. படித்தபடியே பதில் சொன்னார். அவர் இவனைப் பார்க்காமல் சொன்னது ஒருவிதத்தில் அவனுக்குச் சந்தோஷமாக இருந்தது.

அப்போதுதான் அவர்கள் கண்ணில் பட்டார்கள்.

ஜெயபாலும் கமலியும். இருவருமே இவனோடு படித்தவர்கள்தாம்.

ஒரு முறை இருவரும் சேர்ந்து சினிமாவிற்கு வந்தார்கள். இருவரின் பார்வையிலுமே - பிரள பிரள விழிப்பும் - திருட்டுத்தனமும் இருந்தது. கருப்புசாமிதான் டிக்கெட் கிழித்தான். இருவருமே இவனைக் கண்டுகொள்ளவில்லை.

கருப்புசாமி இப்போது வானத்தைப் பார்வையால் வெறித்தான். வாழ்க்கையில் அர்த்தமுள்ளவை எல்லாம் எவை என்று கேட்கத் தோன்றுகிறது. சினிமா டிக்கெட் கிழிக்கும் தொழிலைக் கேவலமாக நினைக்கவில்லை.

ஜெயபால் இவனைக் காட்டிக் கமலியிடம் சொல்ல, அவள் சிரிப்பது தெரிந்தது.

''யோவ்... கெழவா... சாவுகிராக்கி... நீ வுழுந்து சாகறதுக்கு என் வண்டிதான் கெடைச்சுதா...?''

வயதான கிழவர் ஒருவர் நடுரோட்டில் தடுமாறி நின்று கொண்டிருந்தார். கையில் தடி இருந்தது. காரிலிருந்து ஒரு தலை எட்டிப் பார்த்து - இன்னும் அவரை நோக்கி வசைச் சொற்கள் வீசிப் பறந்து போனது.

கிழவர் தடுமாறினார். ஊன்றுகோலை அங்கும் இங்கும் வீசினார். எல்லோரும் வேடிக்கை பார்த்தார்கள். அவருக்குப் பார்வையில்லை.

கருப்புசாமிக்கு என்னவோ செய்தது. வேகமாக அவரை நோக்கிச் சென்றான்.

''தாத்தா... எங்கே போகணும்...?''

''சாமி... சிக்னல் தாண்டி விட்டுடுங்க...'' என்றார்.

ரோட்டைக் கடப்பதில் அவருக்கு உதவினான். எல்லோருடைய பார்வையும் கருப்புசாமியின்மேல் விழுந்தது.

முகத்தில் நன்றி பெருக, கிழவர் அவனை, தடுமாறித் தடுமாறித் தொட்டுப் பார்த்தார். முகத்தைத் தடவிப் பார்த்தார்.

''ராசா... எத்தனை நல்ல மனசு உனக்கு? உன் மனசைப் போலவே மொகமும் அழகாத்தான் இருக்கணும் உனக்கு. எனக்குத்தான் பார்க்கக் கொடுத்து வைக்கலை, நல்லாயிரு!''

கருப்புசாமி பழைய இடத்திற்கு வந்து நிற்கிறான். இந்த நாள் அர்த்தமுள்ளதாகக் கழிந்ததில் அவனுக்கு மனம் நிறைந்தது.

ஜெயபாலும் கமலியும் எதற்கோ சிரித்தார்கள். இவனைப் பற்றி ஜெயபால் நிச்சயம் ஏதாவது கிண்டலடித்திருக்கக் கூடும்.

கருப்புசாமி மனசுக்குள் சிரித்துக் கொண்டான்.




✱ கஞ்சிக்கோடு தொழிற்பேட்டைப் பகுதி

ஒரு பிளாஸ்டிக் விசிறியால் விசிறிக் கொண்டு உட்கார்ந்திருந்தார் பாலக்காடு கலெக்டர் அஜய் குமார். உ.பி. காரரானாலும் மலையாளத்தில் துல்லியமாய் 'சம்சாரிக்கிறார்'. மலையாளம் அறியா நம்முடன் ஆங்கிலத்தில்....

''கேரளத்தில் மின் வெட்டு அறிவிக்கப்பட்டிருக்கிறது. இங்கே பாலக்காட்டில் திடீர் திடீரென்று கரண்ட் கட்டாகிவிடுகிறதே...?'' என்று ஆரம்பிக்கிறோம்.

''இந்த வருடம் பருவமழை கைவிட்டு விட்டது. அதனால் கேரளா முழுவதுமே பிரச்னை. இங்கே பாலக்காட்டில் தண்ணீர் பிரச்னையும் சேர்ந்து கொண்டிருக்கிறது....''

நாம் பார்த்த வரையில் கிணறுகளில் தளும்பும் தண்ணீரும் அங்கங்கே குளம் குட்டைகளும் கண்ணைக் குளிர்வித்தன என்றாலும் மலம்புழா தவிர பாலக்காட்டின் மற்ற ஏழு அணைகளிலும் தண்ணீர் இல்லை என்கிறார் கலெக்டர்.

''அப்படியும் நாங்கள் சிறுவாணி தண்ணீரைத் தமிழ்நாட்டுக்கு அனுப்பிக் கொண்டு தான் இருக்கிறோம்...'' என்று சிரித்து விட்டுத் தொடர்கிறார் :

''பாலக்காட்டில் சுமார் 2500 நீர் நிலைகள் உண்டு. இவை நிறைந்திருந்தால் குடி தண்ணீர் பிரச்னையே இராது. ஆனால் சமீப காலமாக இவை ஆக்கிரமிக்கப்பட்டிருப்பதாலோ, தூர்ந்து கிடப்பதாலோ பூமியின் மேல் பரப்பில் தேங்கி நிற்கும் நீரின் அளவு பாதியாகி விட்டது. இந்த நிலைமையைச் சமாளிக்க 'ஜல்நிதி' என்ற திட்டம் தொடங்கி, அதன் கீழ் நீர் நிலைகளைச் சுத்தப்படுத்தி அவற்றின் கொள்ளளவை அதிகரிக்கச் செய்து வருகிறோம். இந்த மாவட்டத்தில் ஏராளமான காட்டுப் பகுதிகள் அழிக்கப்பட்டு விட்டன. பரம்பிக் குளம், சைலன்ட் வாலி தவிர மற்ற இடங்களில் அடர் காடுகள் இல்லை என்று கூடச் சொல்லலாம். இதற்கும் மாற்றாக, Wasteland Development Project தொடங்கப்பட்டு காடுகள் வளர்க்கப்படவுள்ளன. மத்திய அரசின் திட்டமான இதன் கீழ் பயனடையப் போகும் ஐம்பது இந்திய மாவட்டங்களுள் பாலக்காடும் ஒன்று.''


''பாரதப்புழா நதியிலிருந்து ஏராளமான மணல் கடத்தப்படுவதாக எங்களுக்குத் தகவல்....''

''அது உண்மைதான். ஆனால் அரசு இப்பிரச்னையைப் புரிந்து கொண்டு நடவடிக்கையில் இறங்கியிருக்கிறது. ஆற்றில் மணல் எடுக்கும் உரிமம் வழங்கும் அதி



✱ அஜய் குமார்

- கலெக்டர் அஜய் குமார்.



★ டாடா செல்ட்ரான் கட்டடம்

# ''பாலக்காடு மக்கள் பொதுவுணர்வு மிக்கவர்கள்!''

காரம் உள்ளாட்சி அமைப்புகளின் வசம் இருந்தது. இதன் மூலம் நல்ல வருமானம் கிடைத்ததால் இவ்வமைப்புகள் சகட்டு மேனிக்கு மணல் எடுக்கும் உரிமம் வழங்கின. இப்போது உள்ளாட்சி அமைப்புகளுக்கிருந்த அதிகாரம் ரத்து செய்யப்பட்டு விட்டது. தாசில்தார் அனுமதித்தால்தான் மணல் எடுக்க முடியும். மேலும், ஆற்றில் தண்ணீர் உள்ள இடங்களைச் சுற்றி நூறு மீட்டர் தூரத்துக்கு மணல் எடுப்பது குற்றம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைகளால் ஆற்றுப் படுகை காப்பாற்றப்படும் என்று நம்பலாம்.''

''தாசில்தார்கள் இந்த விஷயத்தில் ஒத்துழைக்கிறார்களா?''

''ஒத்துழைக்கிறார்கள். மேலும் 'பாரதப்புழா சம்ரக்ஷண சமிதி' என்றொரு அமைப்பு உண்டாக்கப்பட்டிருக்கிறது. அரசாங்கம் தனித்து ஒரு முடிவு எடுத்து அதை மக்கள் மேல் திணிக்காமல், அவர்களின் பிரதிநிதிகளை அழைத்துப் பேச்சு நடத்தியது. அப்போது, இது மாதிரி அளவுக்கு மிஞ்சி மணல் எடுப்பதை நிறுத்த வேண்டும் என்று பலரும் ஒப்புக் கொண்டார்கள். அதன்படி பதினோரு நதிகளில் மணல் எடுப்பது தடை செய்யப்பட்டுள்ளது.

''பாலக்காடு மக்கள் பொது நல உணர்வுடன் செயல்படுகிறார்கள் என்பீர்களா...?''


''ஆமாம் அதற்கு இன்னொரு உதாரணமும் தர முடியும். கோவை - கோழிக்கோடு சாலை by-passக்கு சில நிலப்பரப் புகளை ஆர்ஜிதம் செய்ய முனைந்தோம். எம்.எல்.ஏ. சி.எம். சுந்தரம் அப்போது உள்ளாட்சித் துறை அமைச்சர். அவர் சொன்ன தன் பேரில் பலர் தங்கள் நிலங்களை இலவசமாகவே கொடுத்துவிட்டார்கள்! முக்கால்வாசி நிலம் ஆர்ஜிதமாகிவிட்டது. இப்பகுதி மக்கள் எளிமையானவர்கள்; நல்ல விஷயங் களுக்குத் தயங்காமல் ஒத்துழைப்பவர் கள்...''

''தொழில் துறையில் பின் தங்கிய பகுதி என்று பாலக்காடு அறிவிக்கப்பட்டுள்ளதே. அதன் முன்னேற்றத்துக்கு என்ன செய்திருக்கிறீர்கள்...?''

''இன்றைக்கு அதிக வேகமாக வளரும் தொழில் மையங்களுள் ஒன்று பாலக்காடு என்று சொல்லலாம். கஞ்சிக்கோடு தொழிற்பேட்டை பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். தமிழக எல்லையில், தொழில் நகரமான கோவைக்கு மிக அருகே பாலக்காடு அமைந்திருப்பது பெரிய அனுகூலம். ஒப்பு நோக்க, பாலக்காட்டில் நிலம் விலை மலிவு. கேரளத்தின் இதர பகுதிகளைக் காட்டிலும் இங்கே தொழிலாளர் பிரச்னை குறைவு-இதுவும் தமிழ்நாடு பாதிப்பினால் தான்... மேலும், தமிழ் நாட்டைப் பார்க்க இங்கு தண்ணீர்ப் பிரச்னையும் குறைவு. அதனால் தமிழகத்திலிருந்து பலர் இங்கு வந்து தொழில் துவங்குகிறார்கள்.''

– நமது நிருபர்கள்

## ஓம் என்று சொல்லுவோம்



* ஆற்றங்கரையோரம், ஆலமர நிழலில் விசுவநாதர் ஆலயம்.

கல்பாத்தி விஸ்வநாத சுவாமிக்கு இடைவிடாது, குளிரக் குளிர அபிஷேகம் நடந்து கொண்டேயிருக்கிறது. லிங்க வடிவுக்கு மேலாகக் கட்டித் தொங்க விடப்பட்டுள்ள தாரையிலிருந்து மெல்லிய இழையாக நீர் பொழிகிறது. ஆவுடையாரில் மலர்த்தி வைத்த தாமரைப்பூ மங்கலான விளக்கொளியில் அமைதியான அழகுடன் பொலிகிறது.

''சிவன் அபிஷேகப்ரியன் - தலையிலேயே கங்கையைத் தாங்கியிருக்கிறார் அல்லவா - அதனால்தான் இந்த ஏற்பாடு'' என்று விளக்குகிறார் குருக்கள்.

இருபுறமும் தேங்காய் மூடிகளுக்குள் ஏற்றி வைக்கப்பட்டிருக்கும் தீபங்கள் பற்றிக் கேட்கிறோம். 'பிரச்னம்' கேட்டதன் பேரில் இப்படி பிரார்த்தனை செலுத்தும் பழக்கம் இங்கு உண்டு என்கிறார்கள்.


கல்பாத்தி நதியையொட்டி, பாரம்பரிய கேரளப் பாணியில் ஓட்டுக் கூரையின் கீழ்தான் கொலுவிருக்கிறார் விஸ்வநாத சுவாமி. நதியில் குளிக்க வரும் உள்ளூர் வாசிகள் தவறாமல் உள்ளே வந்து தரிசிக்கிறார்கள். அதி அவசரமாக இருந்தால் கூட நிலைப்படி வரை வந்து எட்டிப் பார்த்து தோப்புக்கரணம் போட்டு, பட படவென்று கன்னத்திலும் போட்டுக் கொண்டு, ஒரு சலாமும் அடித்துவிட்டுப் போகிறார்கள். இந்த ஊர்க்காரர்களின் வழிபாட்டு வரிசை இது!

விஸ்வநாத சுவாமியை நோக்கி நின்றால் வலப்புறத்தில் விசாலாக்ஷி அம்மன். மிகச் சிறிய அம்பாள். குறு வடிவமானாலும் மின்னும் அழகு. வெள்ளிக் கவசத்தில் செதுக்கிய நகைகள் விளக்கொளி பட்டு பிரகாசிக்கின்றன.

மூலவர்களைப் புகைப்படமெடுக்க அனுமதிக்கும் அதிசயத்தை இங்குதான் பார்க்கிறோம். 'காசியில் பாதி கல்பாத்தி' என்ற புகழுரைக்குக் காரணமான அதிசயக் கதையையும் கேட்கிறோம்.

லக்ஷ்மி அம்மாள் என்ற மூதாட்டி கல்பாத்தியைச் சேர்ந்தவர். இவர் காசியாத்திரை சென்று திரும்புகையில் ஒரு பாண லிங்கத்தை எடுத்து வந்தார். அதனை நீலா பாகீரதி நதியின் தென் கரையில் பிரதிஷ்டை செய்துவிட்டு, அதற்கு ஆலயம் கட்டித் தரும்படி பாலக்காடு அரசன் இட்டி கோம்பி அச்சனை வேண்டினார். மன்னனும் அவ்

# காசியிலிருந்து விஸ்வநாதர்; கானகத்திலிருந்து ஹேமாம்பிகை!



கல்பாத்தி விஸ்வநாதர்



விசாலாக்ஷி


வாறே செய்து கோவிலுக்கு மானியங்களும் எழுதி வைத்தான்.

இது 14 அல்லது 15 ஆம் நூற்றாண்டில் நடந்திருக்கக்கூடும் என்பதற்கு ஆதாரங்கள் உள்ளன. லக்ஷ்மி அம்மாளின் பூர்வீகம் மாயவரம் ஆதலால், இக் கோவிலின் வழிபாடு, விழா பத்ததிகள் பலவும் தமது சொந்த ஊர் வழக்கப்படியே அமைய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். இது நாள் வரையிலும் அப்படியே நடந்தும் வருகிறது.

லக்ஷ்மி அம்மாள், தாம் காலமான பிறகு தமக்கு இவ்விடத்தில் சிராத்தம் செய்யப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டதாகவும் சொல்கிறார்கள். எனவே, காசியைப் போலவே, பித்ரு காரியங்கள் செய்யும் இடமாகவும், இவ்வூர் பிரபலமடைந்துள்ளது. பல வெளியூர்க்காரர்கள் இதற்கென்றே இங்கு வந்து போகிறார்கள்.

கல்பாத்தி, பாலக்காடு நகரையொட்டி அமைந்துள்ள அக்கிரஹார கிராமம். இங்கிருந்து மலம்புழா செல்லும் சாலையில் பயணமானால் கிளைச்சாலையொன்றில் திரும்பி கல்லேகுளங்கரா ஹேமாம்பிகை கோவிலை அடையலாம். ஏமூர் பகவதி என்றும் இந்த அம்பிகையை அழைக்கிறார்கள்.

கை வடிவில் அமைந்த இந்த அம்பாளை மனத்தில் கொண்டே காங்கிரஸ் கட்சியின் சின்னத்தை இந்திரா காந்தி தேர்ந்தெடுத்தார் என்கிறார்கள். எம்.ஜி.ஆரின் ஆதர்ச தெய்வமான மூகாம்பிகை, இந்திரா காந்தியின் ஆதர்ச தெய்வமான ஹேமாம்பிகையின் சகோதரி என்பது மற்றும் ஒரு



ஆளரவமற்ற ஹேமாம்பிகை கோவில்



* ஹேமாம்பிகை சந்நிதி

வியப்பூட்டும் தகவல். கன்னியாகுமரியில் பாலாம்பிகையையும், படகராவில் லோகாம்பிகையையும், கொல்லூரில் மூகாம்பிகையையும் பாலக்காட்டில் ஹேமாம்பிகையையும் பரசுராமர் பிரதிஷ்டை செய்ததாகக் கதை வழங்குகிறது.

**ப**ல நூறு வருஷங்களுக்கு முன்னால், ஹேமாம்பிகையின் கோயில் மலம்புழா அணைக்கட்டு இன்று உள்ள இடத்துக்கு அப்பால், அடர்ந்த காட்டுப் பகுதியில் இருந்ததாம். முத்திக்குளம் என்ற அவ்விடத்துக்கு மிகுந்த சிரமத்துடன் சென்று தினமும் வழிபட்டனர் குரூர், கைமுக்கு நம்பூதிரிகள். மிகவும் வயதான இவர்களுக்கு இது நாள்பட நாள்பட, இயலாத காரியமாகி வந்தது. அப்படியும் வழக்கத்தை விடாது தொடர்ந்தனர். ஒரு நாள், தரிசனம் முடித்து வீடு திரும்புகையில் சோர்வு மிகுதியால் ஒரு மரத்தடியில் தங்கி விட்டனர். அப்போது ஒரு மூதாட்டி அவர்கள் எதிரில் தோன்றி பழங்களைக் கொடுக்க, அவற்றை உண்ட கணத்தில் கிழவர்களின் களைப்பு பறந்து போனது. மறுநாள் அதே வழியில் செல்கையில் அலங்கார யானைக்கு அருகே பொன்னிற அம்பிகை (ஹேம-தங்கம்) தோன்றி இவர்களுக்குத் தரிசனம் தந்திருக்கிறாள். அம்பாள் தம்மை அவர் வீட்டருகிலேயே குளத்தில் தினமும் தரிசிக்கலாம் என்றும் கருணையுடன் சொல்ல, பக்தர்களும் உளம் மகிழ்ந்து போனார்கள்.

விடிந்ததும் வெளியே சென்று பார்த்தனர் நம்பூதிரிகள். வீட்டை அடுத்த குளத்திலிருந்து ஹேமாம்பிகையின் எழில்மிகு இரு கரங்கள் வெளிப்பட ஆரம்பித்தன. ஆர்வத்தில் தம் நிலை இழந்த குரூர், நீருக்குள் குதித்துச் சென்று கரங்களைப் பற்ற, அவை அக்கணமே இரு கற்களாக மாறின.

ஊரார் ஒன்று சேர்ந்து குளத்தைத் தூர்த்து, கையுருவங்களைக் கற்களினருகே பிரதிஷ்டை செய்தார்கள். ஹேமாம்பிகையின் அம்சமாகக் கரங்களை வழிபடலானார்கள்.

ஒரு தகவல். ஹேமாம்பிகை கோயிலின் நியமங்களை வகுத்துக் கொடுத்திருப்பவர் ஆதி சங்கரர்!

வாசகர் தகவல் :
த.கி. நீலகண்டன், எஸ். இந்திரா, கதா.



SBF

# சுலிவன் கார்டன் பெனிபிட் பண்டு லிமிடெட்

பதிவு அலுவலகம் :- 8, கற்பகாம்பாள் நகர், லஸ்
மைலாப்பூர், சென்னை - 600 004 போன் : 4993241/4990953
கிளை அலுவலகம் : 132, ராசப்ப செட்டி தெரு,
பார்க் டவுன் (முதல் மாடி), சென்னை - 600 003
போன் : 563055

ரொக்க நடவடிக்கை : காலை 8:30 முதல் மாலை 5:30 வரை
ஞாயிறு காலை 8:30 முதல் பகல் 12:30 வரை
வரவு செலவுகள் அங்கத்தினர்களுடன் மட்டுமே
(வெள்ளிக் கிழமை விடுமுறை)


## கடன்

நகைகள் பேரில் கிராம் 10க்கு ரூ. 3000/- வழங்கப்படும்.
சென்னை மாநகரில் உள்ள கட்டிடங்கள் பேரிலும் வழங்கப்படும்.

### இயக்குநர்கள் :

| பெயர் : | விலாசம் : |
|---|---|
| திரு T. V. சீனிவாசன் | 15, லஸ் அவின்யூ, சென்னை - 4. |
| திரு P. K. சந்திரசேகரன் | 89, போயஸ் கார்டன், சென்னை 86 |
| திரு ப்ரவின் கோவிந்தராம் | 22, போயஸ் கார்டன் சென்னை 86 |
| திருமதி P. C. சுந்தரவதனி | சுந்தரவதனி கல்யாண மண்டபம் எழும்பூர், சென்னை 7- ✆ 8281076 |
| திரு P. K. C. ரமேஷ் | 89, போயஸ் கார்டன், சென்னை - 86 |
| திரு D. தனுஷ்கோடி | 21/1A, பழைய குயவர்பாளையம் ரோடு, மதுரை - 625 009 |
| திரு P. C. பாஸ்கர் | 89, போயஸ் கார்டன், சென்னை - 86 |
| திரு K. R. நிரஞ்சன் குமார் | 1, பின்னி ரோடு, சென்னை - 86 |
| திரு P. C. சியாம் சுந்தர் | 89, போயஸ் கார்டன், சென்னை - 86 |
| திரு K. G. கிருஷ்ணன் | Y-210, 2வது அவென்யூ, அண்ணா நகர், சென்னை - 40. |

**OUR VALUED DEPOSITOR**



**Sri K. G. Appusamy**
Ex. Chairman &
Managing Director –
AIR INDIA

சேமிப்பே செழிப்புக்கு வழிகாட்டும்



வாண வேடிக்கைகள்....

கிறார். இவர் நிலை தடுமாறாமல் இருக்க வேண்டி
மற்றொருவர் அமர்ந்து கழுத்தில் கயிறு கட்டிப் பிடி
கொள்கிறார்!

பக்கத்து ஊரான வல்லங்கியிலிருந்து இதே போ
ஊர்வலம் புறப்பட்டு வந்து, நெல்லிக்குளங்கர கோ
எதிரே, அறுவடை முடிந்த வயல் வெளியில் காத்து
நிற்கிறது. யானைகள் நிற்கும் அலங்காரப் பந்தலின்

# திகைக்கச் செய்த திருவிழா!

குருவாயூர் பத்மநாபன் கேரளாவிலேயே மிக உயரமான யானை. நெல்லிக்குளங்கர பகவதியை இவர் முதுகில் சுமந்து வர, பின்னால் அமர்க்களமான அலங்காரங்களுடன் மேலும் எட்டு யானைகள்.

பாலக்காட்டிலிருந்து சுமார் இரண்டு மணி நேரப் பயண தூரத்தில் உள்ள நெம்மாரா என்ற சிற்றூரிலிருந்து புறப்படுகிறது ஊர்வலம். முன்னணியில் பஞ்ச வாத்தியங்கள் முழங்குகின்றன. அந்தத் தாள கதியைக் காதில் வாங்கிக் கொள்ளாமல், வேறு நவீன லயத்துக்கு உற்சாக நடனமிடும் இளைஞர்கள் பட்டாளம். குறுகிய சாலையில் ஊர்வலமாக இந்தப் பட்டாளம் வர, எதிர்ப்படும் தந்தி, டெலிபோன், மின் கம்பிகளைத் தவிர்க்க வேண்டி யானை மேல் அமர்ந்திருப்பவர் மல்லாந்து படுத்துக் கொண்டு பகவதியை நெஞ்சில் சாய்த்துக் கொள்

• அலைபுரளும் உற்சாகம்....



ர் பின்
க்

த்தொரு

ர்
மாதும்
கூட்டம்,
துக்கு
புது
ம் போல்
க் கொண்
றது.

ம்மார
ம் நெல்லிக்
ர் கோவி
றுபக்கத்
ய, அங்
அலங்காரப்
யானை
ணிவகுத்து
றன.

* நெல்லிக்குளங்கர பகவதியைச் சுமந்து நிற்கும் குருவாயூர் பத்மநாபனும் 'சகா'க்களும்...





பின்னணியில் கம்பீரமாக நெல்லியம்பதி மலைகள் உயர்ந்து நிற்க, வல்லங்கியிலிருந்து வந்த அலங்கார யானைகள் அந்த மாலைப் பொழுதில் அசைந்து ஆடி, வயல் வெளி கடந்து, படியேறி கோயிலுக்குள் நுழைகின்றன. இந்த சமயத்தில் பஞ்சவாத்தியங்களின் முழக்கம் உச்சத்தை எட்ட, நெம்மார கிராமத்து



* மாறாத மரபுகள்...

மக்கள் அதை மூழ்கடிக்கும் ஆரோக்கியமான போட்டி மனப்பான்மையுடன் அதிர்வேட்டுகளை விட ஆரம்பிக்கிறார்கள்.

வல்லங்கியிலிருந்து ஸ்ரீதிவாலன் என்கிற யானை சுமந்து வரும் ஸ்ரீ குறும்ப பகவதிக்குத்தான் (அட்டைப் படம்) கோயிலுக்குள் நுழைய முதல் உரிமை. ஸ்ரீ குறும்ப பகவதியின் (இவர் கண்ணகியின் அம்சம் என்கிறார்கள்!) பரிவாரம் வெளியேறிய பின், நெம்மாரவிலிருந்து வந்து காத்திருக்கும் பகவதி, கோயிலுக்குள் பிரவேசிக்கிறார். இப்போது அதிர்வேட்டால் செவிப்பறை கிழிப்பவர்கள் வல்லங்கிக்காரர்கள்!

இரு ஊர் பரிவாரங்களும் கோவிலில் நுழைந்து வெளியேறிய பின் வாண வேடிக்கைகள் விடிய விடியத் தொடர்கின்றன.

ஆண்டுதோறும் ஏப்ரல் ஆரம்பத்தில் நடக்கும் இந்தத் திருவிழா, இளைஞர்கள் உற்சாகம் காட்டி உழைப்பதால் கடந்த 20-25 ஆண்டுகளாக திருச்சூர் பூரத்துக்கு அடுத்தபடியான முக்கிய ஸ்தானம் பெற்றுள்ளது. பொது மக்களிடம் வசூலிக்கப்படும் சுமார் பன்னிரண்டு லட்ச ரூபாய் இத்திருவிழாவில் செலவாகிறது. குருவாயூர் பத்மநாபனை வாடகைக்கு எடுக்க மட்டும் இவ்வாண்டு நாற்பதாயிரம் ரூபாய் செலவழித்துள்ளார்கள்! மொத்த செலவில் சுமார் ஒரு லட்சம், தமிழ்நாட்டுக்காரர்களால் ஏற்கப்படுகிறதாம்.

இதன் பின்னணியில் நெஞ்சைத் தொடும் கிராமத்துக் கதைகள் உள்ளன: ராமன் எழுத்தச்சன் என்ற ஏழை விவசாயி வேலை முடிந்து வீடு திரும்புகையில் எதிர்ப்பட்ட ஒரு பெண்மணி, தாகத்தால் தவித்துக் கொண்டிருந்தாள். தண்ணீர் கேட்ட அவளுக்கு, தான் மண் பானையில் எடுத்து வந்திருந்த பாலை அருந்தக் கொடுத்தார் ராமன். தாகம் தீர, அத்தனை பாலையும் குடித்தாள் அப்பெண். வீடு திரும்பிய எழுத்தச்சன், பானை,பாலுடன் ததும்பிக் கொண்டிருப்பதைக் கண்டு அதிசயித்தார். தேவியின் திருவிளையாடலை உணர்ந்து, அவரைத் தம் வீட்டு உறியில் ஸ்ரீ குறும்ப பகவதியாய்ப் பிரதிஷ்டை செய்தார்.

இந்த வல்லங்கி பகவதி கதைக்குப் போட்டியாக நெம்மார பகவதிக்கும் ஒரு கதை உண்டு: குடகர நாயர் என்பவர் ஓலைக் குடையுடன் குளிக்கச் சென்றார். குளக்கரையில் குடையை வைத்துவிட்டுக் குளித்துத் திரும்பியவரால் அதை மீண்டும் கையில் எடுக்க முடியவில்லை. 'இது தேவியின் விருப்பம்' என்ற முடிவுக்கு வந்து குடை வடிவத்திலேயே பகவதியை வழிபடலானார்.

இவ்விரண்டு கிராம தேவதைகளின் பிறந்த நாளைத்தான் இரு கிராமங்களும் போட்டி போட்டுக் கொண்டு கொண்டாடுகின்றன.


இயற்கை அமைத்துத் தந்த மேடையில் அரங்கேறும் இந்தக் கலையழகு மிகுந்த நாடகத்தை 'நெம்மார-வல்லங்கி வேலா' (வேலா-திருவிழா) என்றழைக்கிறார்கள்.

புழுதி பறக்க வட்டமிடும் கூட்டத்திடையே நின்று நிறைப் போகையிலும் கேரள மக்களின் - பாலக்காட்டுக்காரர்களின் - அழகுணர்ச்சியும், கூட்டு முயற்சியும் பாரம்பரியப் பற்றும் பிரமிப்பூட்டிக் கொண்டேயிருக்கின்றன.

– சீதாரவி

வாசகர் தகவல்: சந்தோஷ்

அட்டை, மற்ற வண்ணப்படங்கள், பாலக்காடு தொடர்பான இதர புகைப் படங்கள்: கோபிநாத்




"என்னோட வீட்டுக்கு வந்து பாருங்க; கிளீன் கொஞ்சம்!"

"அவ்வளவு அழகா பராமரிக்கிறீங்கன்னு சொல்லுங்க...!"

"ஊஹூம்; கிளி ஜோசியர் ஒருத்தரை குடிவச்சிருக்கேன்!"

- சீர்காழி வி. ரேவதி



பாடசாலை வித்யார்த்திகளின் ஒரு பகுதி

மஹான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதரவர்களால், 1542-ல் ஸ்தாபிக்கப்பட்டு, தொடர்ந்து நடந்து வரும் வேத பாடசாலையை ஸமிதியானது தாய் போல் இரங்கிக் காப்பாற்றி வருகிறது. தற்போது பாடசாலையில் 120 மாணாக்கர்கள் வேதாத்யயனம் செய்து வருகின்றனர். அவர்களுக்கு ஓர் நாள் உணவளிக்க,உணவு வகைகளை அனுசரித்து சுமார், முறையே ரூ. 300/- அல்லது 500/- ஆகிறது. இந்தத் தர்மம் நிரந்தரமாக நடக்க ரூ. 3000/- அல்லது 5000/- மூலதனம் ஏற்படுத்தியோ, அவ்வப்போது தொகை அனுப்பியோ, ஒரு குறிப்பிட்ட தினத்தில் உணவளிக்கும் கைங்கர்யத்தில் பங்குகொள்ளக் கோருகிறோம். நன்கொடை அனுப்ப வேண்டிய பொருளும் முகவரியும் :

**அத்வைத வித்யாசார்யா மஹாராஜா ஸாஹேப் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்ய ஸ்மரண ஸமிதி,**
**D76, மூன்றாவது கிராஸ் தெரு, ஸ்ரீநகர் காலனி,**
**கும்பகோணம் - 612 001.**

செக் (or) டிராப்ட் முதலியவைகளை A.V.M.S.G.D.P.S. ஸமிதி என்ற பெயருக்கு அனுப்பலாம்.

*****இந்த நன்கொடைக்கு 80-G விதியின்படி வருமான வரிவிலக்கு உண்டு*****

## வேத வைதிக நூல்கள் (விலை தபால் செலவு உட்பட)

I
1. ரிக்வேத ச்ருங்கலா - நாகராக்ஷரம் - விலை ரூ. 60/-
2. யஜுர்வேத தைத்திரீய ஸம்ஹிதா - நாகராக்ஷரம் - 7 காண்டங்கள் - விலை ரூ. 165/-
3. ஸாமவேத ஸம்ஹிதா - க்ரந்தாக்ஷரம் - 2 பாகங்கள்
   (முதல் பாகம் - ரூ. 165/-, இரண்டாம் பாகம் - ரூ. 210/-)
4. ஸாமவேத அஷ்ட ப்ராம்மணம் - நாகராக்ஷரம் - 3 பாகங்கள்
   (முதல் பாகம் - ரூ. 210/- இரண்டாம் பாகம் - ரூ. 110/- மூன்றாம் பாகம் - ரூ. 85/-)
5. ஸாமவேத பூர்வாபர ப்ரயோகம் - க்ரந்தாக்ஷரம் - ரூ. 80/-
5. சாந்தி குஸுமாகரம் (2 பாகங்கள்) - விலை ரூ. 170/-
   (1 ம் பாகம் ரூ. 85/- 2 ம் பாகம் ரூ. 85) (க்ரந்தாக்ஷரம்)

II கிரந்தாக்ஷரத்தில் காரிகையுடன் பிரம்மஸ்ரீ முத்துச்ரௌதிகளால் பதிப்பிக்கப்பட்ட கிரந்தங்களின் மறுபதிப்புகள்
1. போதாயன பூர்வாபர ப்ரயோகம் - ரூ. 95/-
2. ஆபஸ்தம்ப பூர்வாபர ப்ரயோகம் - ரூ. 90/-
3. ஆபஸ்தம்ப ச்ராத்த ப்ரயோகம் - ரூ. 55/-
4. ஆச்வலாயன பூர்வாபர ப்ரயோகம் - ரூ. 85/-
5. ஆச்வலாயன ச்ராத்த ப்ரயோகம் - ரூ. 50/-
6. கல்ப சிந்தாமணி - ரூ. 55/-

III நாகராக்ஷரம்
1. மனாசேச்லோக - ராமாந்த்ரபசே ச்லோக - ரூ. 25/- (மராத்தி மூலம் தமிழ் பதவுரை)
2. ஸ்ரீ ராதாக்ருஷ்ண பூஜாவிதானம் - ரூ. 25/- (ஸம்ஸ்க்ருதமூலம் - தமிழ் பதவுரை)
3. நளோதயம் - நைஷதகாவ்யத்தின் சுருக்கம் - ரூ. 25/- (ஸம்ஸ்க்ருத மூலம் - ஆங்கில பதவுரை)
4. வேதபாட வழிமுறை (syllabus) ரிக், யஜுர், ஸாம - ரூ. 25/-
5. ராமோதந்தம் - நாகராக்ஷரம் - விலை ரூ. 25/-
6. லௌகாக்ஷ ஸூத்ரம் - ஆர்ட் பேப்பரில் - விலை ரூ. 25/-

V.P.P. யில் அனுப்புவதில்லை. முழுத் தொகையையும் M.O. (or) Draft மூலம் மேலே குறிப்பிட்டுள்ள முகவரிக்கு அனுப்பவும். செக் மூலம் அனுப்ப வேண்டாம். ''எமது நூல்கள் பற்றிய விவரமான கேட்லாக் வாங்க விரும்புவோர் ரூ. 3/- தபால்தலை அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.''

**பிரஸிடெண்ட் - டிரஷரர் - A.V.M.S.G.D.P.S. ஸமிதி, D-76, மூன்றாவது கிராஸ் தெரு, ஸ்ரீநகர் காலனி, கும்பகோணம் - 612 001.**


நேரில் வாங்க விரும்புவோர் கண்டிப்பாக - ராஜா வேதகாவ்ய பாடசாலை, பாகசாலை தெரு, (சக்கர படித்துறை அருகில்) கும்பகோணம் - 612 001 என்ற விலாசத்தில் பெற்றுக் கொள்ளவும்.

## 53. வந்தாரே தீக்ஷிதர்!

சம்பு சாஸ்திரியும் சாருவும் தமிழ் நாட்டின் கிராமங்களில் ஒரு பெரிய கிளர்ச்சியை உண்டு பண்ணிக் கொண்டிருந்தார்கள். ஆரம்பத்தில் சாஸ்திரி கால்நடையாக நடந்தும், சாலையில் போய்க் கொண்டிருந்த போக்கு வண்டிகளில் ஏறிக்கொண்டும் கிராமம் கிராமமாகக் குழந்தையுடன் ஊர்ச் சாவடியிலோ, கோவிலிலோ அல்லது குளக்கரையிலோ உட்கார்ந்து கொள்வார். யாரோ பெரியவர் வந்திருக்கிறாரே என்று ஜனங்கள் வந்து சேர்வார்கள். அவர்களிடம் பேசத் தொடங்குவார். நமது பாரத தேசம் முன்னே எவ்வளவு மேன்மையாக இருந்தது என்பதை எடுத்து விவரிப்பார். இந்தக் காலத்தில் தேசத்துக்கு ஏற்பட்டிருக்கும் தாழ்வையும், ஜனங்களுக்குள் ஏற்பட்டிருக்கும் தீய பழக்க வழக்கங்களையும் எடுத்துக் காட்டுவார். சாதி, மத துவேஷங்களினால் விளையும் தீங்குகளையும், மது பானத்தினால் உண்டாகும் கெடுதிகளையும் விவரிப்பார். தாம் சொல்வதற்கெல்லாம் ஆதாரமாக, புராண இதிகாசங்களிலிருந்தும், திருமந்திரம், திருக்குறள் முதலிய தமிழ் நூல்களிலிருந்தும் மேற்கோள்கள் எடுத்துக் காட்டுவார். இடையிடையே, குழந்தை சாருவும் தாத்தா சொல்லிக் கொடுத்த பாட்டு ஏதாவது சொல்வாள்.

சீக்கிரத்தில் இவர்களுடைய கீர்த்தி நெடுகப் பரவத் தொடங்கியது. ''ஒரு பெரியவரும் குழந்தையுமாக ஊர் ஊராய் வருகிறார்களாம், அந்தப் பெரியவர் ரொம்பப் படித்தவராம். சாஸ்திரங்களில் கரை கண்டவராம். தேசீய விஷயங்களை அவர் சொல்கிறது போல் அவ்வளவு மனத்தில் படியும்படி பெரிய பெரிய தலைவர்கள் கூடச் சொல்கிறதில்லையாம்'' என்று கிராமங்களில் ஜனங்கள் பேசிக் கொண்டார்கள்.

''தீண்டாமை ஒழிய வேண்டுமென்று



மகாத்மா சொல்கிறாரோ, இல்லையோ? அதைப்பற்றி மற்றவர்கள் யாராவது பேசினால் ஜனங்களுக்குக் கோபம் வருகிறது. ஆனால், சம்பு சாஸ்திரி பேசுகிறபோது எல்லாரும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். தீண்டாமை வழக்கத்துக்கு நம்ம சாஸ்திரங்களிலே இடங் கிடையாதென்று அவர் அவ்வளவு தெளிவாய் எடுத்துச் சொல்கிறார்'' என்று சீர்திருத்தப் பற்றுள்ளவர்கள் சொன்னார்கள்.

''அவரோடு ஒரு குழந்தை வருகிறதல்லவா? அதைப் பார்க்கிற

தற்குப் பதினாயிரம் கண் வேணும். அந்தக் குழந்தை காந்தி பாட்டுப் பாடுகிறது. அந்தப் பாட்டைக் கேட்கிறதற்கு இருபதாயிரம் காது வேணும்'' என்று வேறு சிலர் சொன்னார்கள்.

''சம்பு சாஸ்திரிதானே? ஓஹோஹோ! அவர் சாதாரண மனுஷரா என்ன? யோகின்னா அவர்? மந்திர சக்தியுடையவராச்சே? அவர் வாயாலே சாபங் கொடுத்தாலும் கொடுத்ததுதான்; அநுக்ரஹம்

# பூமி

## அமரர் கல்கி

பண்ணினாலும் பண்ணினதுதான்'' என்று வதந்தி ஒரு பக்கத்தில் பரவிக் கொண்டிருந்தது.

''அந்தப் பெரியவரும் குழந்தையும் ஒரே சமயத்தில் மூன்று ஊரில் இருந்திருக்காளாம். மூன்று ஊரிலும் பொதுக் கூட்டத்திலே பேசியிருக்காளாம். கலியுகத்

திலே இந்த மாதிரி அதிசயத்தை இதுவரையிலே பார்த்ததில்லை'' என்றும், ''சம்பு சாஸ்திரியை அரெஸ்ட் பண்ணி ஜெயிலிலே போட்டுடறதுன்னு சர்க்காரிலே ஆன மட்டும் பார்த்தாளாம்; முடியலையாமே? போலீஸ்காரன் வந்தானோ, இல்லையோ, தாத்தாவும் பேத்தியும் மாயமாய் மறைஞ்சுட்றாளாமே?'' என்றும், இம்மாதிரி அவர்களுக்கு ஆச்சரியமான சக்திகளையெல்லாம் கற்பித்துப் பேசிக் கொண்டார்கள்.

ஆனால் விஷயம் தெரிந்தவர்கள், ''சேச்சே! அதெல்லாம் சுத்தப் பிசகு. இந்த மாதிரி குருட்டு நம்பிக்கைதான் தேசத்தைக் கெடுக்கிறது. சம்பு சாஸ்திரியை என்னத்துக்காகச் சர்க்காரிலே அரெஸ்ட் பண்ண வர்றா? அவர்தான், கவர்ன்மெண்ட் பேச்சையோ, வெள்ளைக்காரன் பேச்சையோ எடுக்கறதேயில்லையே? நம்ம ஜனங்கள் ஒருத்தருக்கொருத்தர் சண்டை போட்டுக் கொள்ளக் கூடாது, சாதி வித்தியாசமெல்லாம் போகணும், தீண்டாமை ஒழியணும், கள்ளு குடிக்கக்கூடாது, கதர் கட்டிக்கணும் - இவ்வளவுதானே அவர் சொல்றது? இதுக்காக அவரைச் சர்க்காரிலே அரெஸ்ட் பண்ண வருவாளா, என்ன?'' என்று உண்மையை எடுத்து விளக்கினார்கள்.

இப்படிப் பொய்யும் மெய்யுமாக அவர்களைப் பற்றிச் செய்திகள் எங்கும் பரவின. குடிகாரர்களிடையில் குருட்டு நம்பிக்கை பரவுதல் எளிதல்லவா?

ஒரு கிராமத்தில் சம்பு சாஸ்திரி பஜனை செய்து கொண்டு ஊரைச் சுற்றி வந்தார். கிராமவாசிகள் கும்பலாக அவரைச் சூழ்ந்து வந்தார்கள். வழியில் ஓரிடத்தில் கள்ளுக்கடை இருந்தது. அங்கே சிலர் குடித்துக் கொண்டிருந்தார்கள். அரை போதையிலிருந்த ஒருவன், ''அடே! அந்தப் பெரியவரும் குழந்தையும் வர்றாங்களாண்டா! குடிக்கிறவங்களை அவர் சபிக்கப் போறாராண்டா!'' என்றான். அவ்வளவுதான்; குடிகாரர்கள் அவ்வளவு பேரும் கையிலிருந்த கலயங்களைப் பொத்துப் பொத்தென்று போட்டு உடைத்துவிட்டு ஓட்டம் எடுத்தார்கள். இந்த மாதிரி இன்னும் சில இடங்களிலும் நடக்கவே, சம்பு சாஸ்திரி வரப் போகிறார் என்று அறிந்ததும், கள்ளுக் கடைக்காரர்கள் தாங்களே அன்று கடையை மூடி விடத் தொடங்கினார்கள். அநேக கிராமங்களில் சாஸ்திரியும் சாருவும் வந்து விட்டுப் போன பிறகு, குடி அடியோடு நின்று போய்விட்டது.

மனுஷ்யர்களுடைய வாழ்க்கையானது ஜாதக ரீதியாக அந்தந்தக் கிரகங்களின் சஞ்சாரக் கிரமப்படி நடைபெறுவதாகவும், மனுஷ்யர்களுடைய வாழ்க்கையில் திடீரென்று சில சமயம் ஏற்படும் மாறுதல்களுக்குக் காரணம் கிரகங்களின் பெயர்ச்சிதான் என்றும் நிச்சயமாய்க் கூறுவோர் உண்டு. சாதாரணமாக இந்த மாதிரி ஜாதக பலன்களிலும், கிரகக் கோளாறுகளிலும் நம்பிக்கையில்லாதவர்கள் கூட, 'ஒருவேளை அதெல்லாம் உண்மையாயிருக்குமோ?' என்று நினைக்கும்படியான சந்தர்ப்பங்கள் சில நேரிடுகின்றன. சம்பு சாஸ்திரிக்கு இந்தக் காலத்தில் திடீரென்று ஏற்பட்டிருந்த பிராபல்யத்தைப் பார்த்தால், கிரக சஞ்சாரத்தின் பலன் என்றே நினைக்கும்படியாக இருந்தது. நாளாக ஆக, ''எங்கள் ஊருக்கு வரவேண்டும்'', ''எங்கள் ஊருக்கு வரவேண்டும்'' என்று நாலு பக்கங்களிலிருந்தும் அவருக்கு அழைப்புக்கள் வரத் தொடங்கின. வரவேற்பு உபசாரங்களும் அதிகமாயின. சம்பு சாஸ்திரி ஓர் ஊருக்கு வருகிறார் என்றால், ஏதோ, திருவிழாக்களுக்கு அலங்காரம் செய்வது போல் ஊரை அலங்கரிப்பார்கள். எத்தனையோ நாளாகச் சேர்ந்திருந்த குப்பை கூளங்கள் எல்லாம் போய் ஊரே சுத்தமாகிவிடும். அப்புறம், பெரியவரையும் குழந்தையையும் வைத்து ஊர்வலம் விடுவார்கள். தேசிய பஜனைகள், மேள தாளங்கள் எல்லாம் தடபுடல்படும். சம்பு சாஸ்திரி எவ்வளவுதான் இந்த ஆர்ப்பாட்டங்கள் எல்லாம் வேண்டாமென்று சொன்னாலும் கிராமவாசிகள் கேட்பதில்லை.

முதலில், ஒரு கிராமத்தில் ஒரு பெரிய மனுஷர், சம்பு சாஸ்திரியையும் சாருவை

## அருள்வாக்கு

எல்லாவற்றுக்கும் ஒரு குறுக்கு வழி இருக்கிறதே, அந்த மாதிரி ஸம்ஸாரத்திலிருந்து விடுபடுவதற்கு short-cut இல்லையா?

ஒன்றே ஒன்று இருக்கிற மாதிரி பகவானே சொல்லியிருக்கிறார். 'ஒருத்தன் செத்துப் போகிற ஸமயத்தில் எதை நினைத்துக் கொண்டு உடலை விடுகிறானோ, அதையே மறு ஜன்மாவில் அடைகிறான். என்னையே ஸ்மரித்துக் கொண்டு எவன் சரீரத்தை விடுகிறானோ, அவன் என்னை அடைந்து விடுகிறான்' என்று சொல்லி ''நாஸ்தி அத்ர ஸம்சய:'' - ''இதில் ஸந்தேஹமே இல்லை'' என்று 'காரண்டி' கொடுத்திருக்கிறார்!



'ரொம்ப ஸுலபமான வழியாக இருக்கே; வாழ்க்கை முழுக்க எப்படிக் குட்டிச்சுவராக நடத்தினாலும் அந்திம சமயத்தில் மட்டும் பகவானை நினைத்துக் கொண்டால் போதுமாமே! அதனாலேயே இந்த ஜனன-மரணச் சக்ரத்திலிருந்து தப்பித்துக் கொண்டு விட முடியுமாமே!' என்று தோன்றுகிறது.

ஆனால் பகவான் இங்கே 'பொடி' வைத்துப் பேசுகிறார். 'கடைசிக் காலத்தில் என்னை நினைத்துக் கொண்டு என்பதற்கு 'அந்தகாலே மாம் ஸ்மரன்' என்று சொன்னால் போதும். ஆனால் பகவான் அப்படிச் சொல்லவில்லை. 'அந்தகாலே ச மாம் ஏவ ஸ்மரன், என்று ஒரு 'ச'வும் 'ஏவ'வும் போட்டு ஸம்ஸார நிவ்ருத்தி இத்தனை ஸுலபமில்லையப்பா என்று ஆக்கிவிட்டார். இந்த 'ச'வுக்கும் 'ஏவ' வுக்கும் என்ன அர்த்தம்? 'அந்த காலே 'ச' என்றால் 'சாகிற ஸமயத்திலும்' என்று அர்த்தம். 'மாம் ஏவ' என்றால் 'என்னை' என்று மட்டும் அர்த்தமில்லை; 'என்னை மட்டுமே' என்று அர்த்தம்.

அவரை மட்டுமே அந்தியத்திலும் 'ஸ்டெடி'யாக ஸ்மரிக்க வேண்டும். அப்போதுதான் மோக்ஷம்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.


யும் ஊர்வலமாய் அழைத்துச் செல்வதற்காக, சமீப நகரத்திலிருந்து ஒரு மோட்டார் தருவித்திருந்தார். அந்தச் சமயம் சம்பு சாஸ்திரிக்கு மோட்டார் என்றாலே பயமாயிருந்தது. எந்த மோட்டாரைப் பார்த்தாலும், அது சாருவைத் தம்மிடமிருந்து கொண்டு போவதற்காகவே வந்திருக்கிறதென்று அவர் துணுக்குமுற்றார். ஆகவே, அவர் அந்த மோட்டாரில் ஏறுவதற்குக் கண்டிப்பாக மறுத்தார். "ஒரு கட்டை வண்டி கொண்டு வந்து அதில் ஊர்வலம் விடுங்கள், எனக்குச் சம்மதம், ஆனால் மோட்டாரில் மட்டும் ஏறமாட்டேன்" என்றார். அந்த ஊரிலிருந்த சில உற்சாகிகள் உடனே ஒரு மொட்டை வண்டியைப் பிடித்து அதை அலங்காரம் செய்து கொண்டு வந்து நிறுத்தினார்கள். அந்த வண்டியில் ஊர்வலம் நடந்தது.

இந்தச் செய்தி பரவவே, மாடு பூட்டிய ரதத்தில் சம்பு சாஸ்திரியை ஊர்வலம் விடுவதென்பது சகஜமாகி விட்டது. இதில் கிராமத்துக்குக் கிராமம் பெரிய போட்டி.

ஓர் ஊரிலே நாலு மாடு பூட்டிய ரதத்தில் ஊர்வலம் நடந்தால், அடுத்த ஊர்க்காரர்கள் போட்டி போட்டுக் கொண்டு எட்டு மாடு கட்டிய ரதத்தில் ஊர்வலம் விடுவார்கள். அதற்கு அடுத்த ஊர்க்காரர்கள் பதினாறு மாடு பூட்டுவார்கள்! குழந்தை சாருவுக்கு இதெல்லாம் வேடிக்கையாகவும் சந்தோஷமாகவும் இருக்கும். ஆனால் சம்பு சாஸ்திரிக்கோ இவை கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை. இருந்தாலும், இதுவும் பராசக்தியின் ஆக்ஞை என்பதாக எண்ணிக் கொண்டு வேண்டா வெறுப்பாய் ஊர்வல உபசாரங்களுக்கு உட்படுவார்.

இம்மாதிரி சம்பு சாஸ்திரியும் சாருவும் செங்கற்பட்டு, வடாற்காடு, தென்னாற்காடு, சேலம், திருச்சிராப்பள்ளி ஜில்லாக்களில் எல்லாம் பிரயாணம் செய்து, உடையார்ப்பாளையந் தாலுக்காவுக்கு இப்போது வந்திருந்தார்கள். ராசேந்திர சோழபுரம் என்ற கிராமத்துக்கு அவர்கள் அன்று வருவதாக இருந்தது. ஊரில் வீதிகளெல்லாம் சுத்தம் செய்யப்பட்டு, வீட்டு வாசல்களில் கோலம் போட்டிருந்தார்கள். எங்கே பார்த்தாலும் தோரணங்களும், 'நல்வரவு' வளைவுகளும் காணப்பட்டன. ஊரிலுள்ள புருஷர்கள் எல்லாம் ஊருக்கு வெளியே, பெரியவரையும் குழந்தையையும் வரவேற்பதற்காகப் போய்விட்டனர். வீட்டு வாசல்களில் எல்லாம் ஊர்வலத்தை எதிர்பார்த்துக் கொண்டு ஸ்திரீகள் நின்றார்கள்.

அந்தச் சமயத்தில், அந்தக் கிராமத்து வீதியில் ஒரு மனுஷர் அவசர அவசரமாக நடந்து போய்க் கொண்டிருந்தார். அவர் வேறு யாருமில்லை; நமது பழைய சிநேகிதர் நெடுங்கரை சங்கர தீக்ஷிதர்தான். "இன்னிக்கு இந்த ஊரிலே என்ன விசேஷம்?" என்று கேட்பதற்கு அவருடைய நாக்கு துடித்துக் கொண்டிருந்தது. ஆனால், புருஷர்களே இல்லாமல் வீட்டு வாசல்களிலெல்




– சிரிராமன்

லாம் ஸ்திரீகளாய் நிற்கவே, ''இதென்னடா வம்பு?'' என்று அவர் மேலும் விரைவாக நடந்தார். கடைசியில், ஒரு வீட்டிலிருந்து ஒரு பிராமணர் வெளியே வந்து கொண்டிருந்ததைக் கண்டதும் அவருக்குப் பரம சந்தோஷமாயிற்று.

தீக்ஷிதர் அந்தப் பிராமணரை நிறுத்தி, ''ஏன், ஸ்வாமி! என்ன ஏக அலங்காரமும் அமர்க்களமுமாயிருக்கே! என்ன விசேஷம்? ஏதாவது உத்ஸவம் கித்ஸவம் உண்டோ?'' என்று கேட்டார்.

''உத்ஸவம் ஒண்ணும் இல்லை. மகான் சம்பு சாஸ்திரி வந்திருக்கார். இத்தனை நேரம் ஊர்வலம் கிளம்பியிருக்கும். அங்கேதான் நானும் போறேன்'' என்றார் அந்தப் பிராமணர்.

''யாரு? மகான் சம்பு சாஸ்திரியா? அது யாரையா ஒருத்தன் அப்படிக் கிளம்பியிருக்கான்?'' என்று தீக்ஷிதர் கேட்டார்.

''என்ன ஸ்வாமி, அவன் இவன் என்கிறீர்? சம்பு சாஸ்திரி, சம்பு சாஸ்திரின்னு எங்கே பார்த்தாலும் பிரசித்தமாயிருக்கே, உமக்குத் தெரியாதா?''

''நான் எங்கேயோ ஒரு பட்டிக்காட்டிலே கிடக்கிறவன். கிணத்துத் தவளைக்கு நாட்டு வளப்பமேன் என்று சொன்னாப்பலே, உலக விஷயங்களை அவ்வளவா நான் காதிலே போட்டுக் கொள்கிறதில்லை. இப்பவெல்லாம் காந்தி கீந்தி, காங்கிரஸ் கீங்கிரஸ் என்றெல்லாங்கூடச் சொல்லிக்கிறாளோல்லியோ, நான் அந்த விவகாரத்துக்கெல்லாம் போறதே கிடையாது. அப்படின்னா, இந்த மகான் சம்பு சாஸ்திரி என்கிறவர் மகாத்மா காந்திக்குப் போட்டியாக் கிளம்பியிருக்காராக்கும்?''

''அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. மகாத்மா காந்தியைப் பின்பற்றுங்கோன்னு தான் இவரும் சொல்றார். ஒரு சின்னக் குழந்தையையும் கூட அழைச்சிண்டு போறார். அந்தக் குழந்தைக்குத்தான் சாரு என்று பேரு. இவாள் போற இடமெல்லாம் ஜனங்கள் அப்படியே மாறிப் போயிடறாள். ஊரெல்லாம் சுத்தமாயிடறது. சண்டை, சச்சரவெல்லாம் நின்னு போயிடறது. பாருங்கோ, விருத்தாசலத்துக்குப் பக்கத்திலே, கள்ளுக்கடைக்காரா ளெல்லாம் சேர்ந்து, 'உமக்குப் பத்தாயிரம் ரூபாய் கொடுத்துடறோம். குடிக்க வேண்டாம்னு பிரசாரம் பண்றதை மட்டும் நிறுத்திடுங்கோ'ன்னு சொன்னாளாம். அவர், 'அப்படியெல்லாம் பேசிண்டு என் கிட்ட வராதேங்கோ' என்று சொல்லி விட்டாராம். அப்படிப்பட்ட மகான் ஐயா அவர்!''

''ஓஹோ! இருக்கலாம்! உலகம் பலவிதம்னு பெரியவா தெரியாமலா சொல்லியிருக்கா? இந்த மகான் சம்பு சாஸ்திரி என்கிறவருக்கு எந்தத் தேசம், எந்த ஊருன்னு கேள்வியுண்டோ?''

''தஞ்சாவூர் ஜில்லாவிலேதான் நெடுங்கரைன்னு ஒரு கிராமத்திலே பிறந்ததாகச் சொல்லிக்கிறா. ஆனால் ரொம்ப நாளாய் அவர் சென்னைப் பட்டணத்திலேதான் இருந்தாராம்.''

''ஓஹோ! நெடுங்கரை சம்பு சாஸ்திரிதானா? அந்த ஆஷாடபூதியாய்த்தான் இருக்கணும்னுட்டு அப்பவே நினைச்சேன். தன்னைப் பெற்ற தாயார் கிண்ணிப் பிச்சை எடுக்கிறாள், பிள்ளை கும்பகோணத்திலே கோதானம் பண்றான்னு வசனம் சொல்வாளே, அந்தக் கதையாய்த்தான் இருக்கு....!''

தீக்ஷிதர் இப்படிச் சொன்னது அந்த இன்னொரு பிராமணரின் காதில் சரியாக விழவில்லை. அதற்குள் எதிரே சம்பு சாஸ்திரி-சாருவின் ஊர்வலம் வந்துவிட்டது. ஊர்வலத்திலிருந்து கிளம்பிய, ''மகாத்மா காந்திகி ஜே! பாரத மாதாகி ஜே! சம்பு சாஸ்திரிகி ஜே!'' என்ற கோஷங்களின் பெரிய சப்தத்தில் தீக்ஷிதரின் பேச்சு அடிபட்டுப் போயிற்று. அந்தப் பிராமணரும் தீக்ஷிதரைப் பிரிந்து ஊர்வலக் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

(தொடரும்)

* இயற்கை எழில்...





* செயற்கை சிறப்பு!

# அதிசய அழகு; அசத்தும் சுத்தம்!

**பா**லக்காடு நகருக்கும் அதை அடுத்துள்ள சில பஞ்சாயத்துகளுக்கும் குடிநீர் விநியோகம் மலம்புழா அணைக்கட்டிலிருந்துதான். பாலக்காடு மாவட்டத்தின் எட்டு' அணைக்கட்டுகளுள் ஒன்று இது. இவ்வாண்டு போல் குறைவான அளவு தண்ணீர் முன்னெப்போதும் இங்கு இருந்ததில்லை என்கிறார்கள். தமிழ்நாட்டிலிருந்து செல்பவர்களுக்கு அந்த 'குறைந்த' அளவே குளிர்ச்சியாகப் படுகிறது.

தண்ணீர் குறைவானாலும் மலம்புழாவில் அழகுக்குக் குறைவில்லை. பாலக்காடு நகரின் மெரினா பீச் என்று சொல்லக்கூடிய அளவுக்கு வார இறுதி உற்சாகக் கூட்டம்.


மாலை மயங்குகின்ற நேரம்... மலைகள் சூழ்ந்த மலம்புழாவின் அழகை உள்வாங்கியபடி அமைதியாகச் சிலர்; ஆற்றுக்குள் இறங்கி மணல் திட்டுக்களில் நடக்கும் கொஞ்சம் துணிந்த ஜோடி; தொங்கு பாலத்தில் பதுங்கிப் பதுங்கி நடக்கையில், முக்காடுகளின் கீழ் முகம் மலரும் முஸ்லிம் சிறுமிகள்; 'ஏரியல் ரோப்வே'யில் அந்தரத்தைக் கடந்தபடி கீழே பூங்காவைக் கண்டு களிக்கும் ரசிகர்கள்; இருட்டியதும் மின்சார நகை மாட்டிக் கொள்ளும் தோட்டம்; இந்தச் செயற்கைக்குச் சவால் விட்டு ஜொலிக்கும் செண்பக மரத்தடி - அங்கே சலசலக்கும் தண்ணீர், நெஞ்சுவரை ஊடுருவும் நறுமணம்...

இவ்வளவு அழகுகளும் அதற்கிணையான கும்பலும் இருந்தும் இடம் துப்புரவாக இருக்கிறது. தமிழ்நாட்டுக் கண்களால் நம்ப முடியவில்லை.

- மலர்

தகவல் அளித்த வாசகர்கள்:
சிறுமுகை ஜி.கதிரேசன்,
டி.எம்.ரகுராம், பி.கே.சுப்ரமண்யம்.

# மாறிவரும்



* ''பழசெல்லாம் மாறிவிட்டது...''

''முன்பெல்லாம் இருளர்களுக்கு பாம்பு பிடிப்பதுதான் வாழ்க்கை. இப்போ எல்லோரும் பாடம் படிக்கிறார்கள்'' என்று சொல்லி நம் ஆர்வத்தைத் தூண்டி விட்டிருந்தார், ஸ்ரீதரன் என்ற இளைஞர்.


பாலக்காட்டிலிருந்து சுமார் 75 கி.மீ. தொலைவில் அட்டப்பாடி, அகலி மலைப் பகுதி. இருளர், முடுகர், குரும்பர் என சுமார் 24000 மலை வாழ் மக்கள் இப்பகுதியில் - மலை கிராமங்களில் வசிக்கிறார்கள்.

சுமார் ஆயிரம் அடி 'உயரே' இருக்கும் அகலி-கள்ளக்கரை கிராமங்களுக்குச் சென்றோம்.


அருகருகே நெருக்கமாகக் குடிசைகள். ஒரு சமூக நலக் கூடம். சின்னதாக ஒரு பெயர் தாங்கி தகர போர்ட், குட்டை, குளிக்கும் எருமை, 'பீடி வலிக்கும்' இளவட்டம். இவற்றுக்கிடையே U.S.A என்ற எழுத்துக்களுடன் பனீர்ச் சட்டை அணிந்த பெரியவர். பாக்கெட்டில் ரெனால்ட்ஸ் பேனாவுடன் ஓர் இளைஞர்! பார்த்தவுடனேயே ஒரு மாற்றம் ஏற்பட்டு வருவதை உணர முடிந்தது.

நஞ்சி என்கிற பெண்மணி சொல்கிறார்: ''எங்களுக்குப் பூர்வீகம் தமிழ்நாடுதான். கல்கண்டி பிரதேசம் (கேரள எல்லை). எத்தனையோ தலைமுறை முன்னாடி இங்கே வந்துட்டாங்க. கூலி வேலைதான். ஒரு நாளைக்கு பதினைஞ்சு ரூபா வந்தா அதிகம். அதும் சிலநாள் கிடைக்கும். சில நாள் கிடைக்காது. கையில இருக்கற காசுக்குத் தகுந்தபடி, அரிசியோ, சோளமோ, ராகியோ- சாப்பாடு. ரேஷன் இருக்குது. அரிசியெல்லாம் குண்டு குண்டா, ரொம்பப் பெரிசா இருக்கும். சாப்பிடறதே கஷ்டம்.''

* கள்ளிக்கரை கிராமம்: மலைச் சூழலில்



''முன்னெல்லாம் வாரத்துக்கு ஒரு தடவைதான் குளிப்பாங்க...''



* வெள்ளிங்கிரி

## மலை வாசிகள்:



* ''ஸ்கூலெல்லாம் இருக்குது. ஆனா நாங்க போறதில்லை!''

மலைவாழ் மக்கள் வளர்ச்சி வாரியம் தனியே இயங்குகிறது. இப்பகுதியினரின் கல்வி வளர்ச்சிக்காகப் பள்ளிகள் நடத்துகிறார்கள். 1962-92 வரையிலான முப்பதாண்டு காலத்தில், இப்பகுதி மக்கள் நலனுக்கென சுமார் ஒரு கோடி ரூபாய் செலவிடப் பட்டுள்ளது.


''ஸ்கூலெல்லாம் இருக்குதுங்க. ஆனா நான் போறதில்லை. ரெண்டு மாடு மேய்க்கிறேன்'' என்கிறான் ரங்கன் (வயது10). மேலும் சில சிறுவர்களும் இங்ஙனமே. பெரும்பாலோருக்குப் படிப்பை விட வீட்டுப் பொருளாதாரமே முக்கியமாக இருக்கிறது. அதுபோக, பாக்கி நேரம்தான் படிப்புக்குச் செலவழிக்க முடியும்.



''விவசாய நிலங்கள் இருக்கின்றன. கடலை, சோளம் விளைகின்றன. பெரும்பாலான இளைஞர்கள் கொஞ்ச நாள் முன்பு வரை கூட விவசாயத்தில் தான் ஈடுபட்டு வந்தனர். ஆனால் இன்று நிலைமை மாறிவிட்டது. பலர் 'டவுனு'க்கு வேலை தேடிப் போக ஆரம்பித்து விட்டார்கள். நான் கூட ஜீப் ஓட்டுகிறேன்'' என்கிறார் இருபத்திரண்டு வயதான வெள்ளிங்கிரி.

இவர்களின் சமூக அமைப்பு எப்படி இயங்குகிறது?

'ஊர் மூப்பன்' என்றொரு ஊர்த்தலைவர். அவருக்கு வண்டாரி, குறுதலை என்று இரண்டு அஸிட்டென்ட்டுகள். சமூக நிர்வாகம் இவர்கள் கையில்தான். தவிர, 'மண்ணுக்காரன்' என்றொருவர். வருடாந்திர விவசாயப் பணிகளைத் தொடங்கி வைப்பது, முதல் விதை ஊன்றுவது, அறுவடை ஆரம்பித்து வைப்பது, உரம், தரம் இன்னபிற விஷயங்களை தீர்மானித்து, வழி நடத்துவது எல்லாம் இவர்தான்.



''அமைப்பெல்லாம் பெயரளவுக்குத் தான். இப்ப யாரும் இதையெல்லாம் மதிக்கிறது கிடையாது. பழசெல்லாம் மாறிட்டு வருது. இந்த சமூகத்துக்குரிய அடிப்படை குணங்களெல்லாம் போயிட்டுது'' என்று வருத்தப்படுகிறார் ஒரு பெரியவர்.

இதற்கு அதி முக்கியமான காரணம் தமிழ்நாட்டிலிருந்தும் கேரளத்தின் இதர பகுதிகளிலிருந்தும் மக்கள் வந்து இங்கு

* நஞ்சி

குடியேறியதால் உண்டான திடீர் ஜனத் தொகைப் பெருக்கம். இது, விவசாய முறையையும் வாழ்க்கை முறையையும் மாற்றிவிட்ட அதே நேரத்தில் பழங்குடிகளின் தனித்தன்மையையும் சிதைத்து விட்டது.

**பா**ரம்பரியக் கலைகளாக அரிச்சந்திரன் கூத்து, ஆதிவாசிகள் நடனம், கிராமியப் பாடல்கள் எல்லாம் இச்சமூகத்தின் சொத்து. ஆனால் இன்று இவை பெரும்பாலும் மறைந்துவிட்டன என்கிறார் வெள்ளிங்கிரி.

''சிவராத்திரியப்ப மட்டும் கூத்து நடக்குங்க. டான்ஸ்... எப்பவாச்சும், எங்காவது சாவு விழுந்தாத்தான். முன்னெ களை பறிக்க சொல்ல, அறுப்பு நடக்க சொல்ல பாட்டெல்லாம் பாடுவாங்க. இப்ப விவசாயமே குறைஞ்சு போச்சு. பாட்டு எங்கங்க?''

''எல்லாம் மாறிவிட்டது. தனித்துவம் இனி சாத்தியமில்லை. சார்ந்திருப்பது மிக அவசியமானதொன்றாகி விட்டது. பாரம்பரியத்தைக் காப்பாற்ற வேண்டும் என்கிற நினைப்பெல்லாம், 'வாழ வேண்டும்' என்கிற அடிப்படையின் முன் அடிபட்டுப் போய் விடுகின்றது. இது ஒரு வகைச் சீரழிவுதான். ஆனால் முன்பெல்லாம் வாரத்திற்கு ஒரு முறை குளிப்பார்கள். இப்போது தினம் குளிக்கவேண்டும் என்கிற எண்ணம் உருவாகியிருக்கிறது. இது மாதிரி சில முன்னேற்றங்களைப் பார்த்து, சந்தோஷப்பட்டுக்கொள்ள வேண்டியதுதான்'' என்கிறார் ஸ்ரீதரன்.

- ஜக்கு.

வாசகர் தகவல் : எஸ். இந்திரா, கே.வி. கிருஷ்ணமூர்த்தி, ராஜலட்சுமி.

# மாமரங்கள் சூழ ஒரு சிறைச்சாலை!

**பா**லக்காடு நகரில் நுழைந்ததும் முதலில் கண்ணில் படுவது பிரம்மாண்டமான கோட்டைச் சுவர்களே. ஆழமான அகழியும், கருங்கல் சுவர்களும், மரக்கதவுகளும், வளைந்து, வளைந்து செல்லும் பாதையும் பார்ப்பவர் எவரையும் உடனே சரித்திர காலத்துக்கு அனுப்பிவிடுபவை.

பாலக்காட்டு ராஜா 'கோம்பி'யின் காலத்தில் ஹைதர் அலி படையெடுக்க, மன்னன் அடிபணிய, அதன் நினைவாக ஹைதர் கட்டிய இக்கோட்டை 1766ம் வருடத்தியது. தனது பிரதான வாணிபக் கேந்திரமாக இக்கோட்டையை ஹைதர் நிறுவினார். முக்தம்பர் என்ற தளபதியை இங்கே விட்டுச் சென்றார்.

பின்னால் 1783 நவம்பரில் பிரிட்டிஷ் படையெடுப்பில், இக்கோட்டை ஆங்கிலேயருக்குச் சொந்தமானது. ஹைதர் இறந்து, திப்புசுல்தான் ஆட்சிக்கு வந்ததும் தன் தந்தை கட்டிய கோட்டையை எப்படியும் அடைந்தே தீருவதென்ற முடிவில் பிரிட்டிஷாருடன் தொடர்பு கொண்டார். அதன்பின் ஏற்பட்ட 'மங்களபுரம்' உடன் படிக்கையின்படி, கோட்டை திப்புசுல்தான் வசம் வந்தது. பிரெஞ்சு கட்டடக் கலை நிபுணர்கள் உதவியுடன் திப்பு கோட்டையைத் திருத்தி அமைத்தார்.

பின்னால் மறுபடி பிரிட்டிஷ்காரர்கள் இதனைக் கைப்பற்றியதும் சுதந்திரத்துக்குப் பின் ஆர்க்கியாலஜியினர் வசம் இக்கோட்டை ஒப்படைக்கப்பட்டதும் பள்ளிக்கூட மாணவர்களுக்குப் பாடம்.

இன்று, இக்கோட்டையிலுள் மாமரங்கள் சூழ்ந்த இடத்தில் சிறைச்சாலை இயங்குகிறது. அந்த வகையில், உலகிலேயே மிக அழகான சூழலில் இயங்குகிற சிறைச் சாலை இதுவே என்று சொல்லலாமா?

- நியூஸ்மேன்

வாசகர் தகவல்: நெறுமுகை ஜி.கதிரேசன். பி.கே.சுப்பிரமணியன்.



● கோட்டை

# எழுத்தச்சன் இல்லம்...

தமிழுக்கு ஒரு கம்பர் மாதிரி, மலையாள இலக்கியத்துக்கு எழுத்தச்சன் பிதாமகர். மாபெரும் பண்டிதர். சமஸ்கிருதப் புலவர். இவரது 'அத்யாத்ம ராமாயணமும்' மகாபாரத மொழி பெயர்ப்பும் மிகப் பிரசித்தம்.

பாலக்காடு அருகே 'தெக்கே' கிராமத்தில் எழுத்தச்சனுக்கு ஒரு நினைவில்லம் இருக்கிறது. அது, எழுத்தச்சன் வாழ்ந்தவீடு. பார்க்கச் சென்றபோது உள்ளே, ஒரு கல்யாணம் நடந்து கொண்டிருந்தது. விசாரித்ததில் - அந்தப் பகுதி கல்யாண மண்டபங்களுள் இன்று இதுவும் ஒன்று!

எதேர்ச்சையாக அந்தத் திருமணத்தில் கலந்து கொள்ள வந்திருந்த மலையாள எழுத்தாளர் கே.பி. ஸ்ரீதேவி, நமது அதிர்ச்சியைக் கண்டு கொண்டு, நம்மோடு பேசினார்.

* கே.பி.ஸ்ரீதேவி



''சந்தேகப் படவேண்டாம். இது எழுத்தச்சன் நினைவு இல்லம்தான். அவர் தங்கின வீடுதான். அவரது சமாதி உள்ள இடம் மட்டும் அவரது நினைவிடமாகத் தனியே பராமரிக்கப் படுகிறது. மற்ற பகுதி திருமண மண்டபம் ஆகிவிட்டது. என்ன சொல்ல? காலத்தின் கட்டாயம் தான்! இன்று இதனை இப் பகுதியின் நாயர் சமூகத்தினர் நிர்வகித்து வருகின்றனர்...''

''...எழுத்தச்சன் ஒரு தேச சஞ்சாரி. எப்போதும் ஊர் ஊராகச் சுற்றி வருபவர். இந்த கிராமத்துக்கு வந்து, இந்த மக்களோடு பழகியதில், இவ் விடம் அவருக்குப் பிடித்துப் போய் விட்டது. இங்கேயே தங்கி விட்டார். இவ்விடத்திலேயே ஒரு பள்ளியும் நடத்தி வந்தார்...

''அக்காலத் தில் தாழ்ந்த குலத்தில் பிறந்த வரென்ற காரணத்தால், அவர் வேதம் படிப் பதையோ, சொல்லிக் கொடுப் பதையோ இப்பகுதி வாழ் அந்தணர்கள் விரும்பவில்லை. எதிர்த்தார்கள். அவர் அதனால் மனம் வருந்தி, தமிழ் நாட்டுக்குச் சென்றுவிட்டார். 30 வருடங்கள் அங்கே இருந்து, அங்கிருந்து தம் மாணாக்கர்களோடு மறுபடி இங்கே வந்து தங்கி, கடைசி காலம் வரை இவ்வீட்டிலேயே இருந்தார்...



* எழுத்தச்சனுக்கும் ஓர் அறை..

''இன்றும் விஜயதசமி அன்று இப் பகுதி குழந்தைகளுக்கு வித்யாரம்பம் இங்கேதான் நடத்துகிறார்கள்...''

எழுத்தச்சன் நினைவில்லத்தில் ஸாரி... நினைவு அறையில் இன்று அவர் பயன்படுத்திய பாதுகை, எழுத்தாணி, தண்டம், அவரது ஓலைச் சுவடிகள், அவர் வழிபட்ட இறை உருவங்கள் ஆகியவற்றைக் காட்சிப் பொருட்களாகப் பூட்டி வைத்திருக்கிறார்கள்.

'தெக்கே' கிராமத்துக்குப் போனால் எழுத்தச்சன் நினைவில்லம் என்று கேட்காதீர்கள். நாயர் கல்யாண மண்டபம் என்று கேளுங்கள். சுலபமாய் அடையாளம் காட்டுவார்கள்!

–ஆழ்வார்க்கடியான்

தகவல்: கொ.வெ.சீதா

# ...திருமண மண்டபம்!

> ## சென்ற வாரம்
>
> **காதலன் பிரகாஷை, கட்டாயப்படுத்தி ஒரு மருந்து கம்பெனி இன்டர்வியூவில் கலந்து கொள்ளச் செய்கிறாள் நிஷா. 'சம்பளம் முக்கியமில்லை; அனுபவம் அவசியம்' என்பது அவளது வாதம். அரைமனமே கலந்து கொண்டு, தேறுகிறான். பணியில் சேர்ந்த அன்று மாலையே, ரயில் நிலையத்தில் முன்பின் தெரியாத ஒருவனைச் சந்திக்கிறான். பிரகாஷின் ஜாதகத்தையே அவன் ஒப்பிக்கிறான். 'என்னுடைய பத்து விரல்களுக்குள் இந்த பம்பாய் நகரமே அடக்கம். போகப் போகப் புரியும்!'' என்று சஸ்பென்ஸ் வைக்கிறான்.**

பிரகாஷுக்குள்ளே ஓர் உந்தும்விசை உருவானது. 'இவன் யார்? என்னுடைய பெயர் இவனுக்கு எப்படித் தெரிந்து போனது? நான் ஷில்பா கம்பெனியில் நேர்முகத் தேர்வுக்குப் போன விஷயம்; எனக்கு அப்பாயின்மென்ட் லெட்டர் கிட்டிய சமாசாரம்; நான் இன்று பணிசெய்து விட்டுத் திரும்பியுள்ள சங்கதி. - அனைத்துமே அப்பட்டமாக அறிய இவனுக்கு எந்த வகையில் வாய்ப்புகள் உள்ளன?'

பிரகாஷ் அடங்கிப் போகக் கூடாது என்று தீர்மானித்தான். இறக்கையை விரித்துக் கொண்டான்.

''உங்க பெயர் என்ன?''

''ஷியாம்சுந்தர்... இப்போதையப் பெயர். நீ கேட்டவுடனே என் மனத்தில் தோன்றிய பெயர்.''

''எனக்கு விளங்கலை!''

''நண்பனே! விளங்க வைக்கிறேன். எனக்கு என்று ஒரு தனிப் பெயர் கிடையாது. அடிக்கடி பெயரை மாற்றுவேன். ஏன்... அடிக்கடி ஆளே மாறிவிடுவேன்!''

''காரணம்?''

''போகப் போக விளங்கும் தோழா!''

''என்னை நீ அணுகிய நோக்கம்?''

''இன்னும் தெளிவாகவே கேளேன். என்னால் உனக்கென்ன பலன் உன்னால் எனக்கென்ன பலன்? என்றுதானே கேட்க நினைக்கிறாய்?''

''அப்படியேதான்.''

''பொறுமையாய் இரு. சொல்றேன். நாம் இருவரும் ஒரு வகையில் கூட்டுச் சேரப் போகிறோம்.''

''ஹலோ சார்... மர்மத்தை உடையுங்க...''

''சொல்றேன். நான் ஏற்கெனவே ஷில்பாவோட தொடர்புடையவன். அவர்களோட உற்பத்தி வகையறாக்களை அறிந்தவன். அந்த நிறுவனத்தின் முந்தைய மெடிகல் ரெப்களோடு பழக்கமுடையவன்.''

''அதனால்...?''

''உன்னோடும் பழக்கம் ஏற்படுத்திக் கொள்ள முற்படுகிறேன்.''

''இதனால் யாருக்கு லாபம்?''

''நம் இரண்டு பேருக்குமே லாபம்.''

''இன்னும்... எனக்கு விளங்கவில்லை.''

''பிரகாஷ்... நீ சேர்ந்துள்ளாயே நிறுவனம், அதனை நடத்துபவர்கள் அனைவருமே அயோக்கியர்கள். சட்டம், திட்டம் எதையுமே மதிக்காத கொடியவர்கள். பணம்... பணம் என்றே பறக்கும் தப்புப் பேர்வழிகள்.''

சோர்வானான் பிரகாஷ். ''அது எனக்குத் தெரியாது!''

''எனக்குத் தெரியும் பிரகாஷ்! எனக்குத் தெரியும்.''

''என்ன தெரியும்?''

''அவர்கள் நேர்மையானவர்கள் அல்ல. அந்தப் பாலேகர் என்ற அயோக்கியன் கம்ப்யூட்டர் மூளையுள்ள ஆள். குற்ற



நாடகங்களைக் குறைவில்லாமல் திட்டம் போட்டு நிறைவேற்றுவான்.''

''சரி, நான் என்ன செய்ய வேண்டும்? என்னை எதற்கு...?''

''பொறுமை! எவர்கள் செய்வது தவறு. ஆனால் ஒரு தப்பை இன்னொரு தப்பால் சரியாக்க முடியும். மைனஸோடு மைனஸ் சேரும்போது ப்ளஸ்.''

பிரகாஷ் மேலும் கீழும் பார்த்தான். இதென்ன அறுவை என்பது போல.



## 2

''ஒரு வாரம்தான் ஆபீஸில் உன்னை வைப்பார்கள். அதன்பின் சூட்கேஸ் கொடுத்து அவுட்டோர் அனுப்புவார்கள். அப்பொழுது உன்னை நான் அணுகுவேன். நம் தந்திர வேலைகளைச் செய்து அவர்களைக் குழி தோண்டிப் புதைப்போம்.''

''அப்படி என்ன தப்பு அவர்கள் செய்கிறார்கள்...?''

''இன்று இவ்வளவுதான். ரொம்ப நேரம் பேசுவது நல்லதல்ல. நாளை இதே இடம். இதே மொஸைக் தூண்... பை...''

அந்த அந்நியன் போய் விட்டான்.

ஷியாம்சுந்தரை வெட்டிவிட வேண்டும் என்று பிரகாஷுக்குத் தெரிந்தது. உறவைத் தொடர்வது தப்பு என்று புரிந்தது. இதில் தெளிவாக இருந்தாலும் இந்த ஷியாம்சுந்தர் யார் என்று அறியும் ஆவலும் ஏற்பட்டு விட்டது. 'அப்படி என்ன தப்பாய் ஷில்பா கம்பெனியினர் பரிமாறுகிறார்கள்? அதில் நாம் என்ன குளறுபடி செய்ய முடியும் என்று ஷியாம்சுந்தர் கருதுகிறான்?'

ஒரு மர்மத் துடிப்பு அவனுள் உருவாகி விட்டது.

**வீ**ட்டுக்குப் பிரகாஷ் வந்த நேரம் நிஷா இருந்தாள். பிரகாஷின் அப்பாவோடு செஸ் விளையாடிக் கொண்டிருந்தாள். இவனைக் கண்டவுடன் எழுந்த வேகத்தில் ராஜா, ராணி, சேவகர்கள் அனைவரையும் உருட்டிக் குழப்பி விட்டாள். உற்சாகமானாள்.

''நிஷா... நல்ல தந்திரம்... நான் செக் வைக்கப் போனேன்...!''

''கேள்... கேள்...!''

''ஹாய் பிரகாஷ்! ஹவ் இஸ் யுவர் ஆபீஸ்?''

''நோ ப்ராப்ளம்'' என்றான்.

''இன்னிக்கு என்ன பண்ணச் சொன்னாங்க?''

''ஃபைலையெல்லாம் தூக்கிப் போட்டு, பாருங்கடான்னு விட்டுட்டுப் போயிட்டாங்க.''

''அட்வென்சரா எதுவும் இல்லையா?''

''நிஷா! நான் ஒண்ணும் அண்டார்டிகாவுக்குப் போயிட்டு வரலை.''

''சரிப்பா... கடுப்பாயிடாதே...''

டிபன் சாப்பிட்டுவிட்டு மீண்டும் சோபாக்களை நாடினார்கள். நிஷா கையையும் கால்களையும் ஆட்டிக் கொண்டே வார்த்தைகளைக் குவியலாக்கிக் கொண்டிருந்

நான். அப்பா என்ற அந்த உயர்ந்த ஸ்தான மனிதர் இல்லையென்றால்... பிரகாஷ் கூட மளமளவென்று வாக்கியங்களை உருவாக்கி அடுக்கியிருப்பான். ஆனால், அப்பாவின் முன் அடங்கிப் போகும் சிறுவனானான்.

''நிஷா! நீ சரியா டிபன் சாப்பிடலை...'' என்றவாறே பிரகாஷின் தாய் வந்தாள்.

''ஐயோ ஆன்ட்டி... இங்கேயும் டிபன். எங்க வீட்டுக்குப் போன உடனே அங்கேயும் டிபன். ஒரு வாரமா டபிள் டிபன் இறங்கிகிட்டே இருக்குது.''

''அப்படியாவது எலும்பை மறைச்சுடு!'' என்றார் அப்பா.

''நான் ஒல்லியா இருக்கேன் அங்கிள்?''

''பிரகாஷ்கிட்டே கேள்!''

''பிரகாஷ்! என்ன சொல்றே, நான் டிரிம்தானே?''

''எனக்குத் தெரியலை.''

''என்னடா தெரியலை? நாளைக்கு உனக்கு வரப் போறவள்.''

''அப்ப நாளைக்குக் கேளுங்க, சொல்றேன்.''

''ஆபீஸ்ல ஏதாவது விசேஷம் இருந்தால் சொல் பிரகாஷ்!''

''ஆபீஸ்ல பிரமாதமா எதுவும் நடக்கலை. ஆனால் ஆபீஸ் விட்டு வரும்போது ஒரு வித்தியாசமான ஆசாமியைப் பார்த்தேன். அந்த ஆள் என்னை அணுகினான்.''

''யார்?'' - அம்மா ஆவலாய்க் கேட்டாள்.

''சொல்றேன். வி. டி. ஸ்டேஷன்லே ட்ரெயின் பிடிக்க வந்து நின்னுக்கிட்டிருந்தபோது என்னைப் பார்த்துச் சிரித்தான். அழகா அனில்கபூர், அமீர்கான் போல வழ வழப்பா இருந்தான்.''

''என்ன சொன்னான்?'' நிஷா துரிதப்படுத்தினாள்.

''என் பெயரைச் சொன்னான். ஷில்பாவுல நான் ஜாயின் பண்ணினதைச் சொன்னான். ஏற்கெனவே அங்கே ரெப்ரசென்டேடிவ்வா இருந்த நபர்களோடு அவனுக்குப் பழக்கம் உண்டாம். அதனால என்னிடமும் பழக விரும்பறானாம். கேக், டீ வாங்கித் தந்தான்.

''பிரகாஷ்! நீங்க இன்னும் சின்னப் பையன் மாதிரியே நடந்துக்கறீங்க. முன்பின் தெரியாத ஒரு நபர் கேக் வாங்கித் தந்தா அதைச் சாப்பிடலாமா?''

''நல்லாக் கேளு. இவனுக்கு வயசுதான் ஏறுதே தவிர, அனுபவம் பத்தாது.

''சரி விடுங்க! பிரகாஷ், நீங்க சொல்லுங்க...''

''எங்கிட்டே நிறையப் பேசினான். ஷில்பா கம்பெனி ஆட்களே தப்பான ஆட்கள்; அதனால் நாமும் தப்புப் பண்ணினால் தப்பே இல்லைன்னு சொன்னான். அவனுக்கு, எனக்கு ரெண்டு பேருக்குமே லாபம் என்றான்.''

''என்னடா இது...? உண்மைதான் சொல்றியா?''

''இப்ப எனக்கு ரீல் விட்டு என்னா கணும் அப்பா?''

''மர்மமா இருக்குதே...?''

''கடைசியா 'நாளைக்கும் இதே இடத்தில் சந்திப்போம்'னு சொல்லிட்டுப் போயிட்டான்.''

''நாளைக்கு அவனோட பேசாதே!'' என்றாள் அம்மா. ''அவன் என்ன செய்யச் சொல்றான்னு தெரியணும். அதனால... நாளைக்கு அவனைப் பார்த்துப் பேசு!'' என்றார் அப்பா.

''அதான் கரெக்ட்!'' என்று நிஷா ஆமோதித்தாள்.

**ம**றுநாள் கூடுதலான தோரணையுடன் டை கட்டிக் கொண்டு, அதிகமான மேக்கப் அடித்து 'புஸ் புஸ்' ஸென்ட் பரப்பிக் கிளம்பினான் பிரகாஷ்.

சேல்ஸ் கேபினில் வைத்து, நான்கு பேருக்கும் பாடம் போல் நடத்தினார் பாலேகர். முதலில் 'நேக்கரோ' என்ற அந்த பவுடர் புராடக்ட் பற்றி எடுத்துச் சொன்னார்.

'' 'இசாப்கோல் ஹஸ்க்' என்ற உன்னதமான மருந்து நம் தயாரிப்பில் கலந்துள்ளது. ஒரு நாளைக்கு மூன்று தடவை, தொடர்ச்சியாக மூன்று நாட்கள் எடுத்துக் கொண்டால்... வாயுத் தொல்லை பறந்துடும்'' என்றார்.

மருந்துகள் சரித்திரத்திலேயே இப்படியோர் உன்னத 'எக்ஸ்பர்வெஸென்ட்' உருவானது கிடையாது என்று புரிய வைத்தார்!

'வாயுத் தொல்லை போக்கும் பவுடரையே இந்தத் தூக்கு தூக்குகிறாரே' என நக்கலாக வியந்து கொண்டான் பிரகாஷ்.

**மா**லையில் அலுவலகம் விட்டு நேராக வி. டி. ஸ்டேஷன் போனான். அந்த மொசைக் தூண் பக்கம்... நேற்றைய ஷியாம் சுந்தரைத் தேடினான். இல்லை. ஆவல் குறு குறுப்புடன் காத்திருந்தான்.

பத்து நிமிடங்கள் கழன்று சென்றபின் ஷியாம்சுந்தர், பிரகாஷ் நோக்கி வந்தான். அவனோடு இன்னொரு நபர்.

ஷியாம்சுந்தரோடு வந்தவனும் இளமையாகத்தான் இருந்தான். ஆனால் காலத்துக்குப் பொருந்தாத ஸ்டைலில் கிராப் தலையுடனும், டீ-ஷர்ட் ஒன்றை மாட்டிக் கொண்டும் 'சிரிக்கலாமா' என யோசித்தவாறும் இருந்தான்.

பிறிதொரு நபரை ஷியாம்சுந்தரோடு பார்த்ததும் இது ஒரு தனி மனிதனின் கண்ணாமூச்சி விளையாட்டு அல்ல; ஓர் அணியின் செயல்பாடு என எச்சரித்தது மனம்.

பிரகாஷை இலேசாகப் பயம் கவ்வியது.

'தப்பு செய்கிறோமா?'

(தொடரும்)

- உலகில் நாம் பயப்பட வேண்டிய ஒரே விஷயம் - நம்மைப் பீடித்திருக்கும் பயம் என்னும் நோயைப் பற்றியே.

 - ரூஸ்வெல்ட்

# லீவ்லே விசேஷங்க!

சத்யா



**காட்சி-1**

**லலிதா:** ஏங்க? பசங்களுக் கெல்லாம் லீவ் விட்டாச்சு. குடும்பம் நடத்தறதே கஷ்டமா இருக்கு. பேசாம குடும்பத் தோட யார் வீட்டுக்காவது போய் ஒரு மாசம் இருந்துட்டு வரலாமா?

**பாஸ்கர்:** நல்ல ஐடியா தான். ஒரு மாசம் கரண்ட் செலவு மிச்சம். காஸ் சிலிண் டர் வாங்க வேண்டியதில்லை. மளிகை, பால் பணம் எல்லாம் சேமிப்பு. உடனே பிரயாணத்துக்கு ரெடி பண்ணு. ஒரு மாசம் குடும்பப் பிரச்னை இல்லாம நிம் மதியா இருந்துட்டு வரலாம்.

**லலிதா:** காய்கறி கெட்ட கேடு. ஒரு நாளைக்கு பத்து ரூபாய்க்குக் குறையாம ஆகுது. பஸ் செலவு ஐநூறு ரூபா போனா லும், குடும்பச் செலவு மூவாயிரத்தை மிச் சப்படுத்திடலாம். எப்படி என் ஐடியா?

**பாஸ்கர்:** பிரமாதமான ஐடியா. நிதி மந்திரி ஆகிற தகுதி இருக்கு. செலவை அடுத்தவங்க தலையிலே கட்டறது எப்ப டின்னு தெரிஞ்சு வெச்சுக்கிட்டிருக்கியே...

**லலிதா:** சரி சரி.. போய் திருச்சிக்கு நாலு டிக்கட் வாங்கிட்டு வாங்க. உங்கம்மா வையும் அப்பாவையும் பார்த்துட்டு வர லாம். பாவம், வயசானவங்க. அவங் களுக்கு நம்மை விட்டா யார் இருக்காங்க?

பப்பியும் புது ஜெ.ஜெ.பஸ்லே வெளியூர் போகணும்னு ஆசைப்பட்டாங்க. அதான் புறப்பட்டு வந்துட்டோம்.

**மங்களம்:** வீட்டிலேயே உட்கார்ந் திருந்து அலுத்துப் போச்சு லலிதா. இந்த லீவிலேயாவது நாலு இடத்தைச் சுத்திப் பாக்கணும். வாய்க்கு ருசியாக நாலு வகை செஞ்சு சாப்பிடணும்னு தோணித்து. அதான் பஸ் சார்ஜ் பாக்காம வண்டி ஏறிட் டோம்.

**பத்மநாபன்:** மாப்பிள்ளே.. நாங்க வந்த திலே உங்களுக்கு ஒண்ணும் சிரமம் இல் லையே...

**லலிதா:** என்னப்பா அப்படிக் கேக்க றீங்க? மறுஷோன்னு இருக்கிறது எதுக்காக?

**பத்மநாபன்:** மாப்பிள்ளே... இங்கே ஏதோ ரெண்டு லட்ச ரூபா செலவிலே கட் அவுட் வெச்சிருக்காங்களாமே.. ஒரு நடை போய்ப் பார்த்துட்டு வரலாமா?

**மங்களம்:** போதும் கம்மா இருங்க. வர்ற வழியெல்லாம் கட் அவுட்டுங்களைப் பார்த்துட்டுத்தானே வந்தீங்க? இன்னும் என்ன கட் அவுட் ஆசை? முதல்லே எக்ஸி பிஷனைப் போய்ப் பார்ப்போம்.

**பாஸ்கர்:** மடத்தனமாப் பேசாதே! உங்கப்பாவையும் அம்மாவையும் பார்த் துட்டு வரலாம். மாப்பிள்ளை மாப்பிள் ளைன்னு என் மேலே எவ்வளவு பிரியமா இருக்கார் தெரியுமா, உங்கப்பா? சேலத் துக்கு நாலு டிக்கட் வாங்கிடறேன்.

*(லலிதாவின் தாய், தந்தை, தம்பி ஆகி யோர் பெட்டி படுக்கையுடன் வருகிறார் கள்)*

**லலிதா:** அட... வாங்கப்பா! வாங் கம்மா! என்னங்க, எங்கப்பாவைப் பார்க்க ணும்னு ஆசைப்பட்டீங்களே.. எல்லாரும் வந்துட்டாங்க பாருங்க...

**பாஸ்கர்:** ஆமா! சரிதாக்கு எனக்கு. வாங்க மாமா. வாங்க..

**பத்மநாபன்:** மாப்பிள்ளே... சவுக்யமா? பசங்களுக்கு லீவ் விட்டாச்சு.. விச்சுவும்

**பப்பி:** அக்கா...'வீட்லே விசேஷங்க' பாக்கலாம் அக்கா.

**விச்சு:** அக்கா.. 'மகளிர் மட்டும்' பார்த்த பிறகுதான் மத்த படங்களைப் பார்க் கணும். சேலத்திலேயே கேட்டேன். 'எதுக்கு தண்டச் செலவு? மெட்ராஸுக்குப் போய் அந்திம்பேரைக் கேளு'ன்னு சொல் லிட்டாங்க.

**மங்களம்:** வந்ததும் வராததுமா சினிமா என்ன சினிமா? நல்லபடியா மெட்ராஸ் வந்து சேர்ந்தா திருப்பதிக்கு வரேன்னு வேண்டிக்கிட்டிருந்தேன். முதல்லே திருப்

பதி போவோம்.

லலிதா: எல்லா இடத்துக்கும் அழைச்சிட்டுப் போறோம். ஏங்க ஒரு கார் ஏற்பாடு பண்ணுங்களேன்.

பாஸ்கர்: கார்லே இத்தனை பேர் போக முடியாது. நீயே பஸ்லே கூட்டிட்டுப் போ. எனக்குத் தலையை வலிக்குது. கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துக்கறேன்.

## காட்சி- 2

பாஸ்கர்: அப்பா! ஒரு வழியா போய்ச் சேர்ந்தாங்களா? என்னடா.. அடுத்தவங்களுக்குப் பாரமா இருக்கோமேங்கற யோசனையே இல்லாம, இப்படி ஒரு கூட்டத்தை நான் பார்த்ததே இல்லை... மாப்பிள்ளை மாப்பிள்ளைன்னு வேஷம்!

லலிதா: ஆனாலும் உங்களை மாதிரி ஒரு அல்பமான மனுஷனை நான் பார்த்ததே இல்லை. வீடுன்னா நாலு பேர் வரத்தான் வருவாங்க. இப்படியா மூஞ்சியைத் தூக்கி வெச்சுக்கறது? பெத்த மகளைப் பாக்கறதுக்கு அப்பாவும் அம்மாவும் வர மாட்டாங்களா?

பாஸ்கர்: யார் வரவேண்டான்னு சொன்னாங்க. வந்தா ஒரு நாளோ ரெண்டு நாளோ இருந்துட்டுப் போக வேண்டியதுதானே. இப்படியா ஒரு மாசம் டேரா போடுவாங்க. சே!

*(பாஸ்கரின் தாய், தந்தை, தங்கை தம்பி ஆகியோர் வருகிறார்கள்)*

லலிதா: அட கர்மமே! இந்தப் பட்டாளம் வந்துக்கிட்டிருக்கே. இதென்ன சத்திரமா? இதுங்களுக்கெல்லாம் ஆக்கிப் போடணுமுன்னு எனக்கென்ன தலையெழுத்தா?

பாஸ்கர்: அடேடே.. வாங்கப்பா.. என்னப்பா இது? ஒரு லெட்டர் போட்டிருந்தா நான் ஸ்டேஷனுக்கே வந்திருப்பேனே.

பலராமன்: திடீர்னு நினைச்சுக்கிட்டுப் புறப்பட்டோம்! ரேஷன் க்யூ, தண்ணீர் க்யூன்னு எல்லாத்துக்கும் நானே நிக்க வேண்டியிருக்கு. பசங்களுக்கு லீவ் விட்டாச்சு. சரி, ஒரு மாசம் உங்க கூட சேர்ந்து இருக்கலாம்னு ஆசைப்பட்டோம். சௌக்கியமா லலிதா?

லலிதா: ம்...ம்! சௌக்கியத்துக்கு என்ன குறைச்சல்?

லட்சுமி: உங்கப்பாவுக்கு உடம்பே சரியில்லைடா பாஸ்கர். நீ வேறே தனிக் குடித்தனம்னு வந்துட்டே. அவரைப் பாத்துக்கறதுக்கு யார் இருக்கா? இங்கே மெட்ராஸ்லே நல்ல டாக்டருங்க இருக்காங்களாமே!

லலிதா: எல்லா டாக்டரும் ஒரே மாதிரிதான். ஃபீஸ் வாங்காம யாரும் பாக்கறதில்லை.

பாஸ்கர்: நீ ஒண்ணும் கவலைப்படாதேம்மா. ஒரு மாசம் இங்கேயிருந்து ரெஸ்ட் எடுத்துக்கிட்டா சரியாப் போயிடும்.

லலிதா: உளறாதீங்க. மெட்ராஸ் தண்ணீர் உங்கப்பாவுக்கு ஒத்துக்குமா? சமயத்திலே ஒரு குடம் தண்ணி ஒரு ரூபா கொடுத்து வாங்க வேண்டியிருக்கு இங்கே.

பலராமன்: மெட்ராஸ்லே தண்ணீர் கஷ்டம் தீரப் போறதுன்னு பேப்பர்லே படிச்சேன். கோவில், மசூதி எல்லாம் இடிக்க ஆரம்பிச்சுட்டாங்களாமே!

கலா: அண்ணி... அண்ணி! மகாபலிபுரம், கோல்டன் பீச்...ஜூ..எல்லாம் பாக்கணும் அண்ணி.

லலிதா: அதையெல்லாம் இன்னும் நாங்களே பாக்கலையடி அம்மா! வர்றவங்களை அழைச்சிட்டுப் போய் காட்டறதோட சரி! நாங்க எங்கே பாக்க முடியுது?

லட்சுமி: போறும். வந்த இடத்திலே பீச், சினிமான்னு கூத்தடிக்கணுமா? டேய் பாஸ்கர், எனக்கு திருவேற்காடு, மாங்காடு பாக்கணும். அதுக்கு ஏற்பாடு பண்ணேன்.

லலிதா: பஸ்லே உங்களாலே ஏற முடியாது மாமி.

பாஸ்கர்: அதுக்காக, கோவிலுக்குப் போக ஆசைப்படும்போது, போகாம இருந்துட முடியுமா? நான் கார் ஏற்பாடு பண்றேம்மா...


லலிதா: கார்லே இத்தனை பேர் போக முடியுமா? நான் பஸ்லேயே கூட்டிட்டுப் போய்த் தொலைக்கறேன்.

## காட்சி - 3

லலிதா: சனியனுங்க, ஒரு வழியாத் தொலைஞ்சதுங்க.

பாஸ்கர்: ஏன் இப்படி அல்பமா நடந்துக்கறே? பெத்த மகனைப் பாக்கறதுக்குக் கூட அவங்களுக்கு உரிமை இல்லையா! பெருந்தன்மையா நடந்துக்கக் கத்துக்கணும்! என்ன பண்றது? பட்ஜெட் 'ராஜதந்திரம்' எல்லாருக்கும் தெரிஞ்சிருக்கு.

லலிதா: நிதி மந்திரின்னு என்னை அபசகுனமா நீங்க சொன்னபோதே நினைச்சேன். இந்த மாதிரி தண்டச் செலவு ஏற்பட்டு எல்லாத் திட்டமும் பாழாப் போகும்னு. அப்படியே ஆச்சு!



"அண்ணே! எதையோ மறக்கணும்னு தான் குடிச்சேன்.... எதை மறக்கணும்னு மறந்து போச்சு...!"
- ஜி. காரா

# கிட்டா

படித்துறை வாயிலுக்கு எதிரே வீட்டு வாசலில், பாருக்குட்டி கிட்டாவின் வருகைக்காகக் காத்திருந்தாள். ஏற்கெனவே அவன் குளிக்கச் செல்வதைப் பார்த்திருந்தாள். இப்போது அவனைக் கண்டதும், 'கிட்டா' என்று அழைத்தாள்.

''என்ன மன்னி?''

''இப்ப மணி ஆறேகால்.''

''எங்க போகணும் மன்னி?''

''நீ மின்னால ஈர முண்டை மாத்திண்டு ஷர்ட் போட்டுண்டு வா.''

''நாளைக்கு ராதையைப் பெண் பார்க்க பரோடாவிலேர்ந்து இன்னைக்கு ராத்திரி வர்றா... சாமுக்குட்டியும் சிங்காரியும் அலை பாய்ஞ்சுண்டிருக்கா. இன்னைக்கு அவாளுக்காக நான் எங்கேயெல்லாம் போகண்டி வருமோ தெரியாது, மன்னி.''

''சிங்காரி சொல்லலையோ? இது எத்தனாவது புள்ளை...? நீதான் பொண் பார்க்க வந்த எல்லாப் புள்ளைகளையும் பாத்திருக்கியே. பந்தரண்டா பதிமூணா... கிட்டா, அக்னியைக் குளுப்பாட்டி அம்பியில வைச்சா மாதிரி நெறம்... ஜாதகம் கேக்கவே வேண்டாம். ஏழில செவ்வாய். எட்டுல ராகு. நட்சத்திரம் என்னன்னு நெனைக்கிறாய்? பூராடம். கரும்பூராடம். பூராடம் கழுத்தில நூல் ஆடாது. பணம் மாத்திரம் இருந்தால் போருமாடா கிட்டா...?''

''நேக்கு நேரமாறது மன்னி.''

''மறந்துட்டேன். நீ ஒரு சின்ன ஒத்தாசை செய்யணும்.''

''வேகத்தில சொல்லு.''

''ராஜம்மாவுக்குன்னு கடுகு மாங்காய் போட்டு பரணியில வைச்சிருக்கேன். மாசம் மூணுக்கு மேல ஆயாச்சு. பாட்னாவுக்கு இன்னம் போய்ச் சேரலை... எழுத்துக்கு மேல எழுத்து வந்துண்டிருக்கு... நூரணியிலேர்ந்து சிவனும் அவன் பொண்டாட்டியும் இன்னைக்கு சாயங்காலம் பாட்னா போறா... இது நேத்தைக்கு ராத்திரிதான் தெரிஞ்சது. அண்ணா கோழிக்கோட்லேந்து இன்னம் மடங்கலை... இந்த உபகாரம் செய்வேன்...''

''ரொம்ப கனமா இருக்கா...?''

''ஹேய், அத்தரை ஒண்ணும் இல்லை. மிஞ்சி மிஞ்சிப் போனா பத்து கிலோ இருக்கும் கிட்டா! சைக்கிள்ள கட்டிக்கோ...''

''சாமுக்குட்டி நான் இல்லாக்கடவுக்கும் கல்பாத்திக்கும் போகண்டியிருக்கும்னு சொல்லியிருக்கான். இல்லாக்கடவிலேந்து கல்பாத்திக்கு நூரணி வழியா போறேன். கொஞ்சம் கத்தும், அம்படத்தான்.''

மேலும் நின்று பதில் சொல்லாமல் கிட்டா, ஈர வேட்டியுடன் விரைந்து கோவிலுக்குள் பிரவேசித்து, லட்சுமி நாராயணன் - லட்சுமி - பூதேவிகளுக்கு அவசர நமஸ்காரம் செய்துவிட்டு, சாஸ்தாவையும் ஒரு பார்வை பார்த்துவிட்டு சாமுக்குட்டியின் வீட்டை அடைந்தான்.

''என்னடா கிட்டா, கொளத்தை ரெண்டாக்கலியா? அஞ்சேமுக்காலுக்கே கொட்டற மழையில போனயோ?'' என்றாள், சிங்காரி.

''என்ன செயறது மன்னி... பாருக்குட்டி நிறுத்தினாள்.''

''என்ன அவளுக்கு?''

''ஆரோ நூரணியிலேந்து பாட்னா போறாளாம். பொண்ணுக்குக் கடுகு மாங்காய் குடுத்து அனுப்பணுமாம்.''


''அவளுக்கு இதுதான் தொழில்... பாம்பே, டெல்லி, கல்கத்தா, பாட்னாவுக்குன்னு ஆரும் போகப்படாதே.... போறான்னு தெரிஞ்சாப் போரும்... புளி, வடாம், மாங்காய்னு எதையாவது மூட்டை கட்டிச் சொமக்க வைப்பாள். கிடக்கா விடு. நமக்கு ஆயிரம் ஜோலி. விடிஞ்சா மாப்பிள்ளையாத்துக்காரா வந்துடுவா.''

''நாளைக்கு வர்றவாளாவது நம்ப ராதையைப் பிடிச்சிருக்குனு சொல்லணும் மன்னி... கலியாணம் நிச்சயமானா நான் ஒருத்தனா நின்னு எல்லாக் காரியங்களையும் நடத்துவேன்...''

திடீரென்று ராதையின் குரல் கேட்டது. ''பரோடாக்காராளுக்கு என்ன பிராந்தா பிடிச்சிருக்கு, கிட்டா?''

''ராதை, நீ என்ன பேசறாய்?''

''ஒம்பது பேர் கண்ணுக்கு நான் மையாத் தெரிஞ்சேன். இவா கண்ணு மாத்தரம் பொட்டையாயிடுமா, கிட்டா...



வரட்டும். நமஸ்காரம் பண்றேன். ரூக்கொத்தன் டிபன் இங்கட்டும்...''

கிட்டாவின் மனம் பூராவும் ராதை அடைந்து கிடந்தாள். திடீரென்று பழைய காலம் கண்முன் நின்றது.

ஒரு தடவை சாமுக்குட்டியும் கிட்டாவும் தோட்டத்துக்குப் போனார்கள். உடன் பதினோரு வயது ராதையும் இருந்தாள். தோட்டத்தில் அப்பா இரண்டு மூன்று பேர்களுடன் நீண்ட நேரம் பேசிக் கொண்டிருக்கையில் ராதையும் அவனும் தனித்துப் போனார்கள். திடீரென்று -

ராதை, ''கிட்டா!'' என்றாள்.

''என்ன வேணும்? இளநீரா, இல்லே மாங்காயா...?''

''வர்ற புதன்கிழமை கமலத்துக்குக் கலியாணம்.''

''அதுக்கென்ன?''

''அவளுக்குப் பதினாறு பதினேழு வயசு தான்...''

''தெரியும்...''

''அம்மையும் அப்பாவும் என் கலியாணத்தையும் இந்த வயசில் பண்ணுவாளோ?''

''அவாளையே கேளு.''

''கிட்டா...''

''என்னடீ...?''

''எனக்கு ஒரு ஆசை...''

''ராஜகுமாரன் மாதிரி ஒரு புள்ளை ஆம்படையானா வரணும். அதானே?''

''இல்லை... எனக்கு ஒன்னைப் பிடிச்சிருக்கு. நான் ஒன்னைக் கல்யாணம் பண்ணிக்கிறேனே!''

''ப்ராந்தாட்டம் பேசாதே... எனக்கு என்ன யோக்யதைட இருக்கு? மூணு வயசில அம்மா செத்துப் போனா. அப்பா என்னை அநாதையா விட்டுட்டு ஒரு மலையாளப் பொண்ணை மோகிக்க அவ கூட கொஞ்ச காலம் இருந்துட்டு செத்துத் தொலைஞ்சார். நான் ஒவ்வொரு நா ஒவ்வொரு ஆத்தில சாப்பிட்டு வளந்தேன். ஆர்

பி.வி.ஆர்

என்ன வேலை சொன்னாலும் செய்தேன்... உன்னோட அப்பாதான் ஸ்கூலுக்கு அனுப்பிவார்... எட்டாங்கிளாஸ்ல ஃபெயில். அப்புறம் உங்காத்தில மாட்டைக் குளிப்பாட்டினேன். பருத்திக் கொட்டை புண்ணாக்கை அரைச்சேன். சாமான்கள் வாங்க அங்காடிக்குப் போனேன். ரெயில்வே ஸ்டேஷனுக்கு டிக்கெட் புக் பண்ண க்யூவில நின்னேன். கல்பாத்தி, சேவிபுரம், அம்பிகாபுரம்னு ஆர் எங்கெல்லாம் போகச் சொல்றாளோ அங்கெல்லாம் போனேன். ஊரிலே இருக்கிறவா எல்லாரும் எனக்கு அண்ணா. அவாளோட சம்சாரங்கள் மன்னி. எல்லாரும் சொல்ற காரியத்தைச் செய்தாகணும் நான். நீ என்னடான்னா பேத்தறாய்...''

''சரி, இனிமே கேக்கலை... நேக்கு ரெண்டு மாங்கா பறிக்கத் தா...'' என்றாள் ராதை.

**ப**ழைய நினைவுகள். அதனால் யாருக்கு என்ன பயன்? இப்போது ராதையைப் பெண் பார்க்க வருகிறார்கள். ஏகப்பட்ட வேலை இருக்கிறது. அவன் இல்லாக் கடவு, கல்பாத்தியெல்லாம் போய்விட்டு வேகவேகமாகத் திரும்பும்போதே சாமுக்குட்டியின் குரல் கேட்டது: ''எங்கேடா தொலைஞ்சாய், கிட்டா?''

விஷயத்தைக் கூறினான்.

''இன்னம ஊர்ல அவா இவா சொன்னா நீ எதுவும் செய்யப்படாது... நீ இந்தாத்துப் புள்ளை!''

கிட்டா மவுனமாய் நின்றான்.

''சாப்பிட்டியா?''

''இல்லை...''

''பின்னால சாப்பிடு... சிங்காரி காத்துண்டிருக்கா...''

''ராதை தூங்கியாச்சா, அண்ணா?''

''ஆரு பார்த்தா... சாப்பிட்டுட்டு வா, ஹாலைச் சரியாக்கணும். நாளைக்குப் பெண் பார்க்க வரவா உட்கார இடமில்லாம தரையில கண்ட கண்ட சாமான்கள் இறைஞ்சு கிடக்கு.''

''சரி அண்ணா.''

கிட்டா தூங்கப் போனபோது மணி பன்னிரண்டரை.

**ம**ழை கொட்டிக்கொண்டிருந்தது. கையைத் தலையணையாக வைத்து உலகத்தையே மறந்து உறங்கி உறைந்து போன கிட்டாவை சாமுக்குட்டி, முதுகில் தட்டித் தட்டி எழுப்பினார்.

கண்கள் இரண்டும் வலிக்க, அவன் மெதுவாக இதழ்களைத் திறந்தான்.

''ஸ்டேஷனுக்குப் போகணும்ங்கறதை மறந்துட்டியா? வண்டி மூணு மணிக்கு வர்றது. இப்ப ரெண்டரை. வேகத்தில எழுந்து மூஞ்சியை அலம்பிக்கோ... டிரைவர் காத்துண்டிருக்கான்...''

''சரி அண்ணா...''

''விக்டோரியா காலேஜ் கிட்டக்க இருக்கே நம்ப ஆம், அங்கே எல்லாம் ரெடியா இருக்கு. நீ வேண்டதைப் பார்த்துச் செய்.''

''சரி அண்ணா.''

ரெயில் பாலக்காடு ஸ்டேஷனை வந்து அடையும்போது மணி நாலரை. ஒன்றரை மணி நேரம் தாமதம்.

பரோடாக்காரர்கள் மூன்றே பேர். அப்பா அம்மா மற்றும் பிள்ளை.

காலை ஆறு மணிக்கு பிள்ளையின் தகப்பனார், ''சரியா ஒம்பது மணிக்கு வண்டியை அனுப்பச் சொல்லு. ஒன்பதரைக்கு வருவோம். பொண்ணைப் பார்ப்போம். பேச வேண்டியதைப் பேசிட்டுப் பத்தரைக்குக் குருவாயூர் போயிடுவோம்.''

''கார் இங்கேயே இருக்கும்.''

''தாங்க்ஸ்!''

**ஒ**ன்பதரை.

ராதை நமஸ்காரம் பண்ணி விட்டு உள்ளே சென்றாகிவிட்டது.

''என்னடா சொல்றே'' என்று பிள்ளையின் தகப்பனார் கேட்டார்.

''நீங்களும் அம்மாவும் என்ன சொன்னாலும் சரிப்பா.''

''சார், எங்களுக்கு ஓ.கே.'' என்றார் பரோடா!

காதில் குடம் குடமாகத் தேன் வார்த்தது போலிருந்தது கிட்டாவுக்கு. பிள்ளை என்ஜினியர். சிவப்பாய், லட்சணமாய் இருக்கிறான். அவனுடைய வேண்டுதல் நிறைவேறிவிட்டது.

மீண்டும் பேசலானார் பரோடாக்காரர்.

''ராதா உங்களுக்கு ஒரே பொண்ணு

## ராமேஸ்வரம் வாசகர்களே!

**கல்கியின் நகரச் சிறப்பிதழ் வரிசையில் அடுத்தது ராமேஸ்வரம்தான். வழக்கம்போல - தயாரிக்கப் போவது வாசகர்களேதான். உங்கள் ஊரின் சிறப்புகள், பிரச்னைகள், அதிசயங்கள், சாதனையாளர்கள் பற்றிய குறிப்புகள் என்று என்னவெல்லாம் இடம்பெற வேண்டுமென்று நினைக்கிறீர்களோ - எழுதி அனுப்புங்கள். உங்கள் தகவல்களின் அடிப்படையில் எம் நிருபர்கள் நேரில் வந்து பார்த்தபின் அவை அரங்கேறும்.**

**உங்கள் கடிதங்கள் வந்து சேரக் கடைசி நாள் : 15.5.94.**

**- ஆசிரியர்**

பிள்ளை கிடையாது. நாளைக்கு இவளுக்குத்தான் எல்லாம் வரப் போகிறது. கரெக்ட்?''

''மேலே பேசுங்கோ.''

''இன்னித்து நிலவரப்படி எவ்வளவு தேறும்?''

''எதுக்குக் கேட்கறீங்க?''

''சொல்லுங்களேன்...?''

''கிட்டத்தட்ட நாப்பது...''

''என்கிட்ட இப்ப அம்பது இருக்கு. எல்லாம் சொந்த இண்டஸ்ட்ரியில் போட்டிருக்கேன். ஒரு ஃபாரின் கொலாபரேஷன் கிடைக்கப் போறது... அதுக்குப் பணம் தேவை. அப்புறம் இண்டஸ்ட்ரி ரொம்பப் பெரிசாயிடும்... ஒரு இருபது லட்சம் இன்வெஸ்ட் பண்ண முடியுமா? இப்பவே இல்லை. மாரேஜ் முடிஞ்சப்புறம்? ராதாவும், ஏன் நீங்களும்கூட டைரக்டர்லா இருக்கலாம்.''

''முடியாது.''

''அப்படீன்னா?''

''முடியாதுன்னு அர்த்தம். நான் உசிரோட இருக்கிறப்பவே என் சொத்தை சின்னாபின்னப்படுத்த எண்ணம் இல்லை!''

''அப்ப...?'' பரோடா இழுத்தது.

''புரியறது... கிட்டா, இவங்களைக் கார் வரை கொண்டு போய் விட்டுட்டு வா...''

அவர்கள் சட்டென்று எழுந்தார்கள். கிராமத்து உறவினர்கள், மற்றும் இருநல்லாய் சகோதரி, கல்பாத்தி அத்தை எல்லோரும் திக்பிரமையுடன் உட்கார்ந்திருக்க, இரண்டாவது இடி விழுந்தது :

''கிட்டா!''

''என்ன அண்ணா?''

''நீ இப்பவே என் சொத்துக்களைக் கேட்க மாட்டே... கேட்டாலும் தரமாட்டேன். ராதை ஜாதகத்திலே ஏழ்ல செவ்வாய், எட்ல ராகு, நட்சத்திரம், பூராடம், அதுவும் கரும்பூராடம். அவ கழுத்தில தாலி கட்ட நீ ரெடியா?''

''அண்ணா, இதென்ன பிராந்தாட்டம் பேசறயள்...?''

''பதில் சொல்லுடா, ராஸ்கல்?''

''ஒரு காசினுக்கு ரெண்டு பக்கம் இருக்கு அண்ணா... ராதை என்ன சொல்றா கேளுங்கோ...?''

''ஆவஸ்யம் இல்லே... பின்னாலேயே அவ சொல்லியாச்சு. நாங்கதான் ஆலோசிச்சோம். இப்ப ஆலோஜனை இல்லை... தீர்மானமாயாச்சு...''

''நான் ஒரு அனாதை அண்ணா...''

''இனி, அந்த வார்த்தைக்கு இடமில்லேடா... ராதை... ராதை... டீ, சிங்காரி, தூணாட்டம் நிக்காம நம்ம பொண்ணைக் கூட்டிண்டு வா.''

அதற்கு முன் ராதையே வந்தாள்.

''என்னப்பா?''

**யுவர் அட்டென்ஷன் ப்ளீஸ்!**



**அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டிக்கான கதைகள் வந்து சேர வேண்டிய கடைசித் தேதி : ஜூன் 15! (விவரமான தகவலுக்குப் பார்க்க : சென்ற இதழ் அல்லது அடுத்த இதழ்)**

**- ஆசிரியர்**

''இந்த கிட்டாதாண்டீ ஒன் ஆம்படையான். அவனுக்கு நமஸ்காரம் பண்ணு...''

அவசரமாய் முன்னேறி வந்து நமஸ்கரித்தாள். அவளுடைய நெற்றி கிட்டாவின் பாதத்தில் லேசாக இடித்தது.

கிட்டா கால்களை இழுத்துக் கொள்ளவில்லை.

அன்றிரவு சிங்காரி தன் கணவனைப் புது மரியாதையுடன் பார்த்தாள். இத்தனை வருஷங்களாக அவள்தான் அவரைக் கடைக்கண் பார்வையால் பத்து விரல்களுக்குள் மடக்கிப் போட்டிருந்தாள். இப்போது திடீரென்று இந்த ஆவேசம் இவருக்கு எப்படி வந்தது?

''என்னத்துக்கு இந்த முடிவுக்கு வந்தேள்?''

''ராத்திரி ராதை கிட்டாட்ட பேசியதைக் கேட்டிருந்தா நீயும் இந்த முடிவுக்குத்தான் வந்திருப்பாய்!''

''என்ன பேசினாள்?''

''கிட்டா! நீ ஊருக்கெல்லாம் உபகாரம் பண்றயே. எனக்கு ஒரு உபகாரம் பண்ணப்படாதா? இப்படி மாத்தி மாத்தி எல்லாரும் என்னை வந்து பார்த்துட்டு ஒதுக்கிட்டுப் போறா. இந்த அவமானத்தை இன்னும் எத்தனை நாள் தாங்கறது? என்னை இழுத்துண்டு ஓடிடேன்! அதான் பெரிய உதவின்னா.''

''அதுக்கு கிட்டா என்ன சொன்னான்?''

'''உண்ட வீட்டுக்குத் துரோகம் பண்ண மாட்டேன்'னான். வேறென்ன சொல்வான் நம் கிட்டா? தங்கமான பிள்ளை.''

''தங்கமான மாப்பிள்ளை.''

என்றாள் சிங்காரி, கணவன் சாமுக்குட்டியின் கண்ணீரைப் புடவைத் தலைப்பால் துடைத்தபடி.



● அதுதான் பாலிஷ்டு கவர்!

● திரைப்பட பாதிப்பு...?



● த.சங்கர், திண்டுக்கல்.

*? அமெரிக்காவில் வேலை இல்லாமல் இருப்பவர்களுக்கு மாதம் ரூ.25,000/- வழங்குகிறார்களே?*

! ஒரு டாலருக்கு ரூ.32/- என்னும்போது- அமெரிக்க விலைவாசிகளைக் கருத்தில் கொள்ளும் போது- இது அதிகமில்லை. வேலைவாய்ப்பு அளிக்க வேண்டியது அரசின் கடமை என்பதால் அது கிடைக்காத போது மான்யம் வழங்கப்படுகிறது. கூடவே அந்நபருக்கு ஏற்ற வேலை எங்கு கிடைக்கும் என்பதும் சொல்லப்படும். மூன்று வாய்ப்புக்களை அந்த நபர் ஏற்காத போது மான்யம் நிறுத்தப்படும். அங்கேயெல்லாம் எந்தத் திட்டத்தையும் நன்கு யோசித்து வகுத்துச் சீராகச் செயல்படுத்துவார்கள் சார்!

● பி.வீரபாகு, திருச்சேறை.

*? இப்போதைய தமிழ் சினிமா பாடல் வரிகள் ரொம்பப் பச்சையாக இருக்கிறதே?*

! 'பகைமைப் புரட்சி' என்பதை நம் சினிமா கவிஞர்கள் தப்பர்த்தம் பண்ணிக் கொண்டு விட்டார்கள் போலிருக்கிறது!

● நா.கண்ணன், மன்னார்குடி.

*? கோடை வெயிலால் வாடும் தமிழக மக்களுக்கு அம்மா படம் பொறித்த தொப்பி வழங்கலாமே?*

! ஏற்கெனவேதான் குல்லா போட்டிருக்கிறார்களே, தொப்பி வேறு எதற்கு?

● லெட்சுமி தேவி, திருப்பராய்த் துறை

*? துளசியின் மகிமை பற்றி கூறுங்கள்?*

! இறைவனுக்குப் பிரியமானது; பூஜைக்கு உகந்தது; கண்ணனின் எடைக்கு ருக்மிணி பக்தியோடு வைத்த ஒரு துளசிதான் சமமாயிற்று. நிற்க, இந்தக் கோடையில் சில துளசி இலைகளை வெந்நீரில் ஊற வைத்துக் குளிர்ந்ததும் தேனும் எலுமிச்சை சாறும் கலந்து அருந்தினால் 'டப்'புக் கொட்டலாம். ஆரோக்கியமும் கூட.

● எம்.ராஜேந்திரன், லால்குடி.

*? தமிழ் நாட்டில் வரி விதிப்பை சக மந்திரிகள் அறிவிக்க, வரி நீக்கம் அல்லது குறைப்பை மட்டும் ஜெ. அறிவிக்கிறாரே...?*

! சரியாப் போச்சு! மக்களின் நன்றியை முதல்வர் அன்றி பிறர் பெறுவதாவது? மேலும் வரி நீக்கிய வள்ளலுக்கு நன்றி கூறி பத்திரிகை விளம்பரமும், போஸ்டர் விளம்பரமும் அமைச்சருக்கா தரமுடியும்? முதல்வர் ஒருவருக்குத்தானே அந்தத் தகுதி உண்டு!

● ஜி.இந்திரா, திருச்சி.

*? 'செக்ஸ், வன்முறை நிறைந்த படங்களால் கிரிமினல் உலகத்துக்குத் தவறாக வழிநடத்திச் செல்லப்பட்டேன்' என்று கூறி கருணை வேண்டுகிறாரே ஆட்டோ சங்கர்?*

! இப்படி கிரிமினல்கள் கூறித் தப்பிக்க வழிவகுப்பவை தங்கள் படங்கள்தான் என்பதை இப்போதாவது படத் தயாரிப்பாளர்கள் உணர்வார்களா?

● யோசனை கூறினார்!



● அவமதிக்கப் பட்டார்



● த.சத்திய நாராயணன், அயன்புரம்.

*? 'மறப்போம், மன்னிப்போம்' என்றால்...?*

! உறவுக்குக் கை கொடுத்தால் ஏற்கெனவே கூறப்பட்ட ஊழல் புகார்களை மறப்போம். கூறியவர்களை மன்னிப்போம் என்று அர்த்தம்.

● சையத் அப்துல் காதர், தக்கோலம்.

*? கபில், பிரபாகர் இன்றி இந்திய கிரிக்கெட் அணி சோபிக்குமா?*

! பாகிஸ்தான் போலிங் புயல் வாக்கர் யூனுஸும் இல்லை என்பது ஓர் ஆறுதல்.

● ஆர். அப்துல் சலாம், திருச்சி.

*? தாம்பரம், குரோம்பேட்டை பகுதிகளில் கோவில், மசூதி கட்ட நிலமும் ரூ. 12 லட்சமும் 'ஜெ' வழங்கி இருப்பது பற்றி...?*

! குழந்தையைக் கிள்ளவும் வேண்டாம். தொட்டிலை ஆட்டித் தூங்க வைக்கவும் வேண்டாம்.

● சின்னஞ்சிறு கோபு, மங்கைநல்லூர்.

*? திருச்சி, செங்கை மாவட்டங்கள் இரண்டாகப் பிரியப் போவதால் ஜெ. பெயரில் ஒரு மாவட்டம் நிச்சயம் தானே?*

கோடைக்கு
அம்மா படம் பொறித்த
தொப்பி வழங்கலாமே?

! சே! ரொம்ப மோசம். எல்லா மாவட்டங்களையுமே இரண்டாகப் பிரித்து, பிரிக்கப்பட்ட ஒவ்வொரு இரண்டாவது மாவட்டத்துக்கும் 'ஜெ' பெயரைச் சூட்டுவதுதான் தர்ம நியாயம்!

● கே. எம்.கருப்பண்ணசாமி, கோபி.


*? மறைந்த காஞ்சி பெரியவர் பிராமணரல்லாத - குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்ன செய்தார்? தமிழ் மொழிக்கு என்ன தொண்டாற்றினார்?*

! காலனித் தொழிலாளி உள்பட அனைத்துக் கலைஞர்களுக்கும் ஆதரவு தந்து (சதஸ்) விழா நடத்தினார். 'செய்யும் தொழிலே தெய்வம்' என்று வலியுறுத்தினார். திருப்பாவை - திருவெம்பாவை போன்ற இலக்கியங்களை மக்களிடையே பிரபலப்படுத்தினார். இன்னும் எத்தனையோ. கறுப்புக் கண்ணாடியைக் கழற்றி விட்டால் கருப்பண்ணசாமிக்கு தெளிவு பிறக்கும்.

● ஜி.மாஜினி, ரெட்ஹில்ஸ்.

*? பாகிஸ்தான் அணியிலிருந்து முன்னாள் கேப்டன் மியான்தாத் விலகப் போவதாக அறிவித்திருப்பது பற்றி?*

! கிரிக்கெட் பாலிடிக்ஸ் எல்லா நாட்டிலுமே விதிவிலக்கு இல்லாமல் ஆட்டி



● ஆட்டம்...



● ....சோபிக்குமா?

வைக்கிறது என்பதற்கு மேலும் ஓர் உதாரணம்.

● ஆர். ராஜதுரை, சீர்காழி.

*? 'அரிசி விலை உயர்வுக்கு மத்திய அரசுதான் காரணம்' என்கிறாரே, ஆர்.எம்.வீரப்பன்?*

! அதுதான் பாலிடிக்ஸ்; போகட்டும். நீங்க எதுக்கு இந்த வாரம் 42 கார்டுகள் எழுதியிருக்கீங்க? கார்டு விலையும் கூடிவிடப் போகிறது.

● அ. க. கிருஷ்ணன், சென்னை.

*? சமீபத்திய 'ஜெ' அரசின் சாதனை?*

! பணி மாற்றம் செய்யப்பட்ட போலீஸ் உயர் அதிகாரி திலகவதியின் காரையும் டெலிஃபோனையும் பிடுங்கிக் கொண்டு, ஆட்டோவில் போக வைத்த அற்பத்தனத்தை விஞ்சும் ஒரு சாதனையை வேறு யார் செய்ய முடியும்?

● இரா. மகாராசன், ஆரல்வாய்மொழி.

*? மத்திய, மாநில அமைச்சர்கள், செயலர்கள் எண்ணிக்கையை மூன்றில் ஒரு பங்காகக் குறைக்க வேண்டும் என்று ஈ.எம்.எஸ். யோசனை கூறியிருக்கிறாரே?*

! நல்ல யோசனைதான். பூனைக்கு யார் மணிகட்டுவது? புதிய புதிய மாவட்டங்களை உருவாக்கி புதிய புதிய அதிகார வர்க்கங்களை தோற்றுவித்துச் செலவுகளை அதிகரிக்காமல் இருந்தாலே பெரிய காரியம். கேட்கவா போகிறார்கள்?

● இரா. சிவகுமார், சென்னை

*? ஜப்பானிய பிரதமர் ராஜினாமா செய்தது குறித்து?*

! வெட்கம், மானம், சூடு, சொரணை உள்ளவர்.

● தென்றல் கார்த்தி, நாட்டரசன் கோட்டை.

*? உலக நாடுகள் பாராட்டும் வகையில் 'ஜெ' தலைமையில் நல்லாட்சி நடந்து வருவதாக எம்.பி., ராஜாரவிவர்மன் கூறியுள்ளாரே?*

! 'லெ மாண்ட்' என்ற பிரெஞ்சுப் பத்திரிகையில் அம்மையார் பற்றி வெளிவந்துள்ள கட்டுரையை அவர் படித்திருக்க மாட்டார். படிக்கும் வாய்ப்புப் பெற்ற நான், தமிழன் என்ற முறையில் வெட்கித் தலைகுனிகிறேன்!

❑ ரூ.25.பரிசு பெறுவர்:
எம். ராஜேந்திரன்,
22,ஓமக்குளத் தெரு,
லால்குடி, 621601.

● விலகுகிறார்!



### 76. கண்டேன் சீதையை

சுக்ரீவன் ஊகித்துப் பேசிய பேச்சு ராமனுடைய காதில் அமிருதம் போல் கலைவத்தது. வானரர்கள் வருவதை அவர்கள் ஆர்வத்தோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் போது மேலே ஆகாயத்தில் பெரும் கலகலப்பு கேட்டது. வானரக் கூட்டம் கோஷம் செய்து



கொண்டு வந்து இறங்கினார்கள்.

ஹனுமானை முன்விட்டுக் கொண்டு அங்கதனும் வானரர்களும் வேகமாகக் கிளம்பி ராம லக்ஷ்மணர்களுடன் அரசன் சுக்ரீவன் இருந்த இடம் சென்றார்கள்.

ஹனுமான் ராமசந்திரனை வணங்கி, ''கண்டேன் புனித தேவியை! க்ஷேமமாக இருக்கிறாள்! அவளைத் திக்கு நோக்கி வணங்குகிறேன்'' என்று தெற்கே திரும்பி வணங்கினான்.

இப்படி சீதையின் உயிருக்கும் சீலத்துக்கும் ஏதொரு தீங்குமின்றி அவள் க்ஷேமமாக இருப்பதை ஹனுமான் சக்கரவர்த்தித் திருமகனுக்கு முதலில் உணர்த்தினான்.

சுக்ரீவனும் லக்ஷ்மணனும் ராமனைக் கட்டியணைத்து ஆனந்தப் பரவசமானார்கள்.

''வானரங்காள்! சீதை எங்கே இருக்கிறாள், எப்படி இருக்கிறாள், எப்படிக் கண்டீர்கள்? எல்லாம் விவரமாகச் சொல்லுங்கள். எனக்குப் பொறுக்க முடியவில்லை'' என்றான் ராமன்.

''கண்டதையும் நடந்ததையும் எல்லாம் ராமசந்திரனுக்கு நீரே சொல்ல வேண்டும்'' என்று வானரங்கள் கேட்டுக் கொள்ள, ஹனுமான் சீதையை தியானித்து, திசை நோக்கித் தலை வணங்கி நமஸ்கரித்துவிட்டு நடந்த விஷயங்களைச் சொல்ல ஆரம்பித்தான்.

செய்ய வேண்டியதையெல்லாம் தைரியமாகவும் உற்சாகமாகவும் ஒருவனாகவே செய்து முடித்து விட்டு ராமசந்திரன் முன்னிலையிலும் தன்னுடைய அரசன் முன்னிலையிலும் நிற்கும் போது ஹனுமான் மேற்கொண்ட அடக்கத்தைக் கவனிக்க வேண்டும். தான் செய்துவிட்ட பெரும் காரியத்தைப் பற்றிக் கர்வப்படாமல், யுவராஜனான அங்கதன், அறிவிலும் வயதிலும் பெரியோனாகிய ஜாம்பவான், இன்னும் மற்ற வீரர்களுக்கும் மரியாதை காட்டி அவர்கள் ஏவவிடுவதற்கு முன் தான் பேசாமலிருந்தது வாயு புத்திரனுடைய பண்பாட்டின் மகிமை.

தவிர, இயற்கையிலேயே எவனாயினும் அத்தனை கஷ்டமான காரியங்களை



நிறைவேற்றிய ஒரு மகான் அதைப் பற்றித் தானே அவசரப்பட்டுப் பேச மாட்டான். இதை முனிவர் நினைவில் வைத்து இந்தப்படி சித்திரித்திருக் கிறார்.

இன்னொரு விஷயமும் இவ்விடத் தில் கவனித்தல் தகும். ஜானகியை லங்கையில் நேரில் கண்டு பணிந்தது முதற்கொண்டு பிராட்டியைத் தியானிப் பதிலும் பக்தி செலுத்துவதிலும் ஹனு மான் மிகவும் ஈடுபட்டு விட்டான். ராம பக்தியைக் காட்டிலுங் கூட பிராட்டியி விடம் அவனுக்கு உண்டாகிய பக்தி அதிகமாகி விட்டது. பரம்பொருளைத் தாயாகப் பாவித்து மகிழ்ந்த எல்லாப் பெரிய பக்தர்களுடைய அனுபவமும் இதுவே.

“நூறு யோஜனை அகலமுள்ள கடலைத் தாண்டித் தென்கரையிலுள்ள துஷ்டன் ராவணனுடைய லங்கா நகரத் தை யடைந்தேன். அங்கே அந்தப்புர வனத்தில் சிறை வைக்கப்பட்டிருந்த சீதையைக் கண்டேன். ராம ராம என்று ஒரே சிந்தையாக உயிரை வைத்துக் கொண்டிருந்த அந்த ஜானகியைக் கண் டேன். அவலக்ஷண வடிவங்களைக் கொண்ட கொடிய ராக்ஷஸப் பெண் களின் காவலில் மிகவும் துயரப்பட்டுக் கொண்டிருந்தாள். தலை மயிர் பின்னப் படாமலும் தரையில் படுத்தும் துக்க மும் கவலையும் நிறைந்த முகத்தின ளாக உடுப்பெல்லாம் நிறம் மாறிப் பனிக் காலத்துத் தாமரைக் குளம் போல் ஒளியிழந்திருந்தவளைக் கண்டேன். அரக்கனிடமிருந்து தப்புவதற்காக உயிர் நீக்க எண்ணினாள். தங்களுடைய கீர்த் தியை மெதுவாக எடுத்துச் சொல்லி அதற்கு முன் என்னை அறியாத அவளுக் குக் குரங்கான என்னிடம் நம்பிக்கை உண்டாகச் செய்தேன். பிறகு பேசி னேன். உமக்கும் அரசன் சுக்ரீவனுக்கும் ஏற்பட்ட நட்பைப் பற்றி அறிவித்தேன். நீர் துயரப்பட்டுக் கொண்டிருப்பதை யும் சொன்னேன். உம்முடைய குறை யாத அன்பைப் பற்றிச் சொல்லி அவளை மகிழ்வித்தேன். புனித தேவி உமக்குக் கொடுக்கும்படியாக இந்த ஆபரணத்தைத் தந்தாள். ஒரு காக்கை தாங்கள் தூங்கும் போது தன்னைத் தொந்தரவு செய்ததைப் பற்றித் தாங்கள் வருந்தமுற்றதை எனக்குச் சொல்லி, தங்களுக்கு அதை நினைவூட்டச் சொன் னாள். அவளுடைய திலகம் அழிந்த ஒரு சமயம் தாங்கள் மலைக்கல்லை அரைத் துத் திலகமிட்டதை நினைவூட்டச் சொன்னாள். 'ஒரு மாதம் உயிர் வைத்துக் கொண்டிருப்பேன். அதற்கு மேல் முடியாது' என்று தங்களிடம் என்னைச் சொல்லச் சொன்னாள். வானரர்களுடைய அரசனுக்கும் இது தெரியும்படியாகச் சொல்வாய் என்று எனக்கு ஆணையிட்டாள். இனி உடனே நாம் லங்கா நகரம் படையெடுத்துச் சென்று தேவியை மீட்டுக் கொண்டு வருவதைப் பற்றிச் சிந்திப்போமாக” என்று சொல்லி சீதை கொடுத்த சிகா மணியை சக்கரவர்த்தித் திருமகனிடம் கொடுத்தான்.

அதை வாங்கி உற்று நோக்கி ராம சந்திரன் விஸ்மயமாகிப் போனான். பிறகு ஆனந்தமோ துயரமோ உணராத நிலை அடைந்தான்.

சிகாமணியை மார்பில் வைத்து ஒத்திக் கொண்டு “லக்ஷ்மணா” என்று அழுதான். “வீர வாயுவின் புத்திரனே! சீதையைக் கண்ட வீரனே! உன்னைப் போல் நானும் இப்போது அவளைக் கண்டேன்” என்று ஹனுமானைக் கட்டி அணைத்துக் கொண்டு “எல்லா நிகழ்ச் சிகளையும் விஸ்தாரமாக மறுபடியும் சொல், என் அன்புக்குரிய வீரனே! சீதை என்ன சொன்னாள், அதைத் திரும்பத் திரும்பச் சொல், ஹனுமானே! அந்த மொழிகள் தாகத்தைத் தணிக்கும் தண் ணீர் போல் சுவைக்கிறது” என்றான்.

அப்படியே மாருதி எல்லா நிகழ்ச்சிகளையும் அனைவரும் கேட்க விஸ்தாரமாகச் சொல்லி, சீதை ராம னிடம் சொல்லச் சொன்ன வார்த்தை களை அப்படியே அவளுடைய இனிய மொழிகளாகவே சொல்லி ராமன் உள்ளத்தை நீராகப் பெருகச் செய்தான்.

“எத்தனையோ ராக்ஷசர்களைக் கொன்ற என் ராமன் ஏன் இப்படி நான் இங்கே தவித்துக் கொண்டிருக்க இன் னும் வரவில்லை? அரக்கனை சம் ஹாரம் செய்ய இன்னும் ஏன் வராம லிருக்கிறார்? ஏன் ராவணனை வதம் செய்ய லக்ஷ்மணனை அனுப்பாமலிருக் கிறார்? ஏன் வீரனானவர் என்னை உபே க்ஷித்து வருகிறார்? நான் என்ன பிழை செய்தேன்? ஒன்றும் இல்லையே!' இப் படிச் சீதை சொன்னாள். நான் அவளுக் குச் சமாதான வார்த்தைகள் சொன் னேன். 'உம்மை நினைந்து நினைந்து ராமசந்திரன் துக்கக் கடலில் மூழ்கி

நிற்கிறான். கணமும் அவனுக்கு நிம்மதியில்லை. ராமனும் லக்ஷ்மணனும் உம்மை மறந்து விட்டதாக எண்ண வேண்டாம். அவர்கள் படும் துக்கத்தை விளக்கக் கூடிய மொழிகள் எனக்கில்லை. நான் போய் நீர் இவ்விடம் இருப்பதைச் சொல்ல வேண்டியதுதான் தாமதம். உடனே அவர்கள் வருவார்கள். அதிக காலம் காத்திருக்க வேண்டியதில்லை. வந்து விடுவார்கள். லங்கையைச் சாம்பலாக எரிக்கப் போகிறார்கள். ராவணனை அவன் கூட்டத்தோடு வதம் செய்து அயோத்தியா நகரத்துக்கு உம்முடன் திரும்பிப் போவார்கள். எனக்கு அடையாளம் ஒன்றைத் தருவீராக. நான் உடனே போகிறேன்'' என்று நான் சொன்னேன். அப்படிச் சொன்ன போது இந்தத் தலைமயிர் ஆபரணம் துணியில் முடிந்திருந்ததை அவிழ்த்து என்னிடம் தேவி தந்தாள். தந்ததும் நான் அதை என் தலையில் வைத்து பூஜித்து பத்திரம் செய்து கொண்டு திரும்பிச் செல்லப் புறப்பட்டேன். அப்போது அவள் ''ஹனுமானே! ராமலக்ஷ்மண சிம்மங்களுக்கும் அரசன் சுக்ரீவனுக்கும் அவர் மந்திரிகளுக்கும் என் க்ஷேம சமாசாரத்தைச் சொல்லுவாய். என்னை ராமன் அடைவதற்குத் தகுந்த வழியை அவருக்குச் சொல்லுவாய். உன்னை நம்பினேன்! நீ க்ஷேமமாய்ப் போய்ச் சேருவாயாக. மங்களம்'' என்று சொல்லி ஆசீர்வதித்து அனுப்பினாள். பிரபுவே! துக்கப்பட வேண்டாம். காரியத்தில் மனம் செலுத்துவீராக. பிறகு, 'எப்படி இந்தக் கடலை ராம லக்ஷ்மணர்கள் தாண்டி வருவார்கள்? வானர சேனை எப்படி லங்கை வந்து சேரும்?' என்று சீதை சந்தேகப்பட்டுத் துயரப்பட்டாள். 'சந்தேகப்பட வேண்டாம். ராம லக்ஷ்மணர்களை நானே தூக்கிக் கடலைத் தாண்டி வர முடியும்; இவ்விடம் வில்லும் கையுமாக அவர்கள் இறங்குவார்கள். நீர் நிச்சயமாக இருக்கலாம்' என்று நான் தேவியைத் தேற்றினேன். அவளும் மனச்சாந்தியடைந்தாள்'' என்றான்.

(தொடரும்)


---

## போட்டிக்கு ரெடியா?

பரிசு ரூ. 250/-

# 'பிறந்த நாள் சிந்தனை'

கீழேயுள்ள சக்கரத்தின் கம்பி இடுக்கு ஒவ்வொன்றிலும் ஓர் எழுத்தை எழுதி, ஒரு முழு வாக்கியம் பெறலாம். ஒவ்வொரு பிறந்த நாளன்றும் நாம் நினைக்கும் ஒரு விஷயம் அந்த வாக்கியத்துள் அடக்கம். வாக்கியத்தின் முதல் மற்றும் கடைசி எழுத்துக்கள் தரப்பட்டுள்ளன. வரையப்பட்டுள்ள படத்துக்கும் வாக்கியத்துக்கும் சம்பந்தம் இருக்கிறது!




வாக்கியத்தைப் பூர்த்தி செய்து, கூப்பனில் உங்கள் பெயர் விலாசம் எழுதி 27-4-94க்கு முன் எங்களுக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். உறை மீது 'பிறந்தநாள் சிந்தனை' எனத் தவறாமல் குறிப்பிடவும்.

சரியான விடை எழுதுபவருக்கு ரூ. 250/- பரிசு. பலர் சரியான விடை எழுதினால் குலுக்கல் முறையில் பத்து பேருக்குப் பகிர்ந்தளிக்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

என் பெயர் : ..........................................................

விலாசம் : ..........................................................

..........................................................

# தாவண்கெரே அளிக்கும்

# ஃபேஷன் பேப்ரிக்ஸ்



உங்கள் குடும்பத்திற்குத் தேவையான இரகங்கள் • பள்ளிச் சீருடைகள்

• சூட்டிங்குகள் • ஷர்ட்டிங்குகள்

• வேட்டிகள் • படுக்கை விரிப்புகள்

• துவாலைகள் - பருத்தி மற்றும்

பாலியெஸ்டர் பிளெண்ட்களில்

## தாவண்கெரே

— என்றும்

எப்பொழுதுக்காகவே!

தாவண்கெரே காட்டன் மில்ஸ்,
தாவண்கெரே - 577 002
(A division of the Morarjee Goculdas Spinning & Weaving Company Ltd., Bombay)

---

# மேனியழகிற்கு மகுடம் சூட்டும் தலைமுடி _வளர்ச்சிக்கு 'ஹேர்ரிச்'...






புத்தம் புது ஆயுர்வேத கேச தைலம்; 'ஹேர்ரிச்'



ஆரோக்கியமான, நீளமான, அடர்த்தியான தலைமுடியின் தனிப் பண்புப்பு!!!



தலைமுடி உதிராமல் இருக்கவும்; அகால நரை, பொடுகு வழுக்கையைத் தவிர்க்கவும் உதவும்!

Manufactured by
CAPRO LABS
1109 S H Layout
Kavali Byrasandra
Bangalore 560 032

கிடைக்குமிடங்கள் :

• திருவாசகம் பார்மசி டிரேடர்ஸ், சேலம் - 67993, • சிந்தாமணி ஏஜென்ஸீஸ், கோவை புத்தூர் - 43958. • பாரதி எண்டர்பிரைசஸ், தஞ்சாவூர் 22668. • மீனா மெடிகல் ஏஜென்ஸீஸ், திருச்சி 26083. • கற்பகம் ஏஜென்ஸீஸ், தஞ்சாவூர் 22207. • எஸ். வி. எஸ். ஏஜென்ஸீஸ், சென்னை - 71057. • சாமந்த மெடிகல் சப்ளைஸ், கோவைபுதூர் - 32006. • கிரே மெடிகல் பார்மசி, விழுப்புரம் - 2600. • கவிதா ஏஜென்ஸீஸ், திருவாரூர். • கல்யாணி ஏஜென்ஸீஸ், திருநெல்வேலி, 3038. • ஆனந்த் டிரக்ஸ், ஈரோடு, 76590. • தனலக்ஷ்மி அண்ட் கோ, மதுரை. • அபிராமி மெடிகல்ஸ், வேலூர். • ஸ்ரீ பாலாஜி ஏஜென்ஸீஸ், விழுப்புரம். • நடராஜா பார்மஸி, பாண்டிச்சேரி. • சக்தி முருகன் ஏஜென்ஸீஸ், கடலூர். • விஜயலக்ஷ்மி அண்ட் கோ., பாண்டிச்சேரி, 35170. • ஷபா ஏஜென்ஸி, மயிலாப்பூர், சென்னை. • கிளோப் ஏஜென்ஸி, திருவாரூர். • ஜெயந்தி ஏஜென்ஸீஸ், மதுரை. • கிருஷ்ணா அண்ட் கோ., திருநெல்வேலி, 36138. • மீனாக்ஷி பார்மசூடிகல்ஸ், புதுக்கோட்டை...




# ஜாலிக்கு ஸ்பெஷல்!

வழங்குவோர்: நிருபர்கள்

●● பங்காரப்பாவின் கர்நாடக காங்கிரஸ் முதல் மாநாடு, பெருங் கூட்டத்தைக் கண்டது என்பதில் யாருக்கும் சந்தேகமில்லை. எத்தனை லட்சம் மக்கள் என்பதில் தான் வாதப் பிரதிவாதம். 'ஜெ' ஸ்டைல் கட்-அவுட், மேடை அலங்காரம் எல்லாம் செய்து, லாரிலாரியாகக் கூட்டம் சேர்த்து அமர்க்களப்படுத்தி விட்டார். ''என்ன செலவு?'' என்று கேட்டபோது, ''முதலில் நரசிம்மராவ், ஒரு காங்கிரஸ் மாநாட்டுக்கு என்ன செலவு என்று கணக்குத் தரட்டும்; அப்புறம் நானும் தருகிறேன்'' என்று ஒரு போடு போட்டார்!

●● பங்காரப்பா கட்சியில் உள்ள நசீர் அகமத் சொல்கிற ஒரு ஜோக் இன்று மிகப் பிரபலமடைந்து விட்டது: ''பிரதமரின் மகன் ரங்காராவ் ஏன் இன்னும் கல்யாணம் ஆகாமல் இருக்கிறார் தெரியுமா? அவர் காலேஜில் படிக்கும் போது ஒரு பெண்ணைக் காதலித்தார். அப்பாவிடம் போய் அனுமதி கேட்டார். அப்பா, ''ஒரு முடிவு சொல்கிறேன்'' என்றார். இன்னமும் சொல்லப் போகிறார்! மகன் காத்திருக்கிறார்... காத்திருக்கிறார்....! காத்துக் கொண்டேயிருக்கிறார்!''

●● ''என்னுடைய செல்வாக்கு கண்டு நடக்கும் சதி'' என்று பங்காரப்பா வர்ணித்தாலும் , கம்ப்யூட்டர் ஊழல் குறித்து ஸி.பி.ஐ. விசாரணை முடித்து, பங்காரப்பாவும் அப்போதைய தலைமைச் செயலர் அலெக்சாண்டரும் குற்றவாளிகள்தாம் என அறிவித்துள்ளது. எந்த நேரமும் பங்காரப்பா கைதாகி வழக்கும் தொடரப்படலாம்- அரசியல் 'அட்ஜஸ்ட்மெண்ட்' ஏதும் நடந்தாலொழிய!

●● சமீபத்தில் கர்நாடகாவில் நடந்து முடிந்துள்ள கிராமப் பஞ்சாயத்துத் தேர்தல்களில் ஜனாதாதளம் வெற்றிகள் குவித்திருக்கிறது. உடனே, பொதுத் தேர்தலிலும் வென்று ஆட்சியைக் கைப்பற்றி விட்டது போல் பேச ஆரம்பித்து விட்டனர்! ''தேவே கௌடாதான் முதல்வர்'' என்று ஹெக்டே அறிவிக்க; ''அதை ஹெக்டே எப்படி அறிவிக்கலாம்? சட்ட மன்ற ஜனதா தள உறுப்பினர்கள் தானே தேர்ந்தெடுக்க வேண்டும்'' என்று முதல்வர் நாற்காலிக்கு ஆசைப்படும் பொம்மை கேட்க, ''நான் யாரிடமும் முதல்வர் பதவி கோரிக் கெஞ்சவில்லை'' என்று தேவே கௌடா பதிலுக்குச் சீற, கற்பனை கத்திலும் போட்டா போட்டி!

●● வங்க காங்கிரஸில் சோமேன் மித்ரா கோஷ்டியை ''தர்பூசணி காங்கிரஸ்'' என்று அழைக்கிறது மம்தா பானர்ஜி கோஷ்டி! தர்பூசணி வெளியே பச்சை; உள்ளே சிவப்பு. அவ்வாறே சோமேன் மித்ரா உள்ளூர கம்யூனிஸ்ட் ஆதரவாளர் என்பது மம்தாவின் குற்றச்சாட்டு! (இங்கே 'ஜெ காங்கிரஸ்'போல!) இரண்டு கோஷ்டிகளையும் இணைக்க முயற்சிகளும் நடந்த போதிலும் மம்தா பானர்ஜி ரொம்ப உஷாராயிருக்கிறார். அவருக்கு ஓரிடத்தில் தர்பூசணி துண்டங்கள் அளிக்கப்பட்டபோது, புகைப்படக்காரர்கள் தயாராக, இவரோ அதைத் தொடாமல் ஏமாற்றமளித்து விட்டார்! இவ்வாறே ஒரு பொதுக் கூட்டத்தில் ஜோதி பாசுவுக்கு கோ கோ கோலா வழங்கப்பட்டது. அங்கும் 'கிளிக்கர்'களுக்கு ஏமாற்றம்! ஆனால் இடது கம்யூனிஸ்ட் கட்சிப் பத்திரிகையான கணசக்தி, கோ கோ கோலா விளம்பரத்தை வெளியிடத் தயங்கவில்லை! ''பத்திரிகைப் பொருளாதாரம் வேறு; தேசப் பொருளாதாரம் பற்றிய பத்திரிகையின் கொள்கை வேறு'' என்று கூறிச் சமாளித்தது!

●● மேற்கு வங்கத்திலுள்ள முன்னாள் சமஸ்தானமாகிய கூச் பிகாரில் அரச குல தெய்வச் சிலையும் நகைகளும் களவு போய் விட்டன. திருடர்கள் சுங்கச் சாவடியில் சிக்கிக் கொண்டார்கள். ஆனால் சுங்க அதிகாரிகளுக்குச் சிலையின் மதிப்புத் தெரியவில்லை. நகைகளை எடுத்துக் கொண்டு சிலையுடன் போக திருடர்களை அனுமதித்து விட்டனர்! பின்னர், நகைகளை விற்க முற்பட்ட போது சுங்க அதிகாரிகளே கைதாயினர். கேவலத்திலும் கேவலம் என்ன வென்றால், சுங்க உயர் அதிகாரி ஒருவர், ''எங்கள் துறையைச் சேர்ந்தவர்கள் லஞ்சமாக நகையைப் பெற்றது உண்மைதான்; ஆனால் திருட்டில் நேரடியாகச் சம்பந்தப் படவில்லையே'' என்று சமாதானம் கூறியதுதான்!

பெங்களூரிலிருந்து : பொன்னாண்டஸ்
கல்கத்தாவிலிருந்து: சு.கிருஷ்ணமூர்த்தி

# வட்டமேஜை

## 'ஆண்மணி'கள் ஒத்துழைக்க வேண்டும்!

◆ 'முதல்வரின் மோதல் அரசியல்' கண்டேன். கச்சிதமாக இருந்தது. அரசியல் என்பது நேர்மை, நாணயம், ஒழுக்கம் என்பதெல்லாம் போய் இன்று சூதாட்டமாக ஆகி இருக்கிறது. கண்ணப்பன் காங்கிரஸை 'தேச பக்தியற்றது' என்று சாடுவது அரசியல் அநாகரிகத்தின் உச்சகட்டம். தவறான செய்தியை ஆதாரமில்லாமல் சட்டசபையில் பேசுவது அரசியல் காப்பு பிரமாணத்திற்கே இழுக்கு தேடுவதுடன், தாம் வகிக்கும் பொறுப்புக்கே களங்கம் கற்பிப்பதாகும்.

ஆவடி. — க.நடராசன்.

◆ கல்கி 10.4.94 இதழ் தமிழக பா.ஜ.க. கட்டுரை தொடர்பாக:

கட்டுப்பாடு, ஒழுக்கம் ஆகிய வற்றை ஆதார கோட்பாடுகளாகக் கொண்டுள்ள ஒரு கட்சியில், ஒழுங்கீனத்தைக் கண்டித்ததால் வரும் வெளிப்பாடே அந்த சென்லார் செய்யக் கூடக் கூச வைக்கும் பிட் நோட்டீசுகள். அத்தகைய நோட்டீசுக்குக் காரணமானவர்களை நாங்கள் அடையாளம் கண்டு பிடித்து விட்டோம். துரை, ஊரப் பாக்கத்தில் தாம்பரம் அருகில் கடை திறப்பதாக உள்ளார். வியாபாரத்தைக் கவனிக்க அவர் தம் இருப்பிடத்தையும் மாற்றி உள்ளார். ஊரப்பாக்கத்திலிருந்து தென் சென்னை மாவட்ட கட்சிப் பணி செய்ய இயலாது என்ற காரணத்தினால் தான் அவர் ராஜினாமா செய்தார். சங்கத்தை வெறுத்து, எல். கணேசனின் அட்டகாசம் தாளாமல் ஓடவில்லை. அவர் ரத்தத்தில் சங்கத்தின் ரத்தம்தான் ஓடுகிறது.

சென்னை-17, — எல்.ரங்கநாதன். தென்சென்னை மாவட்டப் பொருளாளர், பா.ஜ.க.

◆ கட்டுரையின் முதல் பாகத்தில் உண்மையை முழுமையாக எடுத்துச் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் பின் பகுதியில் தமிழகத்தில் பாரதிய ஜனதா கட்சி எல்.கணேசனால் வளர்ச்சி அடைந்தது என்பது முழு பூசணிக்காயைச் சோற்றில் மறைத்த கதையாகும். பா.ஜ.க. மிக வளர்ச்சி அடைந்த மாவட்டம், குமரி மாவட்டமாகும். இங்கேயே அது இப்போது தேடிப் பிடிக்க வேண்டிய கட்சி ஆனது எல்.கணேசனால்தான். தமிழ்நாட்டில் அம்மாவுக்கு ஜால்ரா போட்டுத் தேய்ந்து, மாய்ந்து கொண்டிருக்கிறது பா.ஜ.க.

கன்யாகுமரி, — ஆர்.கிருஷ்ணசுவாமி. முன்னாள் மாவட்டப் பொதுக் காரியதரிசி, பா.ஜ.க.

◆ அனைத்துக் கட்சிகளிலும் கோஷ்டி இருக்கும் பொழுது, தங்கள் கட்சி மட்டும் விதிவிலக்காக இருக்கக் கூடாது என்று நினைத்து செயல்படுகிறார்கள் போலிருக்கிறது, தமிழக பா.ஜ.க. வினர்!

மொரட்டுப்பாளையம், — க.நா.இராஜேஸ்வரன்.

◆ 'அவசரயுகத்தின் அதிவேக உணவு' கட்டுரை கண்டேன். வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு இது ஒரு வரப்பிரசாதம். பன், ரொட்டி, போன்றவற்றை ஏற்றுக் கொண்டால் இட்லி, தோசை, உப்புமா, மிளகாய்ப் பொடி , சட்னி , சாம்பார் தயாரிக்க வேண்டியதில்லை. பணிச் சுமையும் குறைவதால் விரைவில் காலை ஆகாரத்தை குடும்பத்தினருடன் முடித்துக் கொண்டு குறித்த நேரத்திற்குள் பணிபுரியும் அலுவலகத் திற்குச் செல்ல முடியும். ஆனால் காரசாரமாகச் சாப்பிட்டு பழகிய நாக்கு ருசியைப் படிப்படியாகத் தான் குறைக்க முடியும். 'ஆண்மணி'கள் ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

திருபுவனம், — ஆ.காந்திமதி.

◆ ஏழைப் பெண் சோலை மதியின் கதை நெகிழவைத்தது. அவரது சாதனை நிமிரவைத்தது. வரும் ஒலிம்பிக்கில் இவரின் கால்கள் இந்திய சரித்திரத்தைப் புதிதாக எழுதட்டும்.

திருவாரூர், — அமுதா தமிழ்நாடன்.

◆ சில மாதங்களுக்கு முன் விளையாட்டு வீராங்கனை அமுதா குறித்து விரிவான கட்டுரையை எழுதியிருந்தீர். கட்டுரை வெளியான சில நாட்களிலேயே பல சலுகைகளை அவருக்கு அரசு செய்தது. அதுபோல் இன்று வீராங்கனை சோலை மதி குறித்து தகவல் வெளியிட்டுள்ளீர். அவருக்கும் புதுவாழ்வு மலர வாசகர்கள் சார்பில் வாழ்த்துவோம்.

விசலூர், — ஜி.ஜி.கிருஷ்ணன்.

◆ 'ஷிண்ட்லர்ஸ் லிஸ்ட்' படத்தை சில நாடுகள் தடை செய்திருப்பதையும் கட்டுரையில் குறிப்பிட்டிருக்கலாம்.

தூத்துக்குடி. — என்.சம்பத்.

◆ உண்மை அன்பு, குற்றங்குறைகளைப் பொருட்படுத்தாது. அதேபோல் உண்மை நட்பும் குறைகளை நீக்கி குணங்களையே பாராட்டும் என்பதை அழகாக எடுத்துக் காட்டிய சிறு கதை கிருஷ்ணாவின் 'மேலும் சில மனிதர்கள்'.

திருப்பரங்குன்றம், — டி.கே.சுப்பிரமணியன்.

◆ 'ஒரு சென்சார் அதிகாரி கத்திரிக்கோல் தீட்டுகிறார்'- சத்யாவின் படைப்பு, ஒரு குலோப் ஜாமூனை எப்படிச் சொல்லாம் ருசித்து சாப்பிட முடியுமோ, அப்படிச் சொல்லாம் ரசித்துப் படிக்க வைத்தது.

திருவெண்ணெய் நல்லூர், — வைத்யா.


பாரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் : வி. முரளி. பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : சீதா ரவி. நிர்வாக ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 525/-.

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka


பதிவு எண்: 26383 போன்: 583241

# கல்பதரு பெனிபிட் பண்டு லிமிடெட்

(கம்பெனிகள் சட்டப்படி பதிவு செய்து நிறுவப்பட்டது)
பதிவு அலுவலகம்: 134, ராசப்ப செட்டி தெரு,
(ஸ்ரீ கந்தகோட்டம் அருகில்) பார்க் டவுன், சென்னை-600 003.

**பிக்சட் டிபாசிட் திட்டம் மாத வட்டிக்கான காசோலைகள் முன் கூட்டியே வழங்கப்படும்**

| காலம் | 46 நாள் | 90 நாள் | 6 மாதம் | 1 ஆண்டு | 2 ஆண்டு | 3 ஆண்டு | 4 ஆண்டு | 5 ஆண்டு |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருட வட்டி வீதம் | 14% | 15% | 16% | 17.5% | 18.5% | 19% | 19.5% | 20% * |



**மகளிர் ஆண்டு திட்டம்**

**1994** சர்வதேச மகளிர் ஆண்டை முன்னிட்டு பெண்கள் பெயரில் செலுத்தப்படும் பிக்சட் டிபாசிட்டுகளுக்கு 1% அதிக வட்டி வழங்கப்படும். குறைந்த அளவு டிபாசிட் ரூ. 5000/- காலம்: 1 ஆண்டு



**அக்ஷயா டிபாசிட் திட்டம் 20%** *

குறைந்த அளவு ரூ. 10,000/- டிபாசிட் காலம் : 5 ஆண்டுகள் மாதவட்டிக்கான செக்குகள் முன் கூட்டியே கொடுக்கப்படும்.



**கல்பதரு மணிபேக் திட்டம்**

அ) பிரதி மாதம் ரூ.100/- வீதம் தொடர்ந்து 15 வருடம் செலுத்த வேண்டும்
முதல் 5ம் ஆண்டு முடிவில் நீங்கள் செலுத்திய ரூ. 6000/-ஐ பெறுவீர் !
2வது 5ம் ஆண்டு முடிவில் மீண்டும் ரூ.6000/-ஐ பெறுவீர் !
3வது 5ம் ஆண்டு முடிவில் ரூ.51,000/-ஐ பெறுவீர் !



**முதியவர் நலத்திட்டம்: வயோதிகர் விதவைகள் கல்வி மற்றும் அறக்கட்டளை பயன் பெறலாம்.**

| தொகை | காலம் | வட்டிவீதம் |
|---|---|---|
| ரூ. 10,000 | 12 மாதங்கள் | **20%** |
| ரூ. 10,000 கீழ் | | **19%** |

**சேமிப்பு டிபாசிட் திட்டம் - 10% வரை வட்டி வழங்கப்படும்**





**கடன்**

நகைகள் பேரில் கிராம் 1க்கு ரூ.300/- வழங்கப்படும் சென்னை மாநகரில் உள்ள சொத்துக்கள் பேரிலும் வழங்கப்படும்

வட்டி விகிதம் ரூ.1.95

அலுவலக நேரம் : காலை 8.30 முதல் 12.30 வரை மாலை 2.00முதல் 6.00வரை ஞாயிறு காலை 8.30 முதல் 12.30 வரை

பயன் பெற ரூ. 5/- செலுத்தி பங்குதாரர் ஆவீர். (செவ்வாய் விடுமுறை) பாதுகாப்பு • சேவை • சுபிட்சம்